# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume -10
Issue-1

ஜனவரி - 2017 (ரபியுல் ஆஹிர்-1438)

விலை ரூ. 20 /-



## மதுரையில் கைது செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்கள்

போலீஸ் குறிவைக்கும் இஸ்லாமிய இளைஞர்கள்



## 2016 கோவை கலவரம்

PUCL குழு அறிக்கை

## தேசத்தின் பெயரால் கல்வி காவி மயம்

بسم الله الرحمن الرحيم

“

அன்றியும்
உங்களுக்கிடையில்
ஒருவர் மற்றவரின்
பொருளை சாப்பிடாதீர்கள்.
மேலும் நீங்கள் அறிந்து
கொண்டே பிற மக்களின்
பொருள்களிலிருந்து
எந்த ஒரு பகுதியையும்,
அநியாயமாகத்
திண்பதற்காக
அதிகாரிகளிடம்
(இலஞ்சம் கொடுத்க)
நெருங்காதீர்கள்.
அல்குர்ஆன் 2 : 188

”


கீதா பிரஸ்ஸும்
இந்து இந்தியாவின் உருவாக்கமும் - 7

முஸ்லீம்களின் வீழ்ச்சியால்
உலகம் இழந்ததென்ன ? - 16

எது முதலில் ? - 20

மதுரையில் கைது செய்யப்பட்ட
அப்பாவி இளைஞர்கள் - 22

தேசத்தின் பெயரால் கல்வி காவி மயம் - 36

2016 கோவை கலவரம் - 38

மழைக் காலத்தில் பரவும்
தொற்று நோய்கள் - 49

நிர்வாக இயலின் தந்தை செர்ஷா சூரி - 54

மரணத்தின் பிடியில் மக்கள் - 57

கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய் - 64



ஜனவரி - 2017

# வைகறை வெளிச்சம்

ரபியுல் ஆஹிர்-1438

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 1500 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts.



VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

தலையங்கம்

# கறுப்புப் பணம் Vs இஸ்லாம்

ரூபாய் நோட்டுகள் 500, 1000 ஆகியன செல்லாது என்றொரு அறிவிப்பை நவம்பர் 8, 2016–ல் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். அன்று தொடங்கிய மரண ஓலங்கள் இன்னும் நின்றபாடில்லை.

அரசின் குளறுபடிக்குள் சிக்கிக்கொண்ட மக்கள் இவரது ஆட்சியில் மீதமிருக்கும் 2½ ஆண்டுகளை எப்படி நகர்த்துவது என நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள், ஏக்கத்துடன்.

கறுப்புப் பணத்தை ஒழிக்கவே நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பு எனக்கூப்பாடு போட்டார் மோடி.

அவரிடம் நாட்டின் பொருளாதார நிபுணர்கள், எல்லாப் பணமும் கறுப்புப் பணமல்ல ; எல்லாக் கறுப்பும் நல்ல பணமாக இருப்பதில்லை ; என எடுத்துக்கூறினார்கள், "All Cash is not in Black and All Black is not in cash"

கறுப்புப் பணம், தங்கக் கட்டிகள், வீட்டு மனைகள், தோட்டங்கள், தோப்புக்கள், உள் நாட்டில், வெளி நாட்டில், வணிக வளாகங்கள், ஹோட்டல்கள் என ஒய்யாரமாக வாழ்ந்துகொண்டிருக்கின்றன என்றும் அறிவுரை கூறினார்கள்.

ஆனால் நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள், என அடம்பிடிக்கின்றார், குஜராத் இனப்படுகொலை புகழ் மோடி. இப்போதும் தனது நவம்பர் அறிவிப்பிற்குப் பின் 130 பேரை கொன்றிருக்கின்றார்.

உயிரிழந்தவர்களுக்கு ஆறுதலோ, அனுதாபமோ, வார்த்தையால் கூட இல்லை. அத்தனை அழுத்தம் அவர் நெஞ்சில். கேட்டால், “நீண்ட காலத்தில் பயன்” எனப் பரப்புகின்றார். “ஐரோப்பாவில் 1920–30 களில் இப்படி ஒரு பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தினார்கள், அன்றைய ஆட்சியாளர்கள்.

அன்றைய பொருளாதார நிபுணர் "Johnmonit Kynes, ஜான்மேனாட் கின்ஸ், அன்றைய ஆட்சியாளர்களைச் சாடினார். அவருடைய விமர்சனத்தைத்தாங்கிட முடியாத ஆட்சியாளர்கள் அவரிடம் "It will yield benefits in the long run" நீண்ட நாட்களுக்குப் பின் பயனளிக்கும் என்றார்கள். அதற்கு ஜான்மோனாட் கீன்ஸ் நீண்ட நாட்களுக்குப் பின் நாமனைவரும் இறந்துவிடுவோம் எனக் கூறினார்கள். "In the long run we all will be dead" என்றார். இதுதான் இப்போது நம் நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றது.

இங்கே கறுப்புப் பணம் எப்படி உருவாகின்றது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

இன்றைய நாட்களில் மனிதர்களின் லட்சியமே பணம், சொத்துக் குவிப்பு என்றே அமைகின்றது. எப்படி சம்பாதிக்க வேண்டும்? என்றொரு நெறிமுறை யாருக்குமில்லை, மாறாக எப்படியேனும் பணத்தையும், பொருளையும் குவிக்க வேண்டும் என்ற வெறித்தனமே மேலோங்கி நிற்கின்றது. இதில் தில்லு முல்லுகளைச் செய்வது திறமை எனப் போற்றப்படுகிறது.

இப்படிச் சம்பாதித்தப் பணத்தை, சொத்துக்களாக மாற்றுகின்றார்கள். ரொக்கத்தை சுவிஸ் வங்கியில் போடுகின்றார்கள், தங்கள் பாத்ரூம் என்ற கழிவறைகள் முதல் அங்கிங் கெனாதபடி எங்கும் பணம் பதுக்கப்படுகின்றது. எல்லாவற்றையும் தாங்களே ஆண்டு, அனுபவிக்க வேண்டும் என்ற தாபத்தில் வாழுகின்றார்கள்.

இன்றைய உலகில் இஸ்லாத்தின் வழிகாட்டுதல்கள் அது விளம்பிய ஒழுக்க மாண்புகள், எல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டன. இதனால் மனிதனை மாண்பாளனாக மாற்றிட இருந்த ஒரே வழியும் அடைக்கப்பட்டுவிட்டது.

### இஸ்லாத்தின் வழிகாட்டுதல்கள்

மனிதன் இந்த உலகமே கதி என வாழ்ந்திடத் தலைப்பட்டு விடக்கூடாது. அவன் மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்திட வேண்டும். அந்த வாழ்க்கையில் அவன் வெற்றி பெற்றிட வேண்டும். அதற்காக அவன், இந்த உலக வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த வகையில் அவன் இதே வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதல்களை இறைவன் அமைத்துத் தந்தே இருக்கின்றான்.

இறைவன் வழிகாட்டாத வாழ்க்கை அசைவுகளே இல்லை என்ற அளவுக்கு மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டி இருக்கின்றான் இறைவன்.

மனிதன் இந்த உலகில் எப்படி சம்பாதிக்க வேண்டும், அதை எப்படிச் செலவு செய்திட வேண்டும் என்பதற்கும் இறைவன் வழிகாட்டி இருக்கின்றான். இறைவன் காட்டிய வழியில் சம்பாதிக்கும் பொருள் சேர்க்கும் சொத்துக்கள், இவையெல்லாம் இறைவனின் அருள்கொடை. இதை மனிதன் எந்த நிலையிலும் மறந்து விடக்கூடாது. இல்லை எல்லாம் என் சொந்த திறமையால் வந்தது என நினைத்தால் அந்தத் திறமையை உனக்குத்தந்தது அல்லாஹ் – இறைவன் என்பதை நினைவில் நிறுத்து. – உணர்வில் கொள்.

இறைவன் உன்னிடம் தந்த செல்வத்தை பணத்தை, பொருளை, உன் சொந்தங்களுக்கும், ஏழைகளுக்கும், இல்லாதவர்களுக்கும் வழங்கி வாழ்ந்திட வேண்டும். இறைவனை வணங்குவதும், வழங்கி வாழ்வதும், ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள்.

வழங்கி, வாழாத வாழ்க்கை புண்ணியமற்றது, வெற்று வாழ்க்கை, இறைவன் எச்சரிக்கின்றான்.

“புண்ணியம் என்பது உங்கள் முகங்களை கிழக்கு நோக்கியோ, மேற்கு நோக்கியோ திருப்பிக் கொள்வதில் இல்லை. புண்ணியம் என்பது அல்லாஹ்வின் மீதும், இறுதி தீர்ப்பு நாளின் மீதும், மலக்குகளின் மீதும், வேதத்தின் மீதும், நபிமார்கள் மீது – ஈமான் – (நம்பிக்கை) கொள்வது, தன் பொருளை இறைவனின் மீதுள்ள நேசத்தின் காரணமாக பந்துக்களுக்கும், அநாதைகளுக்கும், மிஸ்கீன்குளுக்கும், வழிப் போக்கர்களுக்கும், யாசிப்பவர்களுக்கும், அடிமைகளுக்கும், கடனாளிகள் போன்றவர்களின் மீட்பிற்காகவும் வழங்குதல். தொழுகையை முறையாகக் கடைப்பிடித்து, முறையாக ஜகாத் கொடுத்து வருதல், (இவையே புண்ணியமாகும்) இன்னும் தாம் வாக்களித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவோரும், (வறுமை, இழப்பு) போன்ற துன்பத்திலும், நோய், நொடிகள் போன்ற கஷ்டத்திலும், யுத்த காலத்திலும் உறுதியுடனும், பொறுமையுடனும் இருப்போருந்தான் நெறியாளர்கள். இன்னும் அவர்கள் முத்தகீன்கள் (இறைவனை அஞ்சி வாழ்பவர்கள்)” (அல்குர்ஆன் 2 : 177)

வழங்கி வாழாத வாழ்க்கை வரட்டு வாழ்க்கையே இப்படி வழங்கி வாழ்ந்திடப் பணிக்கும்போது, இறைவன் இந்த உலகில் ஓர் உன்னத பொருளாதாரக் கொள்கையைச் செயல்படுத்துகின்றான். வழங்கி வாழும் ஏற்பாட்டை ஏன் செய்தேன் என்பதை இறைவன் இப்படிக் கூறுகின்றான்.

“உலகிலுள்ள செல்வந்தர்களுக்குள்ளாலேயே செல்வம், சுற்றிக் கொண்டிருக்காமல் இருப்பதற்காக இவ்வாறு பங்கிட்டுக்கொடுக்கக் கட்டளை இடப்பட்டுள்ளது” – அல்குர்ஆன் 59:7.

இப்படிப் பங்கிட்டுத் தந்துவிட்டால் எங்களுக்குப் பொருளாதாரத்தில் வீழ்ச்சிகள் இடறுகள் வந்தால் என்ன செய்வது? என்ற கேள்விக்குப் பதிலாக இஸ்லாமிய ஆட்சியில் பொது நிதி கருவூலம் என்ற பைத்துல்மால், உதவிகளை கேட்காமலே, தங்கு தடையின்றி தந்து கொண்டிருக்கும். யாரும் தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றி கவலைப்பட வேண்டாம். இதில் “பைத்துல்மால்கள் பொருளாதார வீழ்ச்சிகளுக்கெதிரான நிரந்தர ஏற்பாடு.

இஃதன்னியல் ஜகாத் என்ற ஏழை வரி முஸ்லிம்கள் அவசியம் நிறைவேற்றிட வேண்டிய கடமை. இஃது ஒரு நிரந்தர பொருளாதார அரண். இஸ்லாமிய சமுதாய அமைப்பில்.

ஆதலால் அங்கே பதுக்கவும், பகற்கொள்ளை அடிக்கவும் மக்கள் விரும்ப மாட்டார்கள், வழங்கி வாழ்வதில் உவகைக் கொள்வார்கள். இதனால் எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலை இருந்தது. மனித மனங்கள் திறந்தே இருந்ததால் பூட்டுகளை உடைக்கவே வேலை இல்லை, கறுப்புப் பணமும் இல்லை.

இந்த முறை ஏட்டுச் சுரைக்காய்யாக இருந்ததில்லை. மாறாக பல நூறு ஆண்டுகளாக நாட்டு நடப்பாக நீடித்தது. இந்தக் கொள்கை யாம் இஸ்லாம் நாடாள வந்தால்தான் விடிவு. அதற்காக ஒய்வின்றி உழைப்போம்.

இன்ஷா அல்லாஹ்.

# வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், மு. குலாம் முஹம்மத் | ரூ. 25.00 |
| 8. | மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 | ரூ. 90.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163 | ரூ. 110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 | ரூ. 90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 21. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 22. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 23. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 24. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 | ரூ. 30.00 |
| 25. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 26. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 27. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 28. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | ரூ. 70.00 |
| 29. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 60.00 |
| 30. | இஸ்லாமும் பெண்களும் | ரூ. 70.00 |
| 31. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | ரூ. 70.00 |
| 32. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | ரூ. 30.00 |
| 33. | 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | ரூ. 20.00 |

**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

தொடர்ப்புக்கு : 8148129887

# கீதா பிரஸ்ஸும் இந்து இந்தியாவின் உருவாக்கமும்

மோடியின் நவ-தாராளவாத இந்துத்துவ அரசு நாட்டையே வாரிச் சுருட்டி பெருநிறுவன முதலாளிகளிடமும் பன்னாட்டு மூலதனத்திடமும் அடகு வைக்கும் வேலையை போர்க்கால அவசரத்தில் செய்து கொண்டிருக் கிறது. மக்கள் நிதானித்து எழுவதற்கு சிறு வாய்ப்பும் அளிக்காமல் சரமாரியாக அடுத்தடுத்து தாக்குதல் தொடுத்து நிலைகுலைய வைத்துக் கொண்டிருக்கிறது.

கறுப்புப் பண ஒழிப்பு, பொருளாதார வளர்ச்சி, ஊழலற்ற நிர்வாகம் போன்ற மோசடி யான முழக்கங்களின் கீழ் சாமான்ய மக்களின் எளிய சேமிப்புகளைக் கூட விடாமல் உறிஞ்சி, அம்பானி - அதானி - டாடா - பிர்லா - ஜிந்தால் போன்ற பகாசுரக் கொள்ளைக் கும்பலின் பாதங்களில் சமர்ப்பிக்கும் வெட்கங்கெட்ட தரகு வேலையை மிகுந்த திமிர்த்தனத்துடன் செய்து வருகிறது இவ்வரசு.

மோடியின் கார்பரேட் நேச, மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக நாட்டு மக்கள் கிளர்ந்து எழுவதற்கான எல்லா நியாயங்களும் கூடிவந்துள்ள நிலையில், மோடியை பின்னா லிருந்து இயக்கும் பார்ப்பன ஆர்.எஸ்.எஸ் கும்பல் தனது வழமையான வெறுப்பு அரசிய லையும் வேகம் தணியாமல் முன்னெடுத்துச் செல்கின்றது. மக்களின் கோபத்தை மடை மாற்று வதற்காகவும், அவர்கள் தமக்குள்ளேயே அடித் துக் கொண்டு சாகும்படி செய்வதற்காகவும்.

மக்களை சுரண்டிக் கொழுப்பது + அதை ஊழ்வினைப் பயன் என்று ஏற்கப் பழக்குவது + கற்பனை எதிரியை உருவகித்துக் காட்டி சொந்த கிரிமினல் முகத்தை மறைப்பது.

ஆரம்பம் முதலே அவர்களுக்குத் தவறாமல் பலன் ஈட்டிக் கொடுக்கும் வெற்றி ஃபார்முலா இதுதான்.

சரி, அவர்கள்தான் பொய்யையும் புரட்டையும் பரப்பி மக்களை பிரித்தாள முயல்கிறார்கள்; உண்மையான பிரச்சினைகளை விட்டு கவனத்தை திசைதிருப்புகிறார்கள் என்றால், மக்கள் ஏன் அதற்கு காது கொடுக்க வேண்டும்? புழுகு மூட்டைகளுடன் வரும் அவர்களின் முகத்திரையைக் கிழித்து, பிடரியில் அடித்து விரட்டாமல், அவர்களின் பிரச்சார பித்தலாட்டங்களுக்கு பழியாகும் நிலைக்கு பெருந்திரள் மக்கள் எப்படி வந்து சேர்கிறார்கள்?



### அக்ஷய முகுலும் அவரின் நூலும்

இக்கேள்விக்கான பதிலின் ஒரு பகுதி, நாம் அறிமுகம் செய்யவரும் நூலில் இருக்கிறது. 'கீதா பிரஸ்ஸும் இந்து இந்தியாவின் உருவாக்கமும்' என்ற முக்கியமான நூலை எழுதியுள்ள அக்ஷய முகுல் ஒரு பத்திரிக்கையாளர். பத்திரிக்கைத் துறையில் சிறப்பான பங்களிப்புகளுக்கென

ஆண்டுதோறும் வழங்கப்படும் புகழ்பெற்ற 'ராம்நாத் கோயங்கா விருது'க்கு இவ்வாண்டு அக்ஷய முகிலின் நூலும் தேர்வாகியிருந்தது. நவம்பர் 2-ந் தேதி (2016-11-02) வழங்கப்பட விருந்த அந்த விருதினை மோடியின் கரங்களி லிருந்து தம்மால் பெற முடியாது என்று மறுத்து விட்டார் முகுல். "மோடியுடன் ஒரே ஃபிரேமில் நிற்பது பற்றிய நினைவுடன் என்னால் வாழ முடியாது" என்று கூறி மோடியின் முகத்தில் அடர்த்தியான கரியைப் பூசி யிருக்கிறார்.

அக்ஷய முகுல் ஆய்வுக்கென எடுத்துக் கொண்ட 'கீதா பிரஸ்' பதிப்பகத்தின் வயது நூறை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஏறக்குறைய ஆர்.எஸ்.எஸ்ஸின் வயது. உத்திரபிரதேச மாநிலத்தில் கோரக்பூர் எனும் ஊரில் 1923-ம் ஆண்டு கீதா பிரஸ் துவங்கப்பட்டது. இதற்குப் பின்னாலிருந்த இரு மூளைகளும் - ஜெயதயால் கோயந்த்கா, ஹனுமன் பிரசாத் போதார் எனும்- இரு மார்வாடி வணிகர்களுடையது.

மேற்கத்திய நாகரித்தின் தாக்கத்தால் மார்வாடி - அகர்வால் சமுதாயம் 'சீரழிந்து' கொண்டிருப்பதை தடுக்கும் நோக்கத்திலும், சனாதன தர்மத்தையும் அதன் அறவிழுமியங் களையும் மீண்டும் வலுப்பெறச் செய்யும் நோக்கத்திலும் பார்ப்பன இந்து மத புனிதப் பிரதிகளை பெரும் எண்ணிக்கையில் அச்சிட்டுப் பரப்புவதற்கான ஒரு மதப் பிரசுர நிறுவன மாகவே இது ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால், 1926-ல் 'கல்யாண்' என்ற பெயரில் ஒரு மாத இதழைத் துவங்கியது முதலாகவே அந்நிறுவனம் வலதுசாரி இந்துத்துவ அரசியல் நியாயங்களை பரந்துபட்ட 'இந்துக்களிடம்' எடுத்துச் செல்லும் வாகனம் என்றவொரு கூடுதல் பரிமாணத்தையும் தனக்கு வரித்துக் கொண்டது. இப்பணியை அது ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலம் மிக வெற்றிகரமாக செய்து வந்திருக்கிறது.

கீதா பிரஸ் இது வரை பிரசுரம் செய்து விற்றுள்ள சனாதன இந்துமத நூற்பிரதிகளின் எண்ணிக்கை அபாரமானது. அது தனது வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள அதிகார பூர்வ கணக்கின்படி பார்த்தால்,

பகவத் கீதை: 11.4 கோடி பிரதிகள் ராம் சரித் மனாஸ், துளசி தாசரின் ஆக்கங்கள்: 9.2 கோடி பிரதிகள், புராணங்கள், உபநிடதங்கள், ஏனைய பண்டைய புனிதப் பிரதிகள்: 2.2 கோடி பிரதிகள், பெண்களுக்கும் சிறுவர்களுக்குமான குறுநூல் கள்: 10.5 கோடி பிரதிகள், பக்தி கதைகள், பஜனைப் பாடல்கள்: 12.4 கோடி பிரதிகள், ஏனையவை: 12.3 கோடி பிரதிகள்

என இதுவரை அது மொத்தம் 58 கோடி 25 இலட்சம் பிரதிகளை பிரசுரித்து 'இந்து' மக்களிடம் கொண்டு சேர்த்திருக்கிறது. அதன் பிரதான இயங்குபுலம் இந்தி பேசும் வட இந்திய மாநிலங்கள்தான். இந்தியிலும் சமஸ் கிருதத்திலும்தான் அது தனது பெரும்பாலான பிரசுரங்களை வெளியிட்டிருக்கிறது. அதே சமயம் குஜராத்தி, தெலுங்கு, ஒரியா?? ஆங்கிலம், வங்காளம், மராத்தி, தமிழ், கன்னடம், அஸ்ஸாமி, மலையாளம், நேப்பாளி, உருது, பஞ்சாபி போன்ற ஏனைய மொழிகளிலும் அது கணிசமான வெளியீடுகளை பதிப்பித்து மலிவு விலைகளில் விற்றிருக்கிறது. அது மட்டுமின்றி, இந்தி மொழி யில் அது வெளியிடும் 'கல்யாண்' இதழின் சந்தாதாரர்களது எண்ணிக்கை இன்றைய நிலவரப்படி 2 இலட்சம்; 'கல்யாண-கல்பதரு' என்ற ஆங்கில இதழின் சந்தாதாரர்கள் 1 இலட்சம். இவை மட்டுமின்றி, இன்றுவரை பலமுறை மறுபிரசுரம் செய்யப்படும் சிறப்பிதழ் களையும் துவக்கம் முதலே ஆண்டுதோறும் வெளியிட்டு வந்துள்ளது.

இவ்வளவையும் பிரசுரம் செய்பவர்கள் நான்கு வேதங்களை மட்டும் பிரசுரம் செய்வ தில்லை; ஏன், தமது எழுத்துக்களில் நேரடியாக மேற்கோள் கூட காட்டுவதில்லை. காரணம் கேட்டால் நழுவுகிறார்கள். கீழ்நிலைச் சாதியினர் வேத சுலோகங்களை கேட்கத் துணிந்தால், அவர்களின் காதுகளில் பழுக்கக் காய்ச்சிய ஈயத்தை ஊற்றுவதுதான் அதற்குரிய தண்டனை என்றல்லவா இவர்களின் வர்ணாஸ்ரம 'தர்மம்' போதிக்கிறது. பிறகு எப்படி அதனைச் செய்வார்கள்?!

சரி, கீதா பிரஸ்ஸின் வெற்றிச் சரிதையை யிட்டு நாம் துணுக்குற வேண்டுமா? அவர்கள் தங்கள் மதத்துக்குச் செய்யும் 'ஆன்மீக' சேவையை பார்த்து வயிற்றெரிச்சல் படுவதாகுமா இது? நிச்சயம் இல்லை. நாட்டை 'இந்து

இந்தியாவாக' ஆக்கி, தம்முடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சித்து வரும் பார்ப்பன ஆர்.எஸ்.எஸ். வகையறாக்களின் அச்சு அவதாரக் கதைதான் கீதா பிரஸ்ஸுடைய கதை.

கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக இந்து மஹா சபை, விஷ்வ இந்து பரிஷத், ஆர்.எஸ். எஸ்., ஜன சங்கம், பா.ஜ.க., எனப் பலவண்ண முகமூடிகள் அணிந்து அணிவகுத்து வந்து இந்துத்துவ சக்திகள் செய்துவரும் வெறுப்புப் பிரச்சாரங்கள் அனைத்தையும் படித்த நடுத்தர 'இந்து' மக்களின் வீடுகள் வரை கொண்டு சேர்த்து, நாடு முழுக்க ஒரு 'இந்து மனசாட்சியை' வெற்றிகரமாக கட்டியெழுப்பியது பற்றிய கதை இந்நூலில் விரிகிறது.

'தேசத்தின் கூட்டு மனசாட்சியை' திருப்தி படுத்துவதற்கென்று அப்பாவிகளை தூக்கில் போட வேண்டுமென நீதிமன்றத் தீர்ப்புகள் எழுதப்படும் சூழலில், அந்த 'மனசாட்சி' கட்ட மைக்கப்பட்ட விதத்தை அறிந்து கொள்வது நமக்குத் தொடர்பில்லாத விவகாரத்தில் மூக்கை நுழைப்பதாகி விடுமா?

அக்ஷய முகுல் தனது ஐந்தாண்டு உழைப்பு மற்றும் சளைக்காத ஆய்வின் தொடர்ச்சியாக எழுதியுள்ள இந்நூலில் கீதா பிரஸ்ஸின் கதையை விரிவாகவும், சுவாரஸ்யமாகவும் பதிவு செய்திருக்கிறார். எண்ணிக்கையில் மிகச் சிறுபான்மையான பார்ப்பன-பனியாக் கூட்டம் பெருந்திரளான சூத்திர, அவர்ண மக்களை நயவஞ்சகமாக 'இந்து' எனும் ஒற்றை அடை யாளத்திற்குள் அடைத்து, போலியான பெரும் பான்மையை உருவாக்கி, முஸ்லிம்களை எதிரி களாகக் காட்டி, 'இந்து மனசாட்சி' என்ற ஒன்றை செயற்கையாகக் கட்டியமைத்து, நாட்டின் மீதான தனது மேலாதிக்கத்தை எவ்வாறு சரிந்து விடாமல் பாதுகாத்தும் வளர்த்தும் வந்திருக் கிறது எனும் வரலாற்றை, கீதா பிரஸ் எனும் சாளரத்தின் வழியாக படம்பிடித்துக் காட்டி யிருக்கிறார் அக்ஷய முகுல். இதற்காக அவரைப் பாராட்டியாக வேண்டும்.

பக்தி இலக்கியங்களை அச்சிட்டுப் பரப்பு வதற்கும், பார்ப்பன மேலாதிக்கத்தை நிறுவுவதற் கும் ஏன் வலிந்து முடிச்சுப் போடுகிறீர்கள் என்று கேட்பீர்கள் என்றால், நீங்கள் கண்டிப்பாக முகுலின் நூலை வாசிக்க வேண்டும்.

பிரிட்டிஷ் காலனியத்தின் கீழ் மார்வாடி பனியா சமுதாயம் வணிகத்தில் வெற்றிகரமாகத் திகழ்ந்தாலும் கூட சாதி அடுக்குமுறையிலும், சமூக அந்தஸ்திலும் போதிய அங்கீகாரம் பெற முடியாததை எண்ணி வருந்தி வந்தது. பிறகு படிப்படியாக மேலேறி, 'பார்ப்பனர்-ஷத்திரியர்' என்றிருந்த உயர் அடுக்கினை 'பார்ப்பனர்-வைசியர்' என எப்படி மாற்றியமைத்தது என்பதை முகுல் நூலின் முன்னுரையில் தொட்டுக் காட்டுகிறார்.

சனாதன இந்து தர்மத்தை பாதுகாக்கும் முயற்சிகளுக்கு மிகத் தாராளமாக செலவளிப் பதன் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக தாம் விரும்பிய சமூக அந்தஸ்தை அது சம்பாதித்துக் கொண்டது பற்றிய சித்திரம் இதிலிருந்து தெளிவாகின்றது. இப்பின்னணியில் வைத்தே கீதா பிரஸ்ஸின் உருவாக்கத்தையும் வளர்ச்சி யையும் நாம் பார்க்க வேண்டும். இன்று நாட்டை சூறையாடி வரும் 'பார்ப்பன-கார்பரேட்' நச்சுக் கூட்டணியின் வேர் எங்கிருக்கிறது என்பதை புரிந்து கொள்வதற்கான சூட்சுமம் இதிலிருக் கிறது.

### ஜெயதயால் கோயந்த்கா

கீதா பிரஸ்ஸை நிறுவியது ஜெயதால் கோயந்த்கா என்ற மார்வாடி வணிகர். சிலகாலம் கழித்து ஹனுமன் பிரசாத் போதார் என்ற மற்றொரு மார்வாடி வணிகர் அவருடன் வந்து இணைகிறார். அவர் பிரம்மாண்டமானதொரு இந்துத்துவ வலையமைப்பையும், அச்சு சாம்ராஜ் யத்தையும் எப்படி உருவாக்கினார்? இந்தியாவின் முக்கிய ஆளுமைகள் அனைவரையும் மிகவும் நைச்சியமாக தனது சட்டகத்திற்குள் பொருத்தி, இந்து தேசியத்தின் நோக்கங்களை எவ்வாறு சாதித்துக் கொண்டார்? என்பதன் மீதே முகுலின் நூல் பெருமளவு கவனத்தை குவித்திருக்கிறது. கீதா பிரஸ்ஸின் செல்வாக்குப் புலத்துக்கு வெளியே அதிகம் அறியப்படாத ஹனுமன் பிரசாத் போதாரை, அக்ஷய முகுல் 'இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் இந்து மிஷனரி' என்று அடைமொழியிட்டு அழைப்பது ஏன் என்பது நூலை வாசித்து முடிக்கையில் துலக்கமாகி விடுகிறது.

பார்ப்பன பயங்கரவாதிகளால் உருவாக்கப் பட்டு, இன்று நாட்டில் கொழுந்து விட்டெரியும்

எல்லாப் பிரச்சினைகளிலும் கீதா பிரஸ், ஹனுமன் போதார் ஆகியோரின் சுவடு வலுவாகப் பதிந்திருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. இந்தி-இந்து-இந்துஸ்தான், வர்ணாஸ்ரம அமைப்பு, பசுப் பாதுகாப்பு, ராம ஜென்ம பூமி, கிருஷ்ண ஜென்ம பூமி, இந்தியாவில் முஸ்லிம்களின் அந்தஸ்து, கர் வாப்ஸி (தாய் மதம் திரும்பல்) என நாட்டின் பாதுகாப்பையும் சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தையும் அச்சுறுத்தி வரும் எல்லாப் பிரச்சினைகளிலும் கீதா பிரஸ் 'சங்கப் பரிவாரத்தின் காலாட்படை'யாகவே செயல்பட்டு வந்திருப்பதை, இதே பெயரில் அமைந்த ஒரு அத்தியாத்தில் நூலாசிரியர் மிக நுணுக்கமாக பதிவு செய்திருக்கிறார்.

### ஹனுமன் பிரசாத் போதார்

அயோத்தியிலுள்ள பாபரி பள்ளிவாசலினுள் *1949* டிசம்பர் மாதம் *22*-ம் தேதி இரவில் திடுமென முளைத்த ராமர் சிலை விவகாரம் தொடர்பாக பிரபல இந்தி பத்திரிக்கையாளரும் ஆர்.எஸ்.எஸ்.காரருமான ராம் பகதூர் ராய், ஆர்.எஸ்.எஸ். தலைவர் நானாஜி தேஷ்முக் தன்னிடம் கூறியதாக 'அதிர்ச்சியூட்டும்' உண்மை ஒன்றை சமீபத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். அதாவது, அந்தச் சிலையை கள்ளத்தனமாக சுவரேறிக் குதித்து பள்ளிவாசலுக்குள் கொண்டு போய் வைப்பதற்கு முன்பாக சரயூ நதியில் அதனை புனித நீராட்டியிருக்கிறது நம்முடைய இந்து மஹா சபை கும்பல். அந்த புண்ணிய காரியத்துக்கு தலைமையேற்று நடத்திக் கொடுத்தது வேறு யாருமல்ல - கீதா பிரஸ்ஸின் உயர்திரு ஹனுமான் பிரசாத் போதார் அவர்கள்தான்.

சனாதன தர்மம் பேசும் இந்துத்துவ கும்பல் கொஞ்சம் கூட குற்றவுணர்ச்சி இல்லாமல் இக்கயமைத்தனத்தை அரங்கேற்றிவிட்டு, பள்ளிவாசல் இருந்த இடத்தில் கோயில் கட்டுவது 'ஒட்டு மொத்த இந்துக்களின் விருப்பம்' என்று சகிக்க முடியாத சுரத்தில் பல்லவி பாடுகின்றது. அந்த இரவில் நடந்தது என்ன, அதன் பின்னணி என்ன என்பது பற்றி கிருஷ்ணா ஜா மற்றும் திரேந்திர கே. ஜா எழுதியுள்ள ஒரு நூல் இவர்களின் அழுகுணி ஆட்டத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.


('அயோத்தி: இருண்ட இரவு, பாபர் மசூதிக்குள் இராமன் தோன்றிய வரலாறு' (ஆங்.); தமிழில் இதனை விடியல் பதிப்பகம் வெளியிட்டுள்ளது). பாபரி பள்ளிவாசல் பிரச்சினை பற்றி கரிசனை கொள்ளும் அனைவரும் கண்டிப்பாக வாசிக்க வேண்டிய நூல்.

திருட்டுத்தனத்தை செய்துவிட்டு அப்பாவி போல், 'சுயம்புவாகத் தோன்றிய ராமர் சிலையை அகற்ற முனையக் கூடாது' என்பதை வலியுறுத்தி நாட்டின் 'பிரபலங்களுக்கு' கடிதம் எழுதுவதில் மும்முரமாகிவிட்டார் நம் சனாதன ஒழுக்க சீலர், போதார். 'அவ்வாறு அகற்றிவிடும் பட்சத்தில், முஸ்லிம்கள் ஆக்கிரமித்துள்ள கோயில்களை மீட்பது சாத்தியமில்லாமல் போய்விடும்' என்ற பதைபதைப்பு வேறு அவருக்கு. இக்கயவர்கள் அன்று கொளுத்திப்போட்ட நெருப்பு, இன்றும் நாட்டை எரித்துப் பொசுக்கிக் கொண்டிருப்பதை யாரும் மறுக்க முடியுமா? இந்த அழகில் 'இந்துக்களுக்கு' ஒழுக்கப் பாடம் எடுப்பதற்காக இவர்கள் பதிப்பகம் நடத்துகிறார்களாம்.

இவர்களின் லட்சணத்தை நாட்டு மக்களிடம் வீச்சான பிரச்சாரங்களின் மூலம் எடுத்துச் சென்று, இந்துத்துவ கிரிமினல்களின் முகத்திரையை கிழித்தெறியத் துணிவில்லாமல், 'விட்டுக் கொடுத்துவிட்டால் எல்லாம் சரியாகி விடுமே' என்று புழுவென நெளிகிறார்கள் சில 'அறிவுஜீவிகள்'. நியாயத்துக்காகப் போராடும்படி மத-மொழி-இன வேறுபாடின்றி பரந்துபட்ட அளவில் வெகுமக்களை அணிதிரட்டுவதில்தான் உண்மையான சமூக நல்லிணக்கம் பிறக்க முடியுமே ஒழிய!! சமூக விரோதிகளின் கால்களில் விழுந்து, விட்டுவிடச் சொல்லி கெஞ்சுவதால் அல்ல.

கீதா பிரஸ்ஸின் பின்னணி, தொடர்புகள், கூட்டாளிகள், ஆசிரியக் குழு நிலைப்பாடுகள் ஆகியவற்றை ஆய்வுக்கு உட்படுத்துவதன் ஊடாக அக்ஷய முகுல் இந்த வரலாற்று ஆய்வு நூலை, இந்துத்துவ அரசியலில் பங்காற்றும் சமூக, கலாச்சார, பொருளாதார, தனிமனித சக்திகள் பற்றிய நுட்பமான ஆய்வு நூலாக உருவாக்கியிருக்கிறார். பனியா மூலதனத்தால் முட்டுக் கொடுக்கப்படும் பார்ப்பன மேலாதிக்க செயற்திட்டத்துக்கு துலக்கமானவொரு எடுத்துக்காட்டுதான் கீதா பிரஸ்ஸின் பிறப்பும்

வளர்ச்சியும். இச்செயற்றிட்டத்தில் டால்மி யாக்கள், திவேதிகள், கோயங்காக்கள், குப்தாக்கள், பிர்லாக்கள், ஜெயின்கள், சதுர்வேதிகள், முகர்ஜிக்கள் என ஒவ்வொருவரும் அவரவர்க்கு விதிக்கப்பட்ட பாத்திரத்தை எப்படி கனகச்சிதமாக நிறைவேற்றுகிறார்கள் என்பது படம் பிடித்துக் காட்டப்படுகிறது.




கல்யாண் மற்றும் கல்யாண - கல்பதரு இதழ்களுக்காக கட்டுரைகள் எழுதாத அன்றைய முக்கிய ஆளுமைகள் எவருமில்லை என்று சொல்லுமளவு மிகப் பிரம்மாண்டமானதொரு வலையமைப்பை போதார் கட்டியெழுப்பினார். காந்தி, மதன் மோகன் மாளவியா, எஸ். சத்தியமூர்த்தி, இராஜாஜி, எஸ். இராதாகிருஷ்ணன், பட்டாபி சீத்தாராமையா, சம்பூராணந்த், கைலாஷ்நாத் கட்ஜூ, புருஷோத்தம்தாஸ் தாக்கூர்தாஸ், ரபீந்திரநாத் தாகூர், எம்.எஸ். கோல்வால்கர், வீர் சாவர்க்கர், லால்பஹதூர் சாஸ்திரி, டாக்டர் ராஜேந்திரபிரசாத், சியாமா பிரசாத் முகர்ஜி, ஸ்வாமி கர்பத்ரி மஹராஜ், பிரபுதத் பட்டாச்சார்ஜி, அன்னிபெசன்ட், வினோபா பாவே, காகா கலேல்கர், ஷிதிமோகன் சென் என்று முடிவில்லாமல் நீளும் ஒரு பட்டியலையும் அவர்கள் ஒவ்வொருவரின் பங்களிப்புகள் பற்றிய அறிமுகத்தையும் தருவதற்காக ஐம்பதுக்கும் அதிகமான பக்கங்களைக் கொண்ட தனியொரு அத்தியாயத்தையே ஒதுக்கியிருக்கிறார் முகுல். காந்திக்கும் கீதா பிரஸ்ஸுக்கும் நடுவே நிலவிய நிலையான -அதேவேளை சிக்கலான- உறவு பற்றி நூல் தரும் தரவுகள், ஆர்.எஸ்.எஸ்ஸுக்கும் காந்திக்கும் நடுவில் நிலவிய முரணை விளங்கிக் கொள்வதை எளிதாக்குகின்றன.

கீதா பிரஸ்ஸின் இதழ்களுக்காக கட்டுரைகள் எழுதிய அனைவரும் அதன் இந்துத்துவ நிகழ்ச்சி நிரலுடன் கருத்துடன்பாடு கொண்டவர்கள் என்று சொல்லிவிட முடியாது. எனினும், கீதா பிரஸ்ஸின் திசைவழி சனாதன தர்மத்தை நிலைநிறுத்துகின்ற, பார்ப்பன மேலாதிக்கத்தையும் அதன் குறியீடுகளையும் வலுப்படுத்துகின்ற தடத்திலேயே திடமாக நடைபோட்டு வந்துள்ளது என்பதே இங்கு கவனிக்க வேண்டியது. போதார் இதனை மிகவும் சாணக்கியத்துடனும், விடாப்பிடியான உழைப்பின் மூலமும் சாதித்த நிகழ்ச்சித் தொடரை இந்நூல் வழியாக அறிந்து கொள்ள முடிகிற அதே வேளை, பார்ப்பன இந்து ராஷ்டிரத்துக்கான விதைகள் தூவப்பட்ட விதத்தையும் நம்மால் விரிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

வர்ணாஸ்ரம அமைப்பை எதிர்த்து ஓயாது கலகக்குரல் எழுப்பிய அம்பேத்கர், 'இந்து சட்ட மசோதாவை' நிறைவேற்றிய நேரு ஆகிய இருவர் மட்டும்தான் கீதா பிரஸ்ஸின் இதழ்களுக்காக ஒருபோதும் கட்டுரைகள் எழுதியதில்லை என்ற விடயம் நமக்கு ஆச்சர்யத்தை தரவில்லை. இவர்கள் இருவரையும் கீதா பிரஸ் கங்கணம் கட்டிக் கொண்டு எதிர்த்தது. வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் அவர்களுக்கெதிராக அவதூறையும் நஞ்சையும் கக்கியது.

கீதா பிரஸ் வெளியிட்ட நூல்கள், இதழ்களை மட்டுமின்றி அது ஆண்டுதோறும் வெளியிட்டு வந்துள்ள சிறப்பிதழ்களையும் முகுல் விரிவாக பகுப்பாய்வுக்கு உட்படுத்தியுள்ளார். இன்றைய இந்துத்துவ செயற்திட்டத்தை அவை எப்படி காலந்தோறும் வலுப்படுத்தி வந்துள்ளன என்பதை சிறப்பாக படம்பிடித்துக் காட்டுகிறார். மனாஸ் ஆங்க் (சிந்தனை), கௌ ஆங்க் (பசு), நாரி ஆங்க் (பெண்கள்), இந்து சன்ஸ்கிரிதி ஆங்க் (இந்துக் கலாச்சாரம்), பாலக் ஆங்க் (சிறுவர்), சிக்ஷா ஆங்க் (கல்வி), பக்தி ஆங்க் (பக்தி), உபாசனா ஆங்க் (வழிபாடு), தர்மா ஆங்க் (மதம்), பர்லோக் ஆவ்ர் புனர்ஜன்மா ஆங்க் (பரலோகமும் புனர்ஜென்மமும்), சதச்சார் ஆங்க் (நல்லொழுக்கம்), மாளவியா ஆங்க் (மதன் மோகன் மாளவியா) என அவற்றின் பட்டியல் நீளுகின்றது. சனாதன பக்தியோடு கலந்து பார்ப்பன மேலாதிக்க அரசியலை மக்களின் மனங்

களில் திணிப்பதில் இவை ஆற்றிய பங்கு குறைவானதல்ல என்பது பற்றிய நிறைவானதொரு சித்திரம் முகுலின் பகுப்பாய்வை வாசிக்கையில் நம் மனங்களில் விரிகின்றது.

இந்துத்துவ முகாமை பிரதிநிதித்துவம் செய்யும் கீதா பிரஸ், 'இந்துக்கள்' அனைவரையும் ஓர் குடையின் கீழ் ஒருங்கிணைக்க வேண்டுமென்று தொடர்ந்து முழங்கி வருகின்றது. ஆனால், அது அனைவருக்கும் சுயமரியாதையுடன் கூடிய சம இடத்தை உறுதிசெய்யும் அமைப்பிலானவோர் ஒருங்கிணைவு அல்ல. மாறாக, வர்ணாஸ்ரம சாதிப் படிநிலையமைப்பில் பார்ப்பன-பனியா கூட்டணி ஒதுக்கித் தரும் இடத்தை, அது போட்டுத் தரும் நிபந்தனைகளின் பேரில், மற்றெல்லோரும் தாழ்பணிந்து ஏற்றுக்கொள்வதையே அது வலியுறுத்துகிறது.

சுதந்திர இந்தியாவுக்கென போதார் முன்வைத்த திட்டவரைவில் இடம்பெற்ற சில 'சமூக நல்லிணக்க கருத்துக்கள்' பின்வருமாறு:

"இராணுவத்தில் இந்துக்கள் மட்டுமே சேர்க்கப்பட வேண்டும்", "உயர் பதவிகள் எதிலும் முஸ்லிம்கள் நியமிக்கப்படக் கூடாது", "அரசுக் கொள்கை என்ற அளவிலேயே பசுக் கொலை முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும்", "காவிக் கொடியே தேசியக் கொடியாக அறிவிக்கப்பட வேண்டும்", "தேவனகிரி வரிவடிவம் கொண்ட கலப்பற்ற இந்தி மொழியே தேசிய மொழியாக ஆக்கப்பட வேண்டும்", "இந்துக் கலாச்சாரத்தின் அடிப்படையில் ஒருங்கிணைக்கப்படும் கலப்பற்ற இந்து தேசமாகவே இந்தியா இருக்க வேண்டும்",...

கீதா பிரஸ் பிரதிநிதித்துவப் படுத்தும் இந்து ராஷ்டிரத்தில் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இலட்சிய வாழ்வு பற்றி அது கூறுவதைக் கேட்கும் எவருக்கும் ஆத்திரம் பொத்துக் கொண்டு வருவதை தவிர்க்க முடியாது. கீதா பிரஸ் இந்துப் பெண்களுக்காக பரிந்துரைக்கும் 'உன்னத ஒழுக்க விழுமியங்கள்' பற்றி என்னுடன் வேலை செய்யும் வட இந்தியப் பெண்ணிடம் சொன்ன போது, "அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று சொல்லுங்கள்; தேடிப் போய் செருப்பாலடித்து விட்டு வருகிறேன்" என்று கொதித்தார்.

உதாரணத்திற்கு, மரணமடைந்து விட்ட கணவனோடு சேர்த்து மனைவியைக் கொளுத்தும் 'சதி' (உடன்கட்டை ஏறுதல்) எனும் சனாதன தர்ம 'பண்பாட்டை' கூட அது வெட்கமின்றி இன்றுவரை உயர்த்திப் பிடிக்கிறது. கல்யாண் இதழின் தற்போதைய ஆசிரியர் ராதேஷ்யாம் கேம்கா, சதி எனும் சம்பிரதாயத்தின் சிறப்புகளை விரிவாகப் பட்டியலிடுவது மட்டுமின்றி, பண்டைய காலங்களில் கணவனை இழந்த மிக இளம் பெண்கள் கூட மனமுவந்து தம்மை எரியூட்டிக் கொண்டார்கள் என்று பெருமிதம் பொங்கச் சொல்கிறார். 2011-ம் ஆண்டு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் சொல்வதைக் கேளுங்கள்:

"இந்தக் காலத்தில் அது (உடன்கட்டை ஏறுதல்) சாத்தியமில்லை. எனவே, விதவையானவர் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளதற்கு இணங்க ஒரு சந்நியாசியைப் போல் தனது எஞ்சிய வாழ்வை கழிக்க வேண்டும். விதவை மறுமணம் என்பது சாஸ்திரங்களில் அனுமதிக்கப்பட்ட ஒன்றல்ல. காரணம் என்னவென்றால், ஒரு பெண் தனது பூர்வ ஜென்ம பாவங்களின் காரணமாகவே விதவையாகிறார்.

பாவங்களே துன்பம், துயரம், கஷ்டத்திற்குக் காரணம். அவற்றை மகிழ்ச்சியுடன் சகித்துக் கொள்வதன் மூலம் மட்டுமே ஒருவரால் தனது பூர்வ ஜென்ம பாவங்களிலிருந்து விமோச்சனம் பெற முடியும். சாஸ்திரங்களின் தீர்ப்புகளுக்கு எதிராக ஒரு விதவை மறுமணம் செய்து கொள்வாரெனில், ஏற்கனவே செய்த பாவங்கள் கழிவதற்கு முன்பே புதிய பாவமொன்று அவளுடைய கணக்கில் சேர்ந்து கொள்கிறது. எதிர்காலத்தில் அவள் அதற்கும் சேர்த்து விலை கொடுக்க வேண்டிவரும்."

கீதா பிரஸ் வெளியீடான "இல்லற வாழ்வை எப்படி வாழ வேண்டும்?" என்ற நூலில் ஸ்வாமி ராம்ஷுக்தாஸ் கூறுவதைக் கேளுங்கள்:

"கணவனின் பிணத்தோடு சேர்த்து மனைவியை எரியூட்டுவது வெறுமனேயொரு சம்பிரதாயம் அல்ல. அவள் மனதிற்குள் உண்மையும் உணர்ச்சிப் பெருக்கும் நுழையும் போது அவள் நெருப்பின்றியே எரிகிறாள். அவ்வாறு எரியும் போது வலியால் அவள் துன்புறுவதில்லை. அவள் இவ்வாறு செய்ய வேண்டும் என்பது

வெறுமனேயொரு சம்பிரதாயம் அல்ல; அது அவளின் உண்மை நிலை, கற்பொழுக்கம், வேதப் பண்பாட்டின் மீதான நம்பிக்கை ஆகியவற்றின் பாற்பட்டது… அது அவளுடைய மதப்பற்றினால் விளைவது. இது சம்பந்தமாக பிரபுதத்தா பிரம்மச்சாரிஜி ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதன் தலைப்பு, "கணவனின் பிணத்துடன் சேர்த்து மனைவியை எரியூட்டுவது இந்து மதத்தின் முதுகெலும்பு" என்பதாகும். அதனை கட்டாயம் படிக்க வேண்டும்."

உடன்கட்டை ஏறுவதை ஆதரிப்பது மட்டுமல்ல; "வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப் பட்டால் வெளியில் சொல்லக்கூடாது", "கணவன் அடித்துத் துன்புறுத்துவதற்குக் காரணம் மனைவியின் பூர்வ ஜென்ம பாவங்கள்தான்" என்பது போன்ற சனாதன நல்லுரைகள் கீதா பிரஸ்ஸின் வெளியீடுகள் அனைத்திலும் குமட்டுமளவு நிரம்பி வழிகின்றன.

இவை எதுவும் பெரும்பான்மை 'இந்து' மக்களின் மத நம்பிக்கை சார்ந்தவை அல்ல; பார்ப்பன சனாதன மதத்தின் கருத்துக்கள் மட்டுமே. இவற்றைக் கட்டிக்கொண்டு அழு வதற்கு பார்ப்பனர்களுக்குள்ள உரிமையை நாம் மதிக்கிறோம். ஆனால், இந்து என்று சொல்லி இவற்றை எல்லோர் தலையிலும் கட்டடப் பார்க்கிறார்கள் இந்த ஃபாசிஸ்டுகள். இதைச் சரியாகப் புரிந்து கொண்ட அம்பேத்கர், பெரியார் போன்றோர் பார்ப்பனக் கொடுங் கோன்மையை சமரசமின்றி எதிர்த்தார்கள். பார்ப்பனப் புரட்டை சரியாகப் புரிந்து கொள்ளாதோர் மட்டுமே, "இது இந்து மதத்தின் உள்விவகாரமாயிற்றே; நாம் எப்படி அதில் தலையிடுவது?!" என்று தடுமாறுகிறார்கள். இதில் நாம் எந்த வகை?

பார்ப்பன பயங்கரவாதம் பற்றி, சனாதன அதர்மம் பற்றி, வர்ணாஸ்ரம இழிவு பற்றி பேசினால் 'இந்துக்கள்' மனம் புண்படும் என்று ஒதுங்கிக் கொள்வது பச்சை சந்தர்ப்பவாதமின்றி வேறு என்ன? அப்படியே இந்துத்துவ வாதிகளை எதிர்க்கக் கிளம்பினாலும், அவர்கள் 'முஸ்லிம் களுக்கு எதிரானவர்கள்' என்பதை தாண்டி அந்த எதிர்ப்பின் பரப்பு நீளுவதில்லை. இவ்வாறு செய்வதால், அவர்கள் நாடுகின்ற 'இந்துக்கள் VS முஸ்லிம்கள்' என்று எளிமைப்படுத்தப்பட்ட இருமை நிலைதான் வலுவடைகின்றது. மாற்ற மாக, 'இந்துக்கள்' என்று சொல்லி பெருந்திரள் மக்களின் பின்னால் ஒளிந்துகொள்ளும் பார்ப்பனிய அறிவுக் கூலிப்படையை கரத்தை பிடித்திழுத்து எதிரில் நிறுத்தி முறியடிக்க வேண்டும். ஆணித்தரமான வாதங்களை முன் வைத்து அதைச் செய்யும்போது, பார்ப்பனியத் தால் ஒடுக்கப்படும் பெரும்பான்மை மக்கள் உண்மையைப் புரிந்து கொள்வார்கள். அதே போல், பார்ப்பனியத்துக்கு முதலாளித்துவத் துடனும் நவ தாராளாவாதத்துடனும் இருக்கும் கள்ள உறவை அம்பலப்படுத்தாமல் நம்முடைய எதிர்ப்பு முழுமை பெறாது என்பதையும் நாம் மனதிலிருத்த வேண்டும்.

எனவே முஸ்லிம்கள், தலித்துகள், மதச்சார் பின்மை வாதிகள், ஜனநாயகவாதிகள் என அனைவரும், பார்ப்பனியத்தால் ஒடுக்கப்படும் சாதி, இன, மத, மொழி மக்கள் அனைவரும், தமது 'சமுதாயம்', 'இயக்கம்' போன்ற வேறுபாடு களைக் கடந்து, அநீதியின் ஊற்றுக் கண்ணான பார்ப்பனிய பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தி, அதன் அடித்தளத்தை தகர்த்தெறிவதில் கவனத்தைக் குவிப்பது அவசியம்.

**அநியாயம் இழைப்பவர் - இழைக்கப்படு பவர் இருவருக்குமே உதவ வேண்டும் என்றார்கள் நபிகள் நாயகம். அநியாயம் இழைக்கப்படு பவருக்கு உதவ வேண்டுமென்பது புரிகிறது; அநியாயம் இழைப்பவருக்கு எப்படி உதவ முடியும்? அநியாயம் செய்பவரின் கரத்தைப் பிடித்து, அநீதி செய்யவிடாமல் தடுத்து, சுய அழிவுப் பாதையிலிருந்து அவரைக் காப்பாற்றுவதே நாம் அவருக்கு செய்யத்தக்க உதவி.**

**இந்த வகையில், பார்ப்பன பயங்கர வாதிகளுக்கு நம் உதவி தேவையாயிருக்கிறது! செய்வோமா?**

–“உவைஸ்”, சென்னை.

# ஷரீஅத் பாதுகாப்பு மாநாடு நிகழ்ச்சிகள்

## சென்னை தி. நகரில் ஷரீஅத் பாதுகாப்பு மாநாடு

*13.11.2016* அன்று சென்னை தி.நகரில் மோத்திலால் பள்ளி வாசலில் ஷரீஅத் பாதுகாப்பு மாநாடு நடந்தது. இதில் கீழ்பாக்கம் இமாம் பரகத் அலீ பாகவி, பாலவாக்கம் இமாம் அபூபக்கர் உஸ்மானி, மந்தைவெளி இமாம் இல்யாஸ் ரியாஜி ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

பொதுசிவில் சட்டத்தை எதிர்த்து நடந்த இம்மாநாட்டில் ஏராளமான ஆலிம்களும் பொதுமக்களும் பங்கேற்று சிறப்பித்தனர்.

## காரப்பாக்கத்தில் மாபெரும் ஷரீஅத் மாநாடு

**உஸ்மானிகள் பேரவை நடத்தியது**

*18.11.2016* அன்று சென்னை – காரப்பாக்கத்தில் உஸ்மானிகள் பேரவை ஷரீஅத் பாதுகாப்பு மாநாடு நடத்தியது. விடுதலை சிறுத்தைகள் கட்சி ஷாநவாஸ், பாலவாக்கம் இமாம் அபூபக்கர் உஸ்மானி, அடையார் இமாம் சதீதுத்தீன் பாகவி, புதுப்பேட்டை இமாம் பீர் முஹம்மது பாகவி, மந்தைவெளி இமாம் இல்யாஸ் ரியாஜி ஆகியோர் உரையாற்றினர்.

ஏராளமான ஆலிம்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர். மௌலவி இல்யாஸ் உஸ் மானி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

## சென்னை பனையூரில் மாபெரும் ஷரீஅத் பாதுகாப்பு மாநாடு

*28.11.2016* அன்று சென்னை பனையூரில் பிரம்மாண்டமான ஷரீஅத் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. திராவிடர் இயக்கத் தமிழர், பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன், பாலவாக்கம் இமாம் அபூபக்கர் உஸ்மானி, அடையார் இமாம் சதீதுத்தீன் பாகவி, வைகறை துணை ஆசிரியர் இல்யாஸ் ரியாஜி ஆகியோர் உரையாற்றினர். ஏராளமான ஆண்களும், பெண்களும் மாநாட்டில் பங்கேற்று சிறப்பித்தனர்.

## விருதுநகரில் எழுச்சிமிகு ஷரீஅத் பாதுகாப்பு மாநாடு

*27.11.2016* அன்று விருது நகரில் ஜமா அத்துல் உலமா சபையும், மாவட்ட ஐக்கிய ஜமாஅத்தும் இணைந்து பிரம்மாண்டமான ஷரீஅத் பாதுகாப்பு மாநாட்டை நடத்தியது.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மக்கள் வெள்ளம்போல் திரண்டிருந்த இந்த மாநாட்டில் அகில இந்திய காங்கிரஸ் மூத்த தலைவர் முன்னாள் அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன், முஸ்லிம் லீக் எம்.எல்.ஏ. அபூபக்கர், த.மு.மு.க. ஹைதர் அலி, ம.ஜ.க ஹாரூன், தேசிய லீக் பஷீர், இந்திய தேசிய லீக் நிஜாமுத்தீன், சி.பி.ஐ. கட்சி மகேந்திரன் முதலிய பல பிரமுகர்கள் உரையாற்றினர்.

வைகறை துணை ஆசிரியர் இல்யாஸ் ரியாஜி உரையாற்றினார். ஜமாஅத்துல் உலமா மாநில பொதுச் செயலாளர் ரிழா பாகவி தலைமை ஏற்றார்.

## திருமங்கலத்தில் மாபெரும் ஷரீஅத் பாதுகாப்பு பொதுக்கூட்டம்

மதுரை அருகேயுள்ள திருமங்கலத்தில் ஜமாஅத்துல் உலமா சபையும் ஐக்கிய ஜமாஅத்தும் இணைந்து ஷரீஅத் பாதுகாப்பு பொதுக் கூட்டத்தை 26.11.2016 அன்று நடத்தியது.

ஐக்கிய ஜமாஅத் நிர்வாகிகள் பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றினர். ஜமாஅத்துல் உலமா சபை செய்தித் தொடர்பாளரும் வைகறை வெளிச்சம் துணை ஆசிரியருமான இல்யாஜி ரியாஜி சிறப்புரையாற்றினார். மற்றும் ஏராளமான ஆண்களும், பெண்களும் மாநாட்டில் பங்கேற்று சிறப்பித்தனர்.

ஷரீஅத் பாதுகாப்பு பெண்கள் பேரவை என்ற அமைப்பு சிறுபான்மை ஆணையத்திடமும் மகளிர் ஆணையத்திடமும் 28.10.2016 அன்று மனு அளித்தது.

அம்மனுவில், அண்மைக் காலமாக மத்திய அமைசசர்கள் சிலர் ஷரீஅத் சட்டம் முஸ்லிம் பெண்களுக்கு அநீதி இழைக்கிறது என்றும் எனவே பொதுசிவில் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்று பேசி வருகின்றனர். இது எங்களுக்கு கவலையளிக்கிறது. ஷரீஅத் பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. கண்ணியம் தருகிறது. ஷரீஅத் சட்டத்துக்கு எதிரான பொதுசிவில் சட்டம் வருவதை நாங்கள் ஒருபோதும் ஏற்க மாட்டோம். மேலும் பொதுசிவில் சட்டத்தை அமல்படுத்த துடிக்கும் மைய அரசு அதற்கு முஸ்லிம் பெண்கள் விடுதலை என்று காரணம் கூறுவது வேதனையானது என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

இந்த மனுவைப் பெற்றுக்கொண்ட ஆணையர் இதை உடனடியாக மைய அரசின் கவனத்துக்கும் குடியரசுத் தலைவரின் கவனத்துக்கும் கொண்டு செல்வதாகக் கூறினார். ஷரீஅத்தைப் பாதுாக்க பெண்கள், களமிறங்கியிருப்பது பாராட்டுக்குரிய முயற்சி.

## மீஞ்சூரில் பொதுசிவில் சட்டத்தை எதிர்த்துப் பேரணி... பொதுக் கூட்டம்...

9.11.2016 அன்று பொன்னேரி வட்டார ஜமாஅத்துல் உலமா சபையும், திருவள்ளூர் மாவட்ட அனைத்து முஸ்லிம் ஜமாஅத் ஒருங்கிணைப்புக் கமிட்டியும் இணைந்து ஷரீஅத் பாதுகாப்பு மாநாடு பேரணி நடத்தின. சுல்தான் ரியாஜி தலைமை ஏற்றார். ஜமாஅத் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். மௌலவி கான்பாகவி, தொல் திருமாவளவன் (விடுதலை சிறுத்தைகள்) காஜா முயினுத்தீன் பாகவி, காயல் மஹ்பூப் (முஸ்லிம் லீக்) இல்யாஸ் ரியாஜி ஆகியோர் சிறப்புரையாற்றினர். மற்றும் ஏராளமானோர் மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## சென்னை, திருவல்லிக்கேணியில் பொதுசிவில் சட்ட எதிர்ப்பு பிரமாண்டப் பொதுக்கூட்டம்

மர்கஸ் சுன்னா என்ற அமைப்பு சென்னை திருவல்லிக்கேணி ஷேக்தாவூத் தெருவில் பொதுசிவில் சட்டத்தை எதிர்த்து பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடத்தியது. 6.11.2016 அன்று நடந்த இக்கூட்டத்தில் மௌலவி இல்யாஸ் ரியாஜி, மௌலவி ஷேக் அப்துல் காதிர், காஷிஃபி, மௌலவி மதார்ஷா ஃபிர்தவசி, நூர் முஹம்மது மதனீ ஆகியோர் சிறப்புரையாற்றினர். மௌலவி லூத் புர்ரஹ்மான் முன்னிலை வகித்தார். ஏராளமானோர் நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்தனர்.

## பொது சிவில் சட்டத்தை எதிர்த்து நாகப்பட்டிணத்தில் பிரமாண்டமான பொதுக்கூட்டம்


08.11.2016 அன்று நாகப்பட்டிணம் அவர திடலில் தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா முயற்சியில் பொதுசிவில் சட்டத்துக்கு எதிரான பிரமாண்டான பொதுக்கூட்டம் நடந்தது.

காங்கிரஸ் கட்சி சார்பில் விஜயதாரணி (எம்.எல்.ஏ.) முஸ்லிம் லீக் சார்பில் முன்னாள் எம்.பி. அப்துல் ரஹ்மான், ம.ஜ.க. சார்பில் தமீம் அன்சாரி (எம்.எல்.ஏ), நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பில் இல்யாஸ் ரியாஜி, இந்திய தேசிய லீக் சார்பில் முன்னாள் எம்.எல்.ஏ. நிஜாமுத்தீன், .....ஜக் சார்பில் முகைதீன் பக்ரி, திராவிடர் கழகம் சார்பில் அன்பழகன், ம.ம.க. சார்பில் ஜபருல்லா, தேசிய லீக் சார்பில் தடா ரஹீம், அலீம் புஹாரி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். பொதுக்கூட்டத்துக்கு மாநில ஜமாஅத்துல் உலமா செயலாளர் ரிழா பாகவி தலைமை ஏற்றார். இதில் ஏராளமான பெண்களும், ஆண்களும் பொதுக்கூட்டத்துக்கு திரளாக வந்திருந்தனர்.



# முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?

# டார்வின் கோட்பாடு அதன் தாக்கமும் விளைவுகளும்



அபுல்ஹஸன் அலீ நத்வீ

மனிதனின் பரிணாம வளர்ச்சி குறித்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய டார்வின் தியரி ஏற்கனவே உலகாதாயக் கோட்பாடு எனம் புதைச் சேற்றில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த ஐரோப்பியர்களை சிக்கல்களிலிருந்து மீட்கவில்லை.

மாறாக அது உள்ளிழுக்கும் புதைச் சேற்றினை மேலும் ஈரமாக்கிற்று. ஐரோப்பியர்களின் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கியது. மனிதன் மனிதனாகப் படைக்கப்படவில்லை. அவன் இன்னொரு மிருகத்திடமிருந்து வந்தவன்.

ஒரு நுண்ணுயிரி (Amoeba) யிலிருந்து குரங்காக பரிணாம வளர்ச்சி கண்டு பிறகு குரங்கிலிருந்து மனிதனாக வளர்ச்சி கண்டான். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக பரிணாம வளர்ச்சி அடைந்து அடைந்து இறுதியில் மனிதனாக ஆனான் என்பதே டார்வின் தியரி. (Darwinian Theory)

இந்தக் கோட்பாட்டைச் சொன்னவர் டார்வின். இவரின் Origin of Species எனும் நூல் கி.பி. 1859–ல் வெளிவந்தது. இந்நூல் பெரும் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தியது. கல்லூரிகளில், பள்ளிகளில், மக்கள் மன்றங்களில் விவாதப் பொருளானது. மனிதனைப்பற்றி அதுவரை இல்லாத அளவுக்கு இந்நூல் வெளிவந்த பிறகு புதிய கோணத்தில் விவாதங்கள் தோன்றின.

மக்கள் மனித இனத்தைப் பற்றிச் சிந்திக்கவும் விசாரிக்கவும் தலைப்பட்டனர் மனிதன் மிருகத்திலிருந்து வந்தவனா? இந்த வரலாறு நம்பகத்தன்மைமிக்கதா? என்ற கேள்விகளுக்கெல்லாம் விடை தேடினர்.

இந்த டார்வின் தியரி மனிதனை இப்படி நம்பத்தூண்டியது. அதாவது இந்த உலகம் இயங்கிட இறைவனின் பேருதவி தேவையில்லை. இயற்கைக்கு அப்பாற்பட்ட எந்த வலிமையும் இவ்வுலகம் இயங்குவதற்கு தேவைப்படாது.

இவ்வுலகிலுள்ள எல்லாப்படைப்புகளும் பரிணாம வளர்ச்சியின் படியே வந்துள்ளன. இது இயற்கையாகவே ஏற்பட்டிருக்கிறது. இதில் இறையாற்றல் படைப்புத்திறன் என எதுவுமில்லை. ஒரு பொருள் வளர்ச்சி அடைவதற்கு இறைவன் என்று எந்தக் காரணமும் இல்லை. அது பரிணாம வளர்ச்சி கண்டிடத் தேவை ஆண்டுகள் மட்டுமே போதும்.

ஒரு பொருள் உருவாவதும் அது உலகில்

இருப்பதும், இயற்கையின் விதிப்படிதான் நடக்கிறதேயன்றி நுண்ணறிவுத்திறன் மிக்க ஒரு படைப்பாளன் அதைப்படைக்கவில்லை.

பரிணாம வளர்ச்சியின் பல்வேறு கட்டங் களைக் கடந்துவந்து இறுதியாக எது சிறந்ததோ சரியானதோ அந்தக் கட்டத்துக்கு வந்தடைந்த பிறகு பரிணாம வளர்ச்சி நிறைவடைந்து விடு கிறது. உணர்வும் பகுத்தறிவும் உள்ள மனிதனே அந்த சிறந்த சரியான இறுதி வடிவம். இப்படி யெல்லாம் நம்ப வைத்தது டார்வின் தியரி.

இந்தக் கோட்பாடு மத நம்பிக்கைளுக்கும் எதிரானது. அறிவுக்கும் ஒவ்வாதது. மேலும் அடிப்படைக் கொள்கைகள், லட்சியங்கள், சிந்தனை முடிவுகள், ஒழுக்கங்கள், இவற்றால் விளையும் நற்செயல்கள் ஆகியவற்றுக்கும் தெள்ளத் தெளிவாக முரண்பட்ட கோட்பாடே யாகும்.

மட்டுமல்ல தொன்று தொட்டு மக்கள் ஏற்றுக்கொண்டுவந்த மத நம்பிக்கைகளை அடி யோடு அசைத்துத் தகர்த்து அதன் இடத்தைப் பிடித்துக்கொண்ட புதிய மதமாக உருவாகின்றது.

எனவே ஐரோப்பிய மதவாதிகள் டார்வின் தியரியை எதிர்த்தார்கள். அதை முழுமையான கண்காணிப்புக்கு உட்படுத்தினார்கள். அதனால் ஐரோப்பாவில் மதத்தின் எதிர்காலம் கேள்விக் குறியாகி விடுமோ என்று அஞ்சினார்கள்.

பேராசிரியர் Joad அவர்கள் தமது நூலில் கூறுகிறார்... டார்வினுடைய Origin of Species என்ற நூல் வெளிவந்த நேரத்தில் விழுந்த பேரிடியும், திகைப்பும் நம் முன்னோர்கள்களை எப்படியெல்லாம் பாதித்திருக்கிறது என்று இப்போது நாம் அறிவது சிரமம்.

டார்வின் தனது தத்துவத்தை நிரூபித்தாரோ அல்லது நிரூபித்து விட்டதாகக் கருதிக் கொண் டாரோ எப்படியிருப்பினும்இந்த பூமியின் மேல் வாழ்ந்து வரும் ஜீவனுள்ளவற்றின் பரிணாம வளர்ச்சி என்பது அமீபா (Amoeba) தோன்றிய காலந்தொட்டு தொடர்ச்சியாகவும் இடை வெளி யின்றியும் நடந்து வருகிறது.

Jelly Fish தனது தொடக்க உருவங்களிலிருந்து மாறி மாறி இறுதியான உயர்ந்த உருவங்களைப் பெற்றுள்ளது என்ற டார்வின் தியரின் முடிவு என்னவென்றால் பரிணாம வளர்ச்சி என்பது அமீபா காலம் முதல் நமது காலம் வரை (தடை ஏதுமின்றி) இடைவிடாமல் நடந்து வந்திருக் கிறது என்பதாகும். இதற்கு நேரெதிரான கருத்துக் கொண்டிருந்தனர் விக்டோரியாவின் காலத் தினர். மனிதன் என்பவன் தனியானதொரு படைப்பு. உண்மையில் அவன் வானவர்களுக்கு (Angel)அடுத்தபடியானவன்என்று நம்பிவந்தனர்.

டார்வின் தத்துவம் சரியானதாக இருக்கு மானால் மனிதன் என்பவன் ஒரு முன்னாள் குரங்கு அன்றி வேறில்லை.

மனிதன் வானவர்களுக்கு அடுத்தபடியான வன் என்பதற்கு பதிலாக அவன் ஒரு முன்னாள் குரங்கு என்பதை ஏற்றுக்கொள்ள விக்டோரியா காலத்தினருக்கு மனம் வரவில்லை. டார்வின் தத்துவம் விக்டோரியா காலத்திருனருக்குப் பிடிக்கவில்லை.

டார்வின் தத்துவம் மனிதனை இழிவு படுத்துகிறது என்று கருதிய இவர்கள் இந்த இழிவிலிருந்து மனித இனத்தை மீட்க முயன்ற னர். அதற்காக டார்வின் தியரி மீது வலிமையான விமர்சனங்களை முன் வைத்தனர். (ஆதாரம் Guide to modern wickedness, P235, 236)

### டார்வின் தியரி செல்வாக்குப் பெற்றது

விக்டோரியாவின் காலத்தினரின் விமர்ச னங்கள் ஒருபுறமிருக்க பொதுமக்கள் டார்வின் தியரியை நம்பினர். ஏற்றுக்கொண்டனர்.

ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்த்தால் அதில் குறைகளும் உள்ளன. அது ஒரு பலஹீனமான கோட்பாடுதான். இதையெல்லாம் புரிந்தோ, புரியாமலோ மக்கள் அதை நம்பினர். இது போன்ற தத்துவங்களை ஏற்க மனிதச் சிந்தனை கள் தயாராகவே இருக்கின்றன போலிருக்கிறது. மதத்துக்கும் மதவாதிகளுக்கும் ஓர் எதிரி இசைந்துவிட்டதாக மக்கள் நினைத்தனர்.


டார்வின் தியரி மக்களிடம் பெற்றுவிட்ட செல்வாக்கை கண்டு அதை எதிர்க்க முடியாமல் மத வாதிகள் திணறினர். துண்டுப் பிரசுரங்கள், உரைகள் வழியாக மக்களிடம் வெகுவாகப் பரவிவிட்ட டார்வின் தியரியிடம் கிறிஸ்தவம் தோற்றது.

கி.பி. 1883-ல் டார்வின் மரணித்தபோது ஆங்கிலேயே சர்ச்சுகள் அவருக்கு மிகப்பெரும் மரியாதையைச் செய்தன. அதாவது கிறிஸ்தவ

மதத்தலைவர்கள் அடக்கம் செய்யப்படும் West Ministrabee-ல் அவரை அடக்கம் செய்திட அனுமதி அளித்தன.

அப்படியானால் டார்வின் தியரியிடம் கிறிஸ்தவம் எப்படித் தோற்றுப்போயிருக்கிறது பாருங்கள்.

இந்த டார்வின் தியரி மனிதச் சிந்தனையில் கலாச்சாரத்தில் இலக்கியத்தில் அரசியலில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.



சார்லஸ் டார்வின்

இதன் விளைவுகளை மனிதர்களின் ஒழுக்க மிழந்த பண்புகளில் தேடினால் கிடைக்கும். பிறந்த மேனியாக விலங்குகள் போன்று காடுகளில் சுற்றித் திரிந்த கற்கால மக்களின் வாழ்வுக்குத் திரும்ப வேண்டும் என்ற ஆசை மனிதனுக்கு ஏற்படுவது டார்வின் தியரியின் தாக்கம்தான்.

மனிதர்களுக்கு யார் முழுமையாக முன்மாதிரி என்று வரையிட்டுக் காட்டப்படுகிறதோ அதில் டார்வின் தியரியின் தாக்கம் இருக்கிறது.

மனிதன் ஒரு முன்னாள் மிருகம் என்பதை ஏற்றுக்கொண்டதால் விளைந்த ஒழுங்கீனங்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றிலும் குடும்ப வாழ்வு சிதைந்து போனதிலும் டார்வின் தியரியின் தாக்கத்தைக் காண முடியும்.

இதுபற்றி ஆங்கில நாட்டின் அறிஞர்களுள் ஒருவரான ஷய்டர் கூறுகிறார்...

“குடும்ப வாழ்வு என்றால் என்னவென்றே தெரியாத தலைமுறைகள் இங்கிலாந்தில் உருவாகிவிட்டன. இவர்களுக்கு மிருகங்கள்போல் வாழ்வதைத் தவிர வேறொன்றும் தெரியாது”

### உலகாதாயத்தால் விளைந்த பாவங்கள்

கரைகளை அரித்துச் செல்லும் வெள்ளமென வந்த உலகாதாயம் சமூகத்தில் பல தீமைகளை விளைவித்தது.

இறையச்சம், இறை நம்பிக்கை, மரணத்துக்குப் பின்வரும் மறுவாழ்வு மீதான நம்பிக்கை, நற்பண்புகள் இவை ஏதுமற்ற ஒரு கோட்பாடு உலகாதாயம். அது உருவாக்கிய மனிதர்கள் பென்னம் பெரும் மன்றங்களில் பொறுப்பில் அமர்ந்தாலும் அரசியல் தலைவர்களானாலும் அரசுப் பதவிகளில் வீற்றிருந்தாலும் கூட குற்றங்களைச் செய்தார்கள். மாபெரும்குற்றவாளிகள்செய்யத்தயங்குவதைக் கூட செய்தனர்.

பொருளாதார ரீதியாக லாபம் பெறவோ தனியொருவருக்குப் பதவி கிடைத்திடவோ, போலியான சமூக நலன், நாட்டு நலன், அரசியல் நலன் என்று கூறியோ பாவங்களைச் செய்தனர்.

இப்படிப்பட்ட இரக்கமற்ற அநீதியான செயல்களுக்கு உதாரணமாக மனித வரலாற்றில் நடந்த ஓர் அந்நிகழ்வைக் கூறலாம்.

ஆங்கிலேயே அரசு இந்தியாவில் (வங்காளத்தில்) ஒரு செயற்கைப் பஞ்சத்தை உருவாக்கியது.

உழவர்கள் தமது வயல் வெளிகளில் அறுவடைக் கருவிகளைப் பயன்படுத்தக் கூடாது என்று தடை விதித்த ஆங்கிலேயர்கள் பொதுமக்களின் முக்கிய உணவான அரிசியை ராணுவத்தினரின் தேவைக்கென்று கூறி பெருமளவில் பதுக்கினர். அரிசியை பொதுமக்களின் உணவுத் தேவைக்குத் தராமல் பதுக்கினர்.

நாட்டில் ஏராளமான தானியங்கள் கிடங்குகளில் பதுக்கப்பட்டிருந்தன. ஒரு புறத்தில் லட்சக்கணக்கான குடிமக்கள் பசியால் மடிந்தனர். மறுபுறத்தில் கிடங்குகளில் தானியங்கள் வீணாகிக் கொண்டிருந்தன.

இந்தியா பெரும் தேசம், வளமான நாடு, தானியங்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு எடுத்துச் சென்றிட வாய்ப்புகளும் இருந்தன. உணவு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெற்று நாடு மாத்திரமல்ல. அது இதர நாடுகளின் உணவுத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்திடுமளவுக்கு வளமான நாடு. அப்படியிருந்தும் இந்தியர்கள் லட்சக்கணக்கானோர் பசியால் செத்து மடிந்தனர்.

இவ்வாறான ஒரு செயற்கைப் பஞ்சத்தை அவர்கள் உருவாக்கியதற்குக் காரணம் இந்த நாட்டை நம்மால் நிர்வாகம் செய்திட இயலாது என்று இந்தியர்கள் தெள்ளத் தெளிவாக உணர்ந்

திட வேண்டும் என்பதற்காகவும் இராணுவத்தின ருக்கு மட்டுமே அரிசி வழங்கப்படும் என்றால் இந்தியாவில் பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர்ந்திட முன் வருவார்கள் என்பதற்காகவும் தான்.

உலகாதாயக் கோட்பாடு உருவாக்கிய மனிதர்கள் எவ்வளவு பென்னம் பெரிய பதவியில் அமர்ந்தாலும் சரி குற்றங்களைச் செய்திட அஞ்ச மாட்டார்கள் என்பது மாத்திரமல்ல படு பயங்கரக் குற்றவாளிகள் செய்யத் தயங்கும் பாவங்களைக் கூட துணிந்து செய்வார்கள் என்பதற்கு இன்னொரு சான்று இதோ...

*1947* ஆம் ஆண்டு தில்லியிலும் கிழக்கு பஞ்சாப்பிலும் பெரும் வன்முறைகள் அரங் கேறின. இந்தியாவின் அப்போதைய கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டன் அவற்றைத் தடுக்க வில்லையே.

அந்தப் பகுதியில் முஸ்லிம்களை பூண்டோடு ஒழித்திடத் திட்டங்களும் சதிகளும் நடைபெறுகின்றன என்ற தகவல் தமக்குக் கிடைத்த பின்னரும் மவுண்ட் பேட்டன் சும்மா இருந்தார்.

பெரும் இனக்கலவரம் அங்கே நடந்து கொண்டிருக்கிறது என்ற தகவல்கள் அவரை எச்சரித்த பின்னரும் அவர் வாளாவிருந்தார்.

இதற்குக் காரணம் மவுண்ட்பேட்டன் அவர்களை இந்தியர்கள் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக தேர்ந்தெடுத்துவிட்டனர். ஆனால் பாகிஸ்தானுக்குரிய கவர்னர் ஜெனரலாக அவரை ஏற்க முஸ்லிம்கள் மறுத்துவிட்டனர் என்பதுதான்.

மேலும் இவ்வாறு இனக்கலவரம் உள்நாட்டுச் சண்டையும் நடந்துக் கொண்டிருந்தால்தான் இந்தியர்களும் இந்தியாவை சுயமாக ஆளத் தெரியாது என்பதற்கு இதோர் ஆதாரமாக இருக்கும் என்பதற்காகவும் இந்தியர்கள் தம்முடைய பாதுகாப்பு மற்றும் கட்டுக்கோப்பு ஆகியவற்றில் ஆங்கிலேயர்களையே சார்ந்து இருக்க வேண்டும் என்பதற்காகவும் அவர் அப்படி வாளாவிருந்தார்.

மேலும் பாருங்கள், ரெட் கிலிப் என்பவரை இரு தரப்பு இந்தியர்களும் (பாகிஸ்தானுக்கு சென்றவர்கள், இந்தியாவிலேயே தங்கிவிட்டார் கள் ஆகிய இரு தரப்பினரும்) நடுவராக ஏற்றுக் கொண்டனர் பஞ்சாப் மாகாணத்தின் சில நகரங்களை பாகிஸ்தானுடன் இணைப்பதா இந்தியாவுடன் இணைப்பதா என்ற பிரச்சி னையில் அவர் அநீதியாகவே நடந்துகொண்டார்.

இதனால் குர்தாஸ்பூர் பைரோஸ்பூர் ஆகிய நகரங்களிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற வேண்டியதாயிற்று. அப்போது முஸ்லிம்கள் பெரும் துன்பத்துக்கு ஆளாயினர். ஏராளமான உயிரிழப்புகளும் பெரும் சேதங்களும் ஏற்பட்டன.

இன்னும் பாருங்கள் அமெரிக்காவின் அதிபரும், வாஷிங்டனும் யூத பயங்கரவாதத் துக்கு ஒத்துழைக்கின்றனர். ஃபாலஸ்தீன நாட் டில் அமைக்கப்பட்டுள்ள இஸ்ரேல் அரசுக்கு ஆதரவளிக்கின்றனர். அரபு நாடுகளின் நியாய மான கோரிக்கைகளைக் கூட ஏற்க மறுக்கின் றனர். கண்டும் காணாமலிருக்கின்றனர்.

இதற்குக்காரணம் அரசியல், பொருளாதாரம், ஊடகம் ஆகியவற்றில் யூதர்களுக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்ளவும் யூதர்களின் அன்பைப் பெறுவதற்காகவும் தேர்தல் ஆதாயத்துக்காகவும்தான்.

அதுமட்டுமா? அரபு இஸ்லாமிய தேசமான அல்ஜீரியாவுக்கு எதிரான ஃபிரான்சின் அட்ட காசங்களுக்கு எதிராக அமெரிக்கா மூச்சேவிடுவ தில்லை என்பது மாத்திரமன்று, ஃபிரான்சின் அநியாயங்களுக்குத் துணைபோகிறது. மேற்கத் திய வல்லாதிக்கத்தின் பாவத்துக்கு ஒத்துழைக் கிறது.

இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? அமெரிக்காவிலும் ஐரோப்பியாவிலுமுள்ள பெருந்தலைகளின் குணங்கள் கெட்டுவிட்டன என்பதைத்தானே காட்டுகின்றன.

**சிலபல அற்ப உலக ஆதாயங்களுக் காகவே அவர்களின் அரசியல் வாழ்வு இயங்குகின்றதேயன்று அதில் துளியளவும் லட்சியம் இல்லை என்பதைத்தானே காட்டுகின்றன. உலகாதாயக் கோட்பாட்டால் இப்படிப் பட்ட தலைவர் களைத்தான் தர முடிந்திருக்கிறது.**

– தமிழ் வடிவம் இல்யாஸ் ரியாஜி

– தொடரும்.

## எது முதலில்?

# "பித்அத்" காரன் செய்யும் பாவங்கள்

இஸ்லாத்தில் இல்லாதவற்றை இஸ்லாத்தில் உள்ளதாக ஆக்குவது "பித்அத்" என்றழைக்கப்படுகிறது. இந்த பித்அத் எனும் நூதனங்கள் இருவகையுண்டு ஒன்று நம்பிக்கை மற்றொன்று செயல்கள்.

ஒரு விஷயத்தை எப்படி நம்ப வேண்டும் என்றுமார்க்கம்கற்றுத்தருகிறதோஅதற்குமாறாக அதை நம்புவது கொள்கை நூதனம் எனப்படும்.


ஒரு விஷயத்தை எப்படிச் செய்ய வேண்டும் என்று மார்க்கம் கற்றுத் தருகிறதோ அதற்கு மாறாக அதைச் செய்வது "நூதனச் செயல்" எனப்படும்.

இந்த இரண்டுவகை "பித்அத்"களுமே பாவங்கள்தான். ஆனால் பெரும்பாவங்களை விடவும் "பித்அத்"கள் ஒருவகையில் ஆபத்தானவை. எப்படியென்றால் பெரும்பாவங்கள் செய்பவன் அதற்காக மனம் வருந்தி மன்னிப்பு கேட்பதன் மூலம் அல்லாஹ்விடம் நெருங்கி விடுகிறான். ஆனால் "பித்அத்" காரன் தான் செய்யும் பித்அத்களை எல்லாம் நன்மைகளே என்று நினைக்கிறான்(அது பாவம் என்றே நினைப்பதில்லை. நினைத்தால்தானே திருந்துவதற்கு!?

கொள்கை நூதனம் என்பதை வார்த்தையில் வெளிப்படும் நூதனம் (அல்பித்அத்துல் என்றும் கூறுகின்றனர்)

அல்லாஹ் சொல்லாதவற்றையெல்லாம் சொன்னதாக ஆதாரமின்றிச் சொல்வதே கொள்கை நூதனத்தின் பிறப்பிடம். எனவே இதை வார்த்தையால் வெளிப்படும் நூதனம் என்றழைக்கின்றனர்.

அல்லாஹ்வின் மீதே பொய்யுரைப்பது மிகக் கொடூரமானபாவம் என்கிறார் அறிஞர் இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள்.


இமாம் யூசுப் அல்கர்தாவி

அல்லாஹ் கூறுவதைப் பாருங்கள் :

வெளிப்படையான அந்தரங்கமான மானக் கேடுகளையும் பாவங்களையும் நியாயமின்றி வரம்பு மீறுவதையும் யாதொரு ஆதாரமில்லாமல் இருக்கும் பொழுதே அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பதையும் நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின்மீது பொய்யாகக் கூறுவதையும் என் இறைவன் தடை செய்துள்ளான் என்று (நபியே) நீர் கூறுவீராக (7:33)

மேலும் அல்லாஹ் அனுமதித்தவைகளை அனுமதிக்கப்படாதவை என்று ஆதாரமின்றிக் கூறுவதும் இதேபோன்ற பாவம்தான்.

அல்லாஹ் கூறுகிறான் : (நபியே) நீர் கூறுவீராக அல்லாஹ் உங்களுக்கு இறக்கி வைத்த உணவுகளைக்கவனித்தீர்களா? அவற்றை நீங்களே இது அனுமதிக்கப்பட்டது. இது அனுமதிக்கப் படாதது என்று ஆக்கிக் கொள்கிறீர்களே (இப்படி முடிவு செய்துகொள்ள) அல்லாஹ் உங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளானா? அல்லது அல்லாஹ்வின் மீது பொய்யைப் புனைகின்றீர்களா? (10:59)

இவ்வாறாக அல்லாஹ் தன் வேதத்தின் வழியாக, தூதரின் வழியாக கூறியுள்ள உண்மைகளுக்கு புறம்பாக தவறான நம்பிக்கைகளை வைத்திருப்பது ஒருவகை என்றால் மற்றொரு வகை தவறான வழிமுறைகளில் இறைவனை

வழிபடுவது.

அல்லாஹ் கற்றுத் தராத வடிவங்கள் அமைப்புக்களில் அல்லாஹ்வை வணங்குவதும் "பித்அத்" (நூதனவழி) தான்.

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ் அனுமதிக்காதவற்றை மார்க்கமாக்குகின்ற இணை தெய்வங்கள் அவர்களுக்கு இருக்கின்றனவா (42:21)

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள் :

(மார்க்கத்தின் பெயரால் செய்யப்படும்) நூதனச் செயல்களை விட்டும் உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில் எல்லா "பித்அத் (நூதனச் செயல்)களும் வழிகேடுதான்" (அறிவிப்பாளர் : இர்பாழ் இப்னு சாரியா (ரழி) நூல் : அஹ்மத் அபூதாவூத், இப்னுமாஜா, ஹாகிம், இப்னு ஹிப்பான்)

மேலும் சொன்னார்கள் : நம்முடைய இந்த (மார்க்க) விஷயங்களில் இல்லாத புதுமைகளை யார் புகுத்தினாலும் அது மறுக்கப்பட வேண்டியதே (நூல் : புஹாரி, முஸ்லிம்)

இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் கண்டித்திருப்பது அல்லாஹ்வின் தூதர் கற்றுத் தராத வழிமுறைகளில் இறைவழிபாடு செய்வதைத் தான்.

ஆக, உண்மைக்குப் புறம்பான நம்பிக்கை, தவறானவழிமுறைகளில்செய்யப்படும்வணக்கம் ஆகிய இருவகையான பித்அத்களும் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருப்பவைதான். இவற்றைத் தனித்தனியாகப் பிரித்து பார்ப்பது ரொம்பச் சிரமம். மிக அறிதாகவே இது சாத்தியம்.

சில அறிஞர்கள் இதை இப்படி உருவகப் படுத்திச் சொல்கின்றனர். "உண்மைக்குப் புறம்பான நம்பிக்கைகள் எனும் பித்அத் முறையற்ற வழிகளில் செய்யப்படும் இறை வணக்கம் என்ற பித்அத்–ஐ திருமணம் செய்து இவ்விருவரும் தாம்பத்ய வாழ்வில் ஈடுபட்டனர். அவர்களுக்கு இழிபிறவிகளே பிள்ளைகளாகப் பிறந்தனர். அவர்கள் இஸ்லாமிய நாடுகளுக்கும் நகரங்களுக்கும் சென்று மக்களை வேட்டையாடினர். அவர்களின் அழிவு வேலைகளைத் தாங்க முடியாத மக்களும் இஸ்லாமிய நகரங்களும் அல்லாஹ்விடம் தஞ்சம் புகுந்தனர்.

இப்னு தைமிய்யா (ரஹ்) இப்படிக் கூறுகிறார் :

"இறை மறுப்பும் பித்அத்தும் திருமணம் செய்து ஈருலக இழப்பைப் பெற்றெடுத்தன".

தெரியுமா உங்களுக்கு? பெரும் பாவங்களை விடவும் "பித்அத்"கள்தான் இப்லீசுக்கு மிகப் பிரியமானது. ஏனெனில் பித்அத்களால் தான் மார்க்கம் உடைக்கப்படுகிறது.

பித்அத்காரன் அதை விட்டுத் திருந்திடவும் மாட்டான். திரும்பவும் மாட்டான். (ஏனெனில் பாவம் என்று உணர்வதில்லை. உணர்ந்தால் தானே திருந்த முடியும்) இதனாலும் ஷைத்தானுக்கு இது பிடித்திருக்கிறது.

மேலும் அல்லாஹ்வும் ரசூலும் எவற்றைக் கடைப்பிடிக்கச் சொன்னார்களோ அவற்றைக் கைவிடுவதும் கைவிடச் சொன்னதைக் கடைப் பிடிப்பதும் அவர்கள் விரும்பச் சொன்னதை வெறுக்கச்செய்வதும்அவர்கள்அழிக்கச்சொன்னதைப் பாதுகாப்பதும் பாதுகாக்கச் சொன்னதை அழிப்பதும் இந்த பித்அத்காரர்கள்தான். எனவே ஷைத்தானுக்கு பித்அத் பிடித்திருக்கிறது. (நூல் : மதாரிஜுஸ் ஸாலிகீன்)

இங்கு நாம் ஒன்றைப் புரிந்துகொள்வது மிக அவசியம். மார்க்கத்தின் பெயரில் கடைப் பிடிக்கப்பட்டு வரும் மார்க்கம் சாராத செயல்கள் (பித்அத்)கள் அனைத்தும் ஒரே தரமானவை அல்ல.

கடினமான பித்அத், மெல்லிய பித்அத் மாற்றுக் கருத்துக்கு இடமில்லாத பித்அத், மாற்றுக் கருத்துக்கு இடமுள்ளபித்அத் எனப்பல வகையுண்டு.

எந்த பித்அத்கள் இறை மறுப்பை நோக்கிக் கொண்டு சேர்க்குமோ அவைதான் கடினமான பித்அத் எனப்படும் (அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக) இதற்கு உதாரணமாக நுஸைரிய்யா, துர்ரூஸ், வரம்பு மீறிய ஷியாக்கள், அந்தரகவாதிகளான இஸ்மாயீலிய்யா உள்ளிட்ட பிரிவினரைக் கூறலாம்.

இவர்களைப் பற்றி இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் இப்படிக் கூறினார்கள். "இவர்களின் புறக்கோட்பாடு ராஃபிழா போன்று இருக்கிறது. ஆனால் அந்தரங்கமோ தெள்ளத் தெளிவான இறை மறுப்பாகவே இருக்கிறது.

– தொடரும்

# மதுரையில் கைது செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்கள்

மதுரையில் நடந்த எல்லா குண்டு வெடிப்புகளிலும் காவல்துறையின் கைகளும் இருந்தன. இதை ஆ.மார்க்ஸ் அவர்களின் அறிக்கை தெளிவு படுத்தியது. அதனை “வைகறை வெளிச்சம்” டிசம்பர்-2016 இதழில் வெளியிட்டிருந்தோம். இந்த விவகாரம் நீதி மன்றம் வரை சென்றது. ஆனால் நீதி மன்றத்தில் அது கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இந்த குண்டு வெடிப்புகளுக்குள் சிக்காமல் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள காவல் துறையினர் திட்டமிட்டு NIA என்ற தேசிய புலனாய்வு முகவாண்மையைக் கொண்டு சில அப்பாவி முஸ்லீம்களைக் கைது செய்துள் ளார்கள்.

இந்த கைதுப் படலத்தின் முதல் நிகழ்வு தொட்டே நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கம் NIA நாடகத்தை கவனித்து வந்தது.

நேரில் கண்டவை, பெங்களூரு சென்று வந்த வழக்கறிஞர்கள் தந்தவை, கைது செய்யப்பட்டவர்களை சித்ரவதை செய்த ராணுவ முகாம்களுக்கு சென்று வந்தவர்கள் இவர்களுடைய வாக்குமூலங்களுடன் நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கம் நடத்திய ஆய்வை இங்கே இடம்பெறச் செய்கின்றோம்.

நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பில் கள ஆய்வை நடத்தியவர்கள்... ரஃபின், அபூபக்கர், இக்பால் ஆகியோர். அறிக்கை வடிவம் அபூபக்கர் சித்திக்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

*உளகளவில் தீவிரவாத செயல்கள் புரிவதாக பரப்புரையைக் கட்டவிழ்த்துவிட்டு தமிழகத்தில் மதுரையை சேர்ந்த ஐந்து அப்பாவி இளைஞர்களை கைது செய்துள்ளது தேசிய புலனாய்வு ஏதேன்சி* (NIA). *இவர்களின் அறிக்கைப்படி, ஏப்ரல் 7, 2015ல் ஆந்திராவில் உள்ள சித்தூர், மற்றும் 2016ம் ஆண்டில் ஜூன் 15, கேரளாவின் கொல்லம், ஆகஸ்ட் 1ம் தேதி மைசூர், செப்.12 நெல்லூரில், நவ.1 ம் தேதி மலப்புரத்திலும் என இந்த ஐந்து இடங்களிலும் உள்ள கோர்ட் வளாகத்தில் குண்டுவெடிப்பு நடைபெற்றது. இதை, இந்த ஐந்து இளைஞர்கள் தான் செய்திருக்கிறார்கள் என்ற அடிப்படையில்* UAPA *உட்பட 15 பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.*

*கைது செய்யப்பட்ட நாளிலிருந்து தொடங்கி என்ன நடந்து கொண்டிருக்கின்றது என அறிவதற்காக ஒரு கள ஆய்வை நாம் மேற்கொண்டோம். அதற்காக பாதிக்கப்பட்ட ஐந்து இளைஞர்களின் பெற்றோர்களையும், முதலில் போலிஸாரால் பிடித்து பின்பு விடப்பட்ட நஷீர், ஆசிக் ரஹ்மான் என்ற இரண்டு இளைஞர்களையும் சந்தித்து அவர்களிடம் முக்கியமான தகவல்களை பெற்றுக் கொண்டோம். அதனடிப்படையில்,*

*கைது செய்யப்பட்டவர்களில் அப்பாஸ் அலி (27), சம்சுதீன்(25) இருவரும் 8வது வரை மட்டுமே படித்து பள்ளிப்படிப்பை பாதியில் விட்டவர்கள்.. இவர்களுக்கு தமிழ் கூட சரியாக எழுத வராது என்கின்றனர் இவர்களின் பெற்றோர். முகம்மது அயூப் அலி(25)* B.Sc IT *படித்துள்ளார் காது கேளாதோர் மிஷினை விற்பனை செய்யும் பெரிய நிறுவனத்தில் வேலை செய்து வந்துள்ளார். கரீம் ராஜா(23)* B.Com *படித்துவிட்டு சொந்தமாக கோழிக் கடை நடத்தி வருகிறார். தாவூத் சுலைமான் (23) இன்ஜினியரிங் படித்துவிட்டு சென்னையில் மிகப்பெரிய தனியார் நிறுவனத்தில் பொறியாளராக பணிபுரிந்து வருகிறார்.*

NIA *முதன்மை அதிகாரி பிரதிபா அம்பேத்காரின் தலைமையிலான குழு ஒன்று, இவர்களை கைது செய்யப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன் தான் மதுரையில் முகாமிட்டுள்ளது என காவல்*

துறை வட்டார கள ஆய்வில் தெரிந்து கொண்டோம். ஆனால், இந்த இளைஞர்களை 6 மாதமாக முகாமிட்டு கண்காணித்து வருகின்றோம் என்று பெற்றோர்களிடம் NIA அதிகாரிகள் கூறியுள்ளனர்.

*26.11.2016* சனிக்கிழமை காலை நெல்பேட்டை தயிர் மார்க்கெட்டில் உள்ள சம்சுதீன் வீட்டுக்கு வந்த உள்ளூர் போலிஸ் அதிகாரிகள் அவரை பற்றி விசாரித்துள்ளனர். சம்சுதீன் வெளியில் சென்றிருப்பதாக அவரது தம்பி நஷீர் கூறியதால், சிறிது நேரம் கழித்து ஒரு பெரிய தாடியுடன் (பார்ப்பதற்கு முஸ்லிம் தோற்றத்திலுள்ள) ஒருவர் சம்சுதீன் வீட்டுக்கு வந்து நஷீரை அழைத்து ஜமாத்தார்கள் உங்களிடம் பேச வேண்டும் என்று அழைத்துள்ளார். இதை நம்பி நஷீரும் அவருடன் செல்ல, சிலஅடி தூரம் கடந்ததும் ஒரு விபத்து கேஸில் உன் சகோதரன் சம்சுதீன் பற்றி விசாரிக்க வேண்டும் எனக் கூறி நஷீரை இன்னோவா காரில் ஏற்றி அவரது போனை பிடுங்கிக் கொண்டு கண்களை கட்டி ஆளில்லாத இடத்திற்கு தூக்கிச் சென்று கட்டையால் கால்மூட்டில் கடுமையாக அடித்து விசாரித்துள்ளனர். இதனால் இன்று, முழங்கால் பாதிப்படைந்து நடப்பதற்கே சிரமப்படுகிறார் நஷீர். பின்னர் இதே போல் சம்சுதீனையும் விசாரித்து விட்டு விட்டுவோம் என்று கூறி நஷீரை வீட்டிற்கு அருகில் இறக்கி விட்டு போனையும் திருப்பி கொடுத்து சென்றுள்ளனர் NIA அதிகாரிகள்.

இதைக்கேட்ட சம்சுதீன் தானாகவே *27.11.2016* ஞாயிற்றுக்கிழமை காலை போன் செய்து தான் விசாரணைக்கு ஒத்துழைப்பு தருவதாகவும் எது சம்பந்தமான விசாரணை எனவும் கேட்டுள்ளார். ஆனால் அதற்கு பதில் இல்லை. ஒத்துழைக்க தயார் என்று சொன்ன சம்சுதீனை பெரும் போலிஸ் படையுடன் வந்த NIA, மக்கள் நெருக்கம் மிக்க பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி கைது செய்துள்ளது.

அதே நாளில் கே.புதூர் பகுதியில் மாலை தொழுகைக்காக சென்றிருந்த அயூப் அலி, ஆசிக் ரஹ்மான் ஆகிய இருவரையும் பிடித்து சென்றூள்ளது NIA. சிறிது நேரம் கழித்து அதே பகுதியில் கரீம் ராஜா என்பவரையும் அள்ளி சென்றுள்ளனர்.

அதே தினத்தில் இரவு *1.30* மணிக்கு கரிம்ஷா பள்ளிவாசலுக்கு அருகில் உள்ள பெயிண்டர் அப்பாஸ் அலி வீட்டுக்கு வந்த அதிகாரிகள் அப்பாஸை கைலி பனியனுடனே இழுத்து சென்றுள்ளனர். பெற்றோருக்கு எந்தவொரு சரியான தகவலையும் சொல்லாமல் மிரட்டி தூக்கிச் சென்றுள்ளனர்.

இந்த வழக்கில் மேலும் கைது செய்யப் பட்டுள்ள கரிம்ஷா பள்ளிவாசல் பகுதியை சார்ந்த தாவூத் சுலைமான் ஞாயிற்றுக்கிழமை இரவு மதுரையிலிருந்து சென்னைக்கு பஸ் ஏறியிருக்கிறார். சென்னையில் மறுநாள் காலை *28.11.2016* திங்கட்கிழமை கைது செய்யப்படுகிறார்.



மொத்தம் ஏழு இளைஞர்கள் இரு நாளில் கைது செய்த NIA ஆசிக் ரஹ்மான், நஷீர் ஆகிய இருவரையும் 'சிறப்பு கவனிப்புக்கு' பின்பு விடுவித்துள்ளது.

இதில், விடுவிக்கப்பட்ட ஆசிக் ரஹ்மான் நம்மிடம் சொல்லும் போது, என்னை விசாரணை என்ற பெயரில் தூக்கி சென்றனர். பிறகு மதுரை மேலூர் அருகில் இடையப்பட்டியில் உள்ள இந்தோ-திபெத் ராணுவ முகாமில் அடைத்து வைத்து விசாரணை அதிகாரிகள் ஒவ்வொருவராக மாறி மாறி பெயிண்டர் அப்பாஸ் அலியைப் பற்றியும் அயூப் அலியின் செல்போனைப் பற்றியும் கேள்வி கேட்டுக் கொண்டே இருந்தனர். இவ்விசாரணையை பற்றி ஆசிக் ரஹ்மான் நம்மிடம் கூறும் போது,

**"ஒவ்வொரு கேள்விக்கும் நான் பதில் சொல்வதற்கு முன்பாகவே அவர்களே ஏதோ பதிலை முடிவு செய்தது போலவே தான்**


**என்னிடம் நடந்து கொண்டனர்.** *விசாரணை முடிந்தவுடன் என்னை பேருந்தே வராத காட்டுப் பகுதியில் இறக்கி விட்டு போய்விட்டார்கள். அங்கிருந்து வீட்டுக்கு 28.11.2016 திங்கட்கிழமை வந்து டிவியில் செய்தியை பார்க்கும் போது மிகவும் அதிர்ந்து போனேன். கண்டிப்பாக என் நண்பர்கள் அப்படி செய்பவர்களில்லை.*

*'ரொம்ப நல்லவங்க அவங்களாம்'. நாங்க பெருநாளுக்கு (ரம்ஜான்) எல்லோரும் சந்தோஷ மாக நின்று எடுத்த போட்டோவ போட்டு தீவிரவாதிகள்னு எல்லா ஊடகமும் செய்தி வெளியிடுகிறது. எங்களுக்கு ஒன்னும் தெரியாது" என்றார்.*

**சம்சுதீன் வீட்டில்**

*கைது செய்யப்பட்ட சம்சுதீனின் வீட்டுக்கு சென்று அவரது பெற்றோரையும் அடிபட்ட தம்பி நசீரையும் பார்த்த போது,* **'என் பையன் அப்பாவி அவனுக்கு எதுவும் தெரியாது 7வது வரைக்கும் தான் படிச்சிருக்கான். என் சின்ன பையனோட கால உடைச்சு அதுக்கப்பறம் பெரிய வனையும் கூட்டிட்டு போய் தீவிரவாதினு சொல்றாங்க அவனுக்கு தமிழையே சரியா படிக்கவும் தெரியாது எழுதவும் தெரியாது! இவன் போய் எப்படிங்க இவ்ளோ பெரிய காரியம்லாம் செய்ய முடியும். போன வருஷம் வெள்ளம் வந்தப்ப கூட இங்கிருந்து அங்க போய் துணி, சாப்பாடுலாம் கொடுத்து உதவு னான் ஆனா அதெல்லாம் யாரும் நினைச் சுக்கூட பாக்கல. பத்திரிக்கைகாரங்களுக்கு மனசாட்சியே இல்லையா இப்படிலாம் செய்தி போடுராங்க வெளில தலை காட்ட முடியல! வீட்டையும் காலி பண்ண சொல்றாங்க என் பொண்ணுக்கு கல்யாணம் ஆயிருச்சு அங்கயும் போய் போலிஸ்காரங்க விசாரிக் கிற பேர்ல கொடுமை பண்றாங்க. இதனால மாப்பிள்ளைக்கும் வேலை போச்சு' என்று கதறுகிறார் சம்சுதீனின் தாயார். நடக்கவே சிரமப்படும் சம்சுதீன் தம்பி நஷீர் கூறும் போது,**

**"அவனுக்கு போன்ல வர்ர கால (Call) பேச தெரியும் வைக்க தெரியும் ஒரு Contact சேவ் பண்ணனும்னா கூட நான் தான் செஞ்சு தருவேன் அது கூட அவனுக்கு செய்ய தெரியாது. அவன போய் இப்டிலாம் சொன்னா என்ன செய்றது?" என்றார்.**



**அப்பாஸ் அலியின் வீட்டில்**

*கைது செய்யப்பட்ட இளைஞர் பெயிண்டர் அப்பாஸ் அலியின் வீட்டிற்கு சென்ற போது அவரது தந்தை, அம்மா, தம்பி இஸ்மாயில் ஆகியோர் இருந்தனர். 'ஞாயிற்றுக்கிழமை இரவு 1.30 மணிக்கு வந்து எங்க பையன அப்படியே கைலி பனியனுடன் இழுத்துட்டு போனாங்க நாங்க என்னனு கேட்டதுக்கு எங்கள மிரட்டு னாங்க! சட்டை போட்டாவது கூட்டிட்டு போங் கனு சொன்னதும் துணிய போய் எடுத்துட்டு வாங்கனு சொன்னங்க எடுக்க நாங்க வீட்டுக்குப் போனதும் அப்பாஸ் அலிய காருக்குள்ள இழுத்து போட்டு எதுவும் சொல்லாம போய்ட்டாங்க.*

*கொஞ்ச நேரத்திலேயே ஒரு வழக்கறிஞர் உதவியோட இரவு 2.00 மணிக்கு விளக்கத் தூண் B1 போலிஸ் ஸ்டேசனுக்கு சென்று புகார் கொடுத்தோம். புகார் பதிவு செஞ்சு ரஷீது கேட்டதுக்கு ஆள் இல்லை காலைல வாங்கனு சொல்லிட்டாங்க. அப்புறம் காலைல போன துக்கு நீங்க கொடுத்த கம்ப்ளைன்ட் தப்பா இருக்கு சரி பண்ணி கொண்டு வாங்கனு சொன் னாங்க! சரி செஞ்சு கொண்டு போய் கொடுத்து ரசீது கேட்டதுக்கு ஆள் இல்லை அப்பறம் வாங் கனு சொல்லிட்டாங்க! வீட்டுக்கு வந்து பாத்தா என் புள்ளைய டி.வில தீவிரவாதினு சொல் றாங்க! அவன் அப்பாவிங்க இதுவரைக்கும் அவன பத்தி எதுவும் தப்பா யாரும் சொன்ன தில்லை.*

வட்டி வாங்காதம்மா, வரதட்சணை கல்யாணத்துக்கு போகதம்மானு என் கிட்ட சொல்லிக்கிட்டே இருப்பான்.அதிகாரிகள்ட கேட்டதற்கு கூட அவங்க விசாரிச்சிட்டு இருக் கிறோம்னு தான் சொல்றாங்க ஆனா பத்தி ரிகைல இல்லாததெல்லாம் எழுதுறாங்க. இவங்களுக்கெல்லாம் மனசாட்சியே இல்ல. இப்ப வீட்டையும் காலி பண்ணுங்கனு வீட்டுக் காரங்க சொல்றாங்க' என்று குடும்பத்தார்கள் அனைவரும் கதறினார்கள்.

**தாவூத் சுலைமான் வீட்டில்**

*கைது செய்யப்பட்ட இளைஞர் பொறியாளர் தாவூத் சுலைமான் வீட்டிற்கு சென்ற போது, வீட்டில் தாவூதின் தந்தையும் அவரது சகோதரிகளும் இருந்தார்கள். அவர்கள் நம்மிடம் சொன்னது, 'பண்ணி ரெண்டாவதுல நல்ல மார்க் எடுத்ததுனால ஈரோடுல இருக்கிற கல்லூரில கவுன்சிலிங்ல சேர்ந்தான். கல்லூரி லயும் ரொம்ப நல்லா படிப்பான். அங்கேயே TCS கம்பெனில கேம்பஸ் இண்டர்வியூல செலக்ட் ஆகிட்டான். ஐஞ்சு மாசம் வீட்லயே இருந்தான் ஜனவரிலதான் வேலைக்கு போய் சேர்ந்தான். எங்கயும் வெளியே சுத்துனது கிடையாது! ரொம்ப நல்ல பையன்னு தான் எல்லாருமே சொல்வாங்க. இந்த அதிகாரிகள் சொல்றதுல்ல எதுவுமே உண்மை இல்ல! பொய் வழக்குனு எல்லாருக்கும் நல்லாவே தெரியுது! முஸ்லிம் இளைஞர்கள்னா படிச்சு பெரியா ஆளா வரக்கூடாதா?. நோன்புக்காலம் வந்துச்சுனா எல்லாத்துக்கும் கஞ்சி, வடை எல்லாமே இவங்களாம் தயார் பண்ணி மக்களுக்கு கொடுப்பாங்க! பத்திரிக்கைக் காரங்களும் போலிஸ்காரங்களும் இப்படிலாம் ஏன் செய்றாங்கனு தெரில ஆனா அல்லாஹ் அநியாயம் செய்பவர்களை சும்மா விட மாட்டான்' என ஆதங்கப்பட்டார்கள்.*

**அய்யூப் அலியின் வீட்டில்**

*கைது செய்யப்பட்ட இளைஞர் அய்யூப் அலியின் வீட்டிலுள்ளவர்கள் அவர்களுக்கு பத்திரிக்கை மற்றும் காவல்துறையினர் கொடுத்த தொல்லையால் வீட்டை விட்டு ஓடி விட்டார்கள். சொந்தக்காரர்களின் வீட்டில் இருந்தார்கள்! அங்கேயே சென்று நாம் பார்க்கும் போது அவர்கள்,* 'அய்யூப்புக்கு கல்யாணம் ஆகி இரண்டு வாரம் தான் ஆச்சு அதுக்குள்ள இப்படி கைது பண்ணிட்டாங்க. அவனுக்கு எதுவுமே தெரியாது.

வேலைக்கு கூட அதிகமா லீவ் போட மாட்டான். எல்லார்டயும் நல்ல புள்ளைனு தான் பேர் வாங்கிருக்கான். இஸ்லாமிய புத்தங்கள் நிறைய படிப்பான்! லைப்ரரி போய் புத்தகம் வாங்கிட்டு வந்து படிச்சிட்டு இருப் பான். இத தவிர அவன் எதுவுமே பண்ண தில்லை. ரம்ஜானுக்கு புள்ள எடுத்த போட் டோவ எடுத்து தீவிராதினு சொல்லி போடு றாங்க! இப்படி தப்பு தப்பா போடுறவங்களுக் குத்தான் தண்டனை கொடுக்கனும். என் புள்ளை எந்த தப்பும் பண்ணாதவன் அவன ஏன் இப்படி கொடுமைப்படுத் துறாங்க!' என்று கதறினார் அய்யூபின் தாயார்.

அய்யூப் அலிக்கு பெண் கொடுத்தவர் களின் வீட்டில் கேட்ட போது, 'ஊர் முழுக்க மாப்பிள்ளைய பத்தி விசாரிச்சு தான் பொன்னு கொடுத்தோம் எல்லோரும் ரொம்ப நல்ல வருனு தான் சொன்னாங்க அவர் வேலை பார்த்த கடைக்காரரும் கூட ரொம்ப நல்ல பையனு தான் சொன்னாரு! தாடி வச்சதுக் காகலாம் தீவிரவாதினு கைது பண்ணுவாங் கனு எங்களுக்கு தெரியாது. இப்ப எங்க பொண்ணு வாழ்க்கையே போச்சு ஆறு மாசம் கண்காணிப்புல இருந்தார்னு சொல்றாங்க கல்யாணம் ரெண்டு வாரத்துக்கு முன்னாடி தான் ஆச்சு ஏன் ஒரு வார்த்தை கூட சொல் லல பையனோட சேத்து ஒரு பொண்ணு வாழ்க்கையையும் திட்டம் போட்டு அழிச் சுட்டாங்க' என்றார்கள்.

**கரீம் ராஜாவின் வீட்டில்**

*இறுதியாக கைது செய்யப்பட்ட இளைஞர் கரீம் ராஜாவின் தந்தையை சந்திக்கும் போது அவர் மிகவும் வேதனைப்பட்டு பேசினார்,* 'என் கடை 30 வருஷமா கோவிலுக்கு பக்கத்துல தான் இருக்குது என் பையனும் வந்து அடிக்கடி கடைய பாத்துக்குவான். எல்லார்டையும் அவனுக்கு நல்ல பெயர் தான்! ஆனா என்ன பண்றது போலிஸ் நினைச்சா என்னவேனாலும் செய்வாங்க. உண்மைய நீருபிக்கிறதுக்கு வக்கீலுக்கு

**எப்படியும் அதிகம் செலவாகும்னு சொல்றாங்க! நான் தினக்கூலியாள் கடைய திறந்தாதான் சாப்பிட முடியும். இங்கயும் வந்து பத்திரிக்கை காரங்க அடிக்கடி தொந்தரவு பண்றாங்க. என் கடைய உடச்சு என்ன இருக்குனு வந்து போலிஸ்காரங்க சோதனை பண்ணிட்டு போறாங்க! என் மகனோட போகட்டும் இனியும் இஸ்லாமிய இளைஞர்களுக்கு இப்படியொரு கொடுமை நடக்காம பாத்துக்கோங்க! இதெல்லாம் எங்க பிள்ளைகளோடயே முடிஞ்சு போயிரட்டும்.'**

### NIA -வின் அடாவடி, கமிஷனர் மறுப்பு

இந்த ஐந்து இளைஞர்களும், NIA அதிகாரிகளால் எந்த காரணமும் சொல்லாமல் இழுத்து செல்லப்பட்ட பிறகு தன் பிள்ளைகளை காணாமல் துடித்த பெற்றோர்கள் காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். சம்சுதீனின் குடும்பத்தவர்கள் இரவு 2.00 மணிக்கே சென்று தனது மகனை சில நபர்கள் இழுத்து சென்றனர் கண்டுபிடித்து தரக்கோரி புகார் செய்துள்ளனர்.

ஆனால் புகாருக்கான ரசீது தரப்படவில்லை காலையில் வா என்றிருக்கின்றனர் காவல்துறையினர். மறுநாள் காலை சென்றதும் ஆள் இல்லை மதியம் வா என்று அலைக்கழிக்கப்பட்டனர். இதே போல் கரீம்ராஜா, அய்யூப் அலியின் குடும்பத்தவர்களும் கமிஷனர் அலுவலகம் சென்று புகார் அளித்தனர். அங்கும் புகாருக்கான ரசீது கேட்டதற்கு காவல்துறையினர் தரவில்லை. ஒரு புகார் காவல் நிலையத்திற்கு வரும் போது FIR அல்லது புகார் பதிவு செய்யப்பட்டதற்கான ரசீதாவது தரப் பட வேண்டும். ஆனால் எதுவுமே தரப்படாமல் கைது செய்யப்பட்ட இளைஞர்களின் குடும்பத்தார்கள் அலைய விடப்பட்டிருக்கிறார்கள். ஆனால், கைது நடவடிக்கை ஊடகங்களில் வெளி வந்ததை தொடர்ந்து கமிஷனர் தனக்கு இந்த கைது நடவடிக்கை பற்றி எதுவும் தெரியாது என்கிறார்.

தொலைக்காட்சி செய்திகளை பார்த்து தான் குடும்பத்தினருக்கு தமது மகன் கைது செய்யப்பட்டிருப்பது தெரிய வருகிறது. இளைஞர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தெரியாத நிலையில் அய்யூப் அலி மற்றும் கரீம் ராஜா குடும்பத்தவர்கள் ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்தார்கள். அதன் விளைவாக, அடுத்த நாள் கைது செய்யப்பட்ட தாவூத் சுலைமானை தவிர்த்து இளைஞர்களின் அனைவரது வீட்டிற்கும் NIA அதிகாரிகள் போன் செய்து 29.11.2016 அன்று மேலூர் கோர்டுக்கு வர சொன்னார்கள். ஆட்கொணர்வு மனுவுக்குப்பின் கைது பற்றிய தகவல்கள் தரப்பட்டன.

மேலூர் கோர்ட்டில் ஆஜர்படுத்தும் போது உலகின் பெரும் ஆபத்திற்குள்ளானவர்களை பிடித்து வருவது போல் கருப்பு முகமூடியில் முகத்தை மூடி 100க்கும் மேற்பட்ட போலிஸ் படையுடன் கையில் விலங்கிட்டு அப்பாவி இளைஞர்கள் மிகப்பெரும் தீவிரவாதிகள் போல் இழுத்து வரப்பட்டனர். கோர்ட்டில் இளைஞர்கள் தனது பெற்றோர்களிடம் பெரிய போராட்டத்திற்குப்பின் சிறிது நேரம் பேச அனுமதிக்கப்பட்டனர். அப்போது, ஆஜர்படுத்தப்பட்ட நான்கு இளைஞர்களும் சத்தியமாக தாங்கள் எதுவுமே செய்யவில்லை என்றும் இறைவனிடம் பிரார்த்தியுங்கள் என்றும் அழுதுள்ளனர்.


### பெங்களூரு சிறையில்

கைது செய்யப்பட்ட பொறியாளர் தாவூத் சுலைமான் மட்டும் சைதாப்பேட்டை கோர்ட்டில் 29/11/2016 திங்கட்கிழமை ஆஜர்படுத்தப்பட்டு பெங்களூருக்கு அழைத்து செல்லப்பட்டார். டிசம்பர் 1ம் தேதி NIA அதிகாரிகள் ஐந்து இளைஞர்களையும் ஒன்றாக பெங்களூர் கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். பெங்களூர் கோர்ட்டில் வைத்து தாவூத் சுலைமானின் மாமா தாவூத்தை சந்தித்த போது தான் எந்த தவறும் செய்யவில்லை என்று அவரிடம் அழுதுள்ளார்.

இளைஞர்கள் பெங்களூரில் ஆஜர்படுத்தப்பட்ட பிறகு 10 நாட்கள் காவலில் எடுத்து மீண்டும் மதுரை மேலூருக்கு அருகில் உள்ள இடையப்பட்டி ராணுவ முகாமிற்கு ஐந்து இளைஞர்களும் கொண்டுவரப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அதை தொடர்ந்து, 03/11/2016 அன்று கைது செய்யப்பட்ட ஐந்து இளைஞர்களின் வீட்டிலும் NIA அதிகாரிகளால் சோதனை செய்யப்பட்டது.

### வீட்டில் சோதனை

ஒவ்வொரு இளைஞர்களின் வீட்டிலும்



சோதனை செய்ய NIA அதிகாரிகள் குறைந்தது 30 போலிஸார்களுடன் வந்தனர். சோதனை செய்வோர் அனை வரையும் வீட்டிற்குள் நுழை யும் முன் விசாரிக்க வேண்டும் அருகில் ஒரு அரசு அதிகாரி யுடன் தான் சோதனை செய்ய வேண்டும் என்பதெல்லாம் சோதனைநடைமுறை. ஆனால் அதெல்லாம் அதிகாரிகள் யாரும் கடைபிடிக்கவே இல்லை. சோதனை என்ற பெயரில் அதிகாரிகளே தாங்கள் கொண்டு வந்த பொருளை வைத்து விட்டு தீவிரவாதத் திற்கு ஆதாரமாக அவர்களே எடுத்த போது மாட்டிக் கொண்ட சம்பவங் களும் தாவூத் சுலைமான் வீட்டில் அதிகாரிகள் சோதனை செய்த போது நடந்தது.

NIA அதிகாரிகள் சம்சுதீன் வீட்டில் சோதனையிட்ட போது அவருடைய ரேசன் கார்டு போன்ற அரசு ஆவணங்கள் மட்டுமே கிடைத்தது. வேறு எதுவும் அதிகாரிகள் எதிர் பார்த்த அளவில் கிடைக்கவில்லை.

**இரத்த வாந்தி**

நெல்பேட்டை தயிர்மார்க்கெட்டில் மூன் றாவது மாடியில் உள்ள அப்பாஸ் அலியின் வீட்டில் சோதனையிட்ட போது திருக்குர்ஆன், பள்ளிச் சான்றிதழ், சம்சுதீன் குடும்பத்தார்கள் பயன் படுத்திய போன்கள் ஆகியவற்றை எடுத் துள்ளனர். அப்பாஸ் அலியின் தாயார் ஏற்கனவே நெஞ்சு வலி கொண்டவர் அவருக்கு தேவையான எந்தவொரு முதலுவிகளையும் செய்யாமல் வீட்டின் மூலையில் குற்றவாளியை போல் நிற்க வைத்து உங்கள் வீட்டில் ஏன் இத்தனை போன்?, வீட்டில் இத்தனை மின் சாதனங்கள் இருக்கும் போது ஒரு டெஸ்டர் கூட உங்களிடம் இல்லையா? என்று தேவையில்லாத கேள்விகளை கேட்டு மிரட்டியுள்ளனர்.

இந்த மிரட்டல்களினால் அப்பாஸ் அலியின் தாயாருக்கு பயத்தில் ஏற்கனவே ஆப்ரேஷன் செய்யப்பட்டதில் போடப்பட்டிருந்த தையல் பிரிந்து சோதனையின் போதே ரத்த வாந்தி எடுத்துள்ளார். ஆனால், இதனை எதையுமே கவனத்தில் கொள்ளாத சோதனை அதிகாரிகள் ஒட்டுமொத்த குடும்பத் தார்களையும் குற்றவாளியை கையாளுவதை விடவும் கேவலமாக நடத்தியுள்ளனர்.

அப்பாஸ் அலியின் வீட்டில் ரோஜா செடிக்கு போடப்படும் உரம் வைக்கப்பட்டி ருந்தது. அந்த உரத்தையும் இரண்டு பாக்கெட் கவர்களில் அதிகாரிகள் எடுத்துக் கொண்டார் கள். அப்பாஸ் அலியின் தம்பி இஸ்மாயில் பாத் ரூமிற்கு செல்லும் போது கூடவே அதிகாரிகள் பாத்ரூமிற்குள் நுழைந்து எதையும் எங்கள் முன் தான் செய்ய வேண்டும் என்று மிரட்டியுள்ளனர். சோதனை முடிந்து செல்லும் போது **"நாம் நினைத்த மாதிரி எந்த ஒரு பொருளும் சிக்க வில்லையே"** என்று அதிகாரிகள் பேசிக் கொண்டார்கள் என்பதை அப்பாஸ் அலியின் வீட்டிற்கு கீழ்தளத்தில் குடியிருந்தவர்கள் கூறுகிறார்கள்.

கைது செய்யப்பட்ட கரீம் ராஜா வீட்டில் சோதனை செய்த போது பயன்படுத்தப்பட்ட சிம் கார்டுகள், அரசாங்கம் கொடுத்த லேப்டாப், உடைந்த HTC மொபைல், கரீம் ராஜாவின் சான்றிதழ்களை NIA அதிகாரிகள் கையகப்படுத் தினர்.

சோதனை முடிந்தவுடன் எதையெல்லாம் எடுத்தோம் என்று ஓர் ஆவணமாக தெளிவாக எழுதி வீட்டில் உள்ளவர்களிடம் அதிகாரிகள் கண்டிப்பாக கையெழுத்து வாங்கிக் கொண்டு நகலை வீட்டாரிடமே ஒப்படைக்க வேண்டும். இந்த வகையில் அப்பாஸ் அலியின் வீட்டிலும், சம்சுதீன் வீட்டிலும் வக்கீல் முன் சோதனை நடைபெற்றதால் என்ன எழுதியிருக்கிறது என்பதை தெரிந்து கையெழுத்திட்டுள்ளனர் பெற்றோர்கள். ஆனால் கரீம்ராஜா வீட்டில் யாரும் படித்தவர்கள் இல்லை. அனைத்தும்

ஆங்கிலத்தில் இருந்ததால் எதுவும் தெரியா மலேயே கையெழுத்திட்டுள்ளனர்.

### NIA அதிகாரிகளை கேள்வி கேட்டு மடக்கிய சகோதரி

தாவூத் சுலைமான் வீட்டில் நடந்த சோதனை யின் போது பொது மக்கள் கூட்டம் வீட்டிற்கு வெளியில் அதிகமிருந்ததால் அதிகாரிகளால் ஏமாற்ற முடியவில்லை. வீட்டின் உள் ஒவ்வொரு இடத்தில் சோதனை செய்யும் போதும் தாவூத்தின் தந்தை அருகிலிருந்து கண்காணித்துக் கொண்டிருந்தார். தன் கண் முன்னே அனைத்தும் சோதனையிடப்பட வேண்டும் என்று முன்பே NIA குழுவின் தலைமையதிகாரி பிரதிபா அம்பேத்காரிடம் சொல்லியிருந்தார் தாவூத்தின் தந்தை. அதிகாரிகளில் ஒருவர் முதல் மாடியில் உள்ள அறையின் சாவியை கேட்டதும் தாவூத்தின் சகோதரி கொடுத்துள்ளார்.

தாவூத் வீட்டு மாடிக்கு செல்ல வீட்டிற்கு வெளியில் வந்தே சென்றாக வேண்டும் அதனால் வெளியில் இருந்த பொது மக்களும் நடப்பதை பார்த்துக் கொண்டே இருந்தனர். அதிகாரிகள் சோதனையிடுவதாக கூறி வேகவேகமாக மாடிக்கு சென்றனர். பின்னால் தாவூத்தின் குடும்பத்தார்கள் மாடிக்கு செல்வதற்கு முன்பாகவே அதிகாரி ஒருவர் கையில் ஒரு செல்லை எடுத்து மாடியிலிருந்து எடுத்தோம் என்றார். ஆறு மாதமாக பூட்டியிருந்த அறையில் இவ்வளவு தெளிவாக உங்களால் எப்படி சென்ற நிமிடத்தில் ஒரு போனை அதுவும் தூசில்லாமல் எடுக்க முடிந்தது என்று தாவூத்தின் சகோதரிகள் கேள்வி கேட்க தொடங்கினர். அருகில் தலயாரி பாஸ்கரனை வைத்து தான் எடுத்தோம் வேண்டுமானால் கேளுங்கள் என்று NIA அதிகாரிகள் சொன்னதும், மேல் அறையில் செல்பில் இருந்துதான் எடுத்தோம் என்று சொன்ன தலயாரி பாஸ்கரனிடம் எந்த செல்ஃப் என்று கேட்டதும் இல்லை இல்லை அது மேலே இருந்த ரேக்கில் இருந்து எடுத்தோம் என்று பல்டியடித்தார்.

இந்த சம்பவங்களையெல்லாம் வீட்டின் வெளியிலிருந்து பொது மக்கள் பார்த்து கொண்டிருந்தார்கள். போனை அப்போதே சோதனை செய்யுங்கள் என்று குடும்பத்தார்கள் சொல்லும் போது உள்ளே ஒரு போட்டோ மட்டும் இருந்ததாகவும் அவர் யாரென்றே தெரியவில்லை என்றும் தாவூத் குடும்பத்தார்கள் சொல்கிறார்கள். கடைசியாக அந்த செல்போனி லிருந்து 11/11/2016 அன்று மட்டும் ஒரு அழைப்பு சென்றுள்ளது. சோதனை முடிந்து எதுவெல்லாம் எடுத்தது என்று கையெழுத்து வாங்கும் போது அதில் கூறப்பட்டுள்ள 8 மற்றும் 9 வது பொருள்கள் மட்டுமே இங்கிருந்து எடுக்கப்பட்டது என்று தாவூத்தின் தந்தை ஒப்புக் கொள்வதாக கையெழுத்திட்டார்கள். இந்த 8 மற்றும் 9 ல் குறிப்பிட்ட பொருளும் மாடி அறையிலிருந்து பாலித்தின் பாக்கெட்டில் எடுக்கப்பட்ட தூசியே. இந்த சோதனை நாடகத்தை வெளியிலிருந்து பார்த்து கொண்டி ருந்த பொது மக்களும் சோதனை முடியும் வரை அதிகாரிகளுக்கு எதிராக கோஷம் எழுப்பிக் கொண்டிருந்தனர்.

### மர்ம முகமூடி சோதனை

கே. புதூரில் விஸ்வநாத நகரில் உள்ள அய்யூப் அலியின் வீட்டுக்கு வந்து சோதனையிட்ட அதிகாரிகள் சோதனையிட்டு விட்டு அய்யூப்பின் பழைய வீட்டுக்கு அழைத்து சென்றுள்ளனர். குடும்பத்தார்களையெல்லாம் வெளியே நிறுத்தி விட்டு ஒரு முகமூடி அணிந்தவரை வீட்டுக்குள் கூட்டி சென்று வீட்டை அடைத்து விட்டனர். வீட்டிற்கு உள்ளே அந்த முகமூடி நபருடன் NIA அதிகாரிகள் மட்டுமே இருந்தனர்.

ஆனால் சோதனை செய்யும் போது உடன் ஒரு அரசு அதிகாரி இருக்க வேண்டும் என்பது தான் சோதனை வழிமுறை. இதுவெல்லாம் பின்பற்றப்படவில்லை. அதிகாரிகள் வெளியே வந்த பிறகு என்ன நடந்தது? என்ன செய்தீர்கள்? என குடும்பத்தார்கள் கேட்ட கேள்விக்கு பதில் இல்லை. டி.வி மட்டும் நகர்த்தப்பட்டிருந்தது என்று அய்யூபின் தந்தை கூருகிறார்.

இதுவெல்லாம் எடுத்தோம் என்று ஒரு ஃபார்ம் தர வேண்டுமே அது எங்கே என அய்யூபின் பெற்றோர்கள் கேட்டதற்கு நாளை வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லியுள்ள னர். அடுத்த நாள் இராணுவ முகாம் சென்ற போதும் அந்த படிவத்தை அதிகாரிகள் தராமல் "சூடா ஒரு காபி கொடுக்கட்டுமா" என்று எகத்தாளமாக பதில் சொல்லியுள்ளார்கள். மற்ற நான்கு பேரின் வீட்டில் சோதனையிட்ட

போதும் என்னென்ன எடுத்தோம் என்ற படிவத்தை தந்துள்ளார்கள். ஆனால் அய்யூபின் குடும்பத்தாருக்கு மட்டும் இப்போது வரை எதுவும் தரப்படவில்லை.

சோதனை என்ற பெயரில் சித்ரவதைக்குப் பின் நாடகங்கள் எல்லாம் நடந்து முடிந்த பிறகு, நாளை உங்கள் மகன்களை இடையப்பட்டி ராணுவ முகாமிற்கு வந்து பார்க்கலாம் என்று கைது செய்யப்பட்ட ஐந்து பெற்றோர்களிடமும் கூறியுள்ளனர். அடுத்த நாள் தனது மகன்களை பார்க்க சென்ற அனைத்து பெற்றோருக்கும் பெரிய அதிர்ச்சி! அத்தனை பேரும் சொல்லி வைத்தாற் போல் நாங்கள் தான் இதை செய்தோம் எங்களை மன்னித்து விடுங்கள் என்று பெற்றோர்களிடம் கூறியுள்ள னர். போலிஸார்களின் முன்னிலையில் தான் பெற்றோர்கள் பேச அனுமதிக்கப்பட்டனர். ஐந்து இளைஞர்களும் கூறிய ஒரே பதில் நாங்கள் தான் செய்தோம் எங்களை மன்னித்துவிடுங்கள்! இந்த பதிலைக் கேட்டவுடன் அடுத்து பெற்றோர்கள் ஏன் இப்படி செய்தாய்? என்ன காரணம்? என்று கேட்டதற்கும் நான் தான் செய்தேன் தெரியாமல் செய்துவிட்டேன் என்று சொன்னதையே திரும்ப திரும்ப சொல்லியுள் ளார்கள் இளைஞர்களின் வேதனையுடன் இவர்கள் பெற்றோர்களோ இதனை அவர்களாக சொல்லவில்லை சொல்ல வைக்கப்படிருக்கிறார் கள் என்றே அனைத்துப் பெற்றோர்களும் கூறினார்கள்.

ஒவ்வொரு இளைஞராக தனித்தனியாக அவர்களது பெற்றோர்களிடம் பேச அனுமதிக் கப்படுகிறார்கள். ஒரு இளைஞர் தனது பெற்றோருடன் பேசிக் கொண்டிருக்கும் போது முகமூடியை மூடி இன்னொருவரை நிறுத்தி தூரத்திலிருந்து பார்க்க வைக்கிறார்கள். அது ஏன் என்று தெரியவில்லை என்கிறார்கள் பெற்றோர்கள் (அவன் நாங்கள் சொன்னது போல் சொல்கிறான் நீயும் சொன்னால் விரைவில் அனுப்பிவிடுவோம் என்று மறைமுகமாக குற்றத்தை ஒப்புக் கொள்ளச் சொல்லி மிரட்டும் போலிசாரின் வழிமுறை ).

**NIA வின் பசப்பு மொழி**

NIA அதிகாரிகள், சம்சுதீன், அப்பாஸ் அலி இருவரிடமும் நீங்கள் படிக்காதவர்கள் என்பதனால், நீங்கள் அப்பாவியாகத் தான் இருக்க முடியும் உங்களுக்கு எதுவும் தெரியாது நாங்கள் சொல்லும் குற்றத்தை ஒப்புக் கொள்ளுங்கள் குறைந்த தண்டனையை நாங்கள் வாங்கித் தருகிறோம் என்றும். அதே போல், மற்ற மூன்று இளைஞர்களிடம் நீங்கள் படித்தவர்கள் வாழ்க்கையை வீணடிக்க வேண்டாம் எப்படியும் மிக அதிகமான தண்டணையே உங்களுக்கு கிடைக்கும் குற்றத்தை ஒப்புக் கொள்ளுங்கள் உங்களுக்கு சிறைக்கு உள்ளேயே மேல் படிப்பு படிக்க வசதி செய்து தருகிறோம் குறைந்த பட்ச தண்டனையை பெற்றுத் தருகிறோம் என்று பசப்பு வார்த்தைகளை பேசியுள்ளதாக ஐந்து இளைஞர்களும் தங்களது பெற்றோர்களிடம் கூறியுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள தாவூத் சுலைமான் தவிர மற்ற அனைவரும் வாடகை வீட்டில் வசித்து வரகூடிய தினக்கூலிகள். இந்த ஐந்து இளைஞர்களையும் நம்பியே ஒவ்வொருவரது வீட்டின் பொருளாதாரமும் உள்ளது. இப்போது எல்லாவற்றையும் இழந்து அநாதையாக தாங்கள் நிற்பதாக பாதிக்கப்பட்டோரின் பெற்றோர்கள் கருதுகிறாகள்.

**நூலகம் நடத்தினாலும் தீவிரவாதம்..?**

இந்த ஐந்து இளைஞர்களுக்கும் உள்ள ஒரே தொடர்பு தாருல் இல்ம் நூலகம். இந்த நூலகத்தை பெயிண்டர் அப்பாஸ் அலி ஆரம்பித்து மற்றவர்கள் துணையுடன் நடத்தி கொண்டிருந்தார். பொது அறிவு புத்தகம், இஸ்லாமிய புத்தகம், பாடநூல்கள் போன்ற புத்தகங்கள் நூலகத்தில் வைக்கப்பட்டிருந்தது. இது போக, ஒவ்வொரு ரம்ஜானின் போதும் நோன்பு வைப்பவர்களுக்கு நோன்பு திறக்க இலவசமாய் எல்லா ஏற்பாடுகளையும் இந்த இளைஞர்கள் செய்து தருவார்கள். சென்ற வருடம் டிசம்பர் மாதம் சென்னையில் வெள்ளம் வந்த போது நூலகம் சார்பாக இளைஞர்கள் பலர் ஒன்றிணைந்து அருகில் உள்ளவர்களிடம் பொருட்கள் சேகரித்து சென்னைக்கு சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியுள்ளார்கள். இரத்த முகாம்களுக்கு சென்று இரத்தம் வழங்கு வது, அய்யூப் அலி காது கேளாதோருக்கான முகாம்களில் பங்கு கொள்வது என இப்படி

பல சமூக மேம்பாடுகளை நூலகம் வாயிலாகவும் தனிப்பட்ட முறையிலும் இந்த ஐந்து இளைஞர்களும் செய்து வந்துள்ளார்கள்.

NIA அதிகாரிகளால் ஐந்து அப்பாவி இளைஞர்கள் கைது செய்யப்பட்ட நிலையில், இளைஞர்களுக்கு உதவிட மதுரையில் உள்ள பல்வேறு இயக்கங்களும் ஜமாத்தார்களும் ஒன்றிணைந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளனர். இந்த கூட்டமைப்பின் தலைவராக உள்ள இத்ரீஸ் ஊடகங்களுக்கு பேட்டியளிக்கும் போது, மதுரையில் இதுவரை நடந்ததாக குறிப்பிடப்பட்ட 18 குண்டுவெடிப்பு வழக்குகளும் போலியாக சித்தரிக்கப்பட்டவை. அந்த போலி வழக்குகளில் பெரிதும் சம்பந்தப்பட்டவர் காவல்துறை அதிகாரி மாரிராஜன், தேவநாதன், வீரப்பன் ஆகியோர் ஆவார்கள். இவர்கள் அனைவரும் NIA அதிகாரிகளுடன் இருக்கிறார்கள் எனும் போது இந்த வழக்கும் கண்டிப்பாக போலியாக இருக்கும் என்ற பலத்த சந்தேகம் தங்களுக்கு ஏற்படுவதாக கூறினார்.

10 நாள் காவல் விசாரணை முடிந்ததும் ஐந்து இளைஞர்களும் கர்நாடகாவில் உள்ள சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த டிசம்பர் 5ம் தேதி பொறியாளர் தாவூத் சுலைமானின் தந்தை பகதூர்ஷா என்ற வக்கீல் துணையுடன் கைது செய்யப்பட்ட இளைஞர்களை பார்க்க கர்நாடகா சிறைக்கு சென்றுள்ளனர். அங்கு பாலன் என்ற வழக்கறிஞர் உதவியுடன் பெயிண்டர் அப்பாஸ் அலி, பொறியாளர் தாவூத் சுலைமான், சமீபத்தில் திருமணமான அய்யூப் அலி ஆகிய மூன்று இளைஞர்களையும் சந்தித்துள்ளனர். இந்த சந்திப்பு அரை மணி நேரம் நிகழ்ந்துள்ளது.

### மன நலம் பாதிப்பு

அப்போது பொறியாளர் தாவூத் சுலைமான் மட்டுமே தெளிவாக பேசியதாகவும் மற்ற இரண்டு பேரும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் போல புலம்பிக் கொண்டே இருந்ததாகவும் வழக்கறிஞர் பகதூர்ஷா கூறுகிறார்.

மேலும், ஏன் நீங்கள் இந்த குற்றத்தை செய்ததாக கர்நாடக கோர்ட்டில் ஒத்துக் கொண்டீர்கள் என கேட்டதற்கு, நாங்கள் மிரட்டப்பட்டோம் எங்களுக்கு அந்த சமயத்தில் வேறு வழியில்லை! தொடர்ந்து சித்ரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டோம். அதனால் தான் ஒத்துக் கொண்டோம் எங்களுக்கு எதுவும் தெரியாது என்று பொறியாளர் தாவூத் சுலைமான் கூறியுள்ளார்,

### விவாகரத்து

அய்யூப் அலியிடம் பேசும்போது, தாங்கள் எந்த தவறும் செய்யவில்லை என்று கூறினார். தனது மனைவியை பற்றியும் அடிக்கடி விசாரித்து கொண்டிருந்தார். விவாகரத்து செய்ய என் மனைவியின் வீட்டில் முடிவு செய்யப்பட்டுள்ள தாமே உண்மையா? என்று திரும்ப திரும்ப மனநலம் பாதிக்கப்பட்டவரை போல் ஒரே கேள்வியை கேட்டுக் புலம்பிக் கொண்டே இருந்துள்ளார்.

பெயிண்டர் அப்பாஸ் அலியிடம் பேசும் போது, நான் அப்ரூவர் ஆகப் போகிறேன் என் நண்பர்களாவது நன்றாக இருக்கட்டும் என இதனையே திரும்ப திரும்ப சொல்லியிருக்கிறார். நீ அப்ரூவர் ஆவதில் பிரச்சனையில்லை செய்யாத குற்றத்திற்கு நீ அப்ரூவர் ஆனால் உன்னோடு சேர்த்து உன் நண்பர்களும் கடுமையான துன்பத்திற்கு ஆளாக நேரிடும் என்று வழக்கறிஞர் பகதூர்ஷா அறிவுறுத்திய பின் அவரும் மேலும் மனநலம் பாதிக்கப்பட்டவர் போல் அதனையே திரும்ப திரும்ப பேசிக் கொண்டிருந்தார்.

### 30 நபர்களின் பெயர் வேண்டும்

ஐந்து இளைஞர்களும் தனித்தனி சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு இளைஞர்களிடமும் உங்கள் நண்பர்களின் பெயர்களை சொல்லுங்கள் அவர்களுக்கும் தொடர்புள்ளதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுங்கள் நீங்கள் 30 பேரின் பெயரை சொல்லும் வரை நாங்கள் விடப்போவதில்லை என தொடர்ச்சியாக சித்ரவதைப்படுத்தியுள்ளனர், நாங்கள் சொல்வதற்கெல்லாம் நீங்கள் ஒத்துழைத்தால் மூன்று மாதங்களில் வெளிவந்து விடலாம் இல்லையென்றால் வாழ்நாளை சிறையில் தான் கழிக்க நேரிடும் என்று போலிசார்கள் மிரட்டுவதாக மூன்று இளைஞர்களும் வழக்கறிஞர் பகதூர்ஷா விடம் கூறியுள்ளனர்.

### தொடரும் வேட்டை பீதி

அதை தொடர்ந்து தொடர்ச்சியாக மதுரையைச் சேர்ந்த இன்னும் பல இஸ்லாமிய இளைஞர்கள் வீட்டிற்கு NIAவில் இருந்து பேசுவதாக போனிற்கு அழைப்பு வருகிறது.

ஆனால் போனில் பேசுபவர் தமிழிலேயே உரையாடுகிறார். இதனால் மதுரையைச் சுற்றியுள்ள இளைஞர்கள் மட்டுமல்லாமல் அவர்களது பெற்றோர்களும் மிகுந்த பயத்தில் உள்ளார்கள். NIA நினைத்தால் அப்பாவிகளையும் உலகத்திற்கே பயங்கர ஆபத்து மிகுந்த தீவிரவாதிகளாக சித்தரித்து காட்ட முடியும் என்ற நிலையை மதுரையில் உருவாக்கியுள்ளார்கள். இதனால் பல இளைஞர்கள் மனதளவில் பாதித்து தூக்கம் இழந்து தவித்து வருகின்றனர்.

**நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பாக**

கைது நடவடிக்கை, சோதனை நடைமுறைகள் எல்லாம் முடிந்த பிறகு நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பாக ஒரு குழு பாதிக்கப்பட்ட அப்பாவி இளைஞர்களது பெற்றோர்கள் அனைவரையும் சென்று சந்தித்தோம். அவர்கள் அனைவருக்கும் தேவையான உதவிகள் செய்து தருவதாக வாக்குறுதியும் அளித்துள்ளோம். அவர்களுக்கு தேவையான சட்ட ஆலோசனைகளையும் வழங்கினோம். அல்ஹம்துலில்லாஹ்.

இனி இதுபோன்ற சூழ்நிலைகள் வரும் போது இளைஞர்களும் பெற்றோர்களும் என்ன செய்ய வேண்டும் என்ற ஆலோசனையையும் அப்பகுதியில் பிரச்சாரப்படுத்தி வருகிறோம் என அந்த அமைப்பினர் தெரியப்படுத்தினர்.



**ஊடகங்களும் அதன் தர்மங்களும் ?**

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று சொல்லக்கூடிய ஊடகம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதற்காக அவர்களை தீவிரவாதிகளாக சித்தரிக்க தங்களது ஊடக தர்மங்களை காற்றில் பறக்க விட்டிருக்கின்றனர். அதிகாரிகள் சோதனை செய்து என்னென்ன எடுத்தோம் என்று குறிப்பிட்ட ஆவணங்களிலேயே கூட எந்த ஆபத்தான பொருளை எடுத்தோம் என்று குறிப்பிடவில்லை சாதாரணமாக பயன்படுத்திய சிம் கார்டுகள், மொபைல் போன்கள் என்றே ஆவணங்களில் எழுதி அவர்களும் கையெழுத்திட்டு பாதிக்கப்பட்ட இளைஞர்களின் பெற்றோர்களும் கையெழுத்திட்டுள்ளனர். ஆனால் ஊடகங்கள் வெளியிட்ட செய்திகள் முற்றிலும் வேறானவை.

**அண்டப் புழுகு தினமலர்**

தினமலர் *04/12/2016* அன்று வெளியிட்ட செய்தி தலைப்பே “பயங்கரவாதிகள் வீட்டில் ரெய்டு வெடிமருந்து பறிமுதல்!” என்பது தான் அந்த செய்தியில் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் வீட்டில் சோதனை நடத்தியதாகவும் வீட்டிலிருந்து பல வெடிமருந்துகள் எடுக்கப்பட்டதாகவும் உள்ளது. NIA அதிகாரிகள் என்னென்ன எடுத்தோம் என்று குறிப்பிடும் ஆவணங்களிலேயே இல்லாத செய்தியை புனைந்து தாங்கள் நினைத்ததை வெளியிட்டுள்ளார்கள்.

### அண்டப் புழுகு தி இந்து

தி இந்து (தமிழ்) 04/11/2016 அன்று வெளியிட்ட செய்தியிலும் வெடிகுண்டுகள் எடுக்கப்பட்டது என போலிஸ் தரப்பில் கூறப்பட்டதாக செய்திகள் வெளியாயின. வெடிகுண்டுகள் எடுக்கப்பட்டது பற்றி நான்கு இளைஞர்களின் வீடுகளிலும் சோதனை செய்து அதிகாரிகளால் வழங்கப்பட்ட ஆவணங்களில் எவ்வித தகவலும் இல்லை. அப்பாஸ் அலியின் வீட்டில் குடும்பத்தார்கள் எவ்வளவு கேட்டும் சோதனைப் படிவம் வழங்கப்படவில்லை. இதனையெல்லாம் ஊடகங்கள் பதிவு செய்யாமல் ஒருபக்க சார்பாய் நடந்து கொள்வது தான் ஊடக அறமோ?

### ஜூவியின் பொய்

இந்த செய்திகள் ஊடாக 07.12.2016ல் வெளியான ஜூனியர் விகடன் பத்திரிக்கையில் தாவூத் சுலைமான் 30 கோடி மதிப்பிலான பழைய ரூபாய் நோட்டுகளை 35% கமிஷனுக்கு மாற்றி கொடுத்தார் என்று செய்தி வெளியிட்டனர். இதற்கு எந்தவொரு அடிப்படை ஆதாரங்களையும் இதுவரை யாரும் வெளியிடவில்லை. NIA அதிகாரிகள் கூட இக்குற்றச்சாட்டை இந்த இளைஞர்கள் மீது சுமத்தவில்லை. மோடியின் பழைய ரூபாய் நோட்டு செல்லாது என்று அறிவித்த திட்டத்தை அய்யூப் அலி தனது முகநூல் பக்கத்தில் கடுமையாக விமர்சித்துள்ளார். இதன் காரணமாகத் தான் அய்யூப் அலிக்கு தீவிரவாத முத்திரை குத்தப்பட்டதா? என்ற நியாயமான கேள்விகளை ஊடகங்கள் எழுப்பியிருக்க வேண்டும்! ஆனால் அதனை விடுத்து தோன்றுவதை எல்லாம் எழுதி மேலும் கதைகளை புனைகின்றன.

ஒரு தொலைக்காட்சி விடாமல் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் போட்டோக்களை வெளியிட்டு தீவிரவாதிகள் கைது ,பயங்கரவாதிகள் கைது என்று பக்கம் பக்கமாக செய்தி வெளியிட்டனவே தவிர இளைஞர்களின் தரப்பிலோ அல்லது இளைஞர்களின் வக்கீல் தரப்பிலோ வெளியிட்ட செய்திகளை சொல்லவே இல்லை!

ரம்ஜானுக்கு மூன்று இளைஞர்கள் மகிழ்ச்சியில் தலையில் குல்லா கட்டி சேர்ந்து எடுத்துக் கொண்ட போட்டோவை எடுத்துக் கொண்டு தீவிரவாத பயிற்சி செய்வது போல செய்திகளை சித்தரித்து எழுதிய கொடுமைகள் வேறு! இந்த போட்டோக்களில் உள்ள மூன்று இளைஞர்களில் ஒரு இளைஞர் அடுத்த நாளே விடுவிக்கப்பட்டார். இருந்தாலும் ஊடகங்கள் அவரது போட்டோவை நீக்காமல் மீண்டும் மீண்டும் தீவிரவாதி என்றே சொல்லிக் கொண்டிருந்தது.

### விடை தேடும் வினாக்கள்....

**போலி பொய் வழக்கில் இந்த இளைஞர்கள் சிக்க வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற சந்தேகம் ஏற்படுவதற்கான காரணங்கள்:**

1) கைது நடவடிக்கை நடந்தது, ஆரம்பத்தில் மதுரை கமிஷனர் ஷைலேஸ் குமாருக்கே தெரியாது என சொல்லப்பட்டது. ஆனால் அடுத்து, ஒரு நபரை கைது செய்ய மட்டுமே அனுமதி கேட்கப்பட்டது என ஷைலேஸ்குமார் ஒரு பத்திரிக்கைக்கு பேட்டி கொடுத்தார். ஆனால் NIA அதிகாரிகள் மதுரையில் 4 பேரை கைது செய்துள்ளனர். ஏற்கனவே திட்டமிடப்பட்டது என்றால் ஏன் இத்தனை குழப்பங்கள்? (ஆதாரம்- நக்கீரன் டிச,02-04 2016)

2) ஆறு மாத காலமாக இவர்களை கண்காணிப்பதாக சொல்கிறார்கள். ஆனால் இந்த வெடிகுண்டு வழக்குகள் NIA அதிகாரிகளுக்கு செப்.20,2016 ம் தேதி தான் மாற்றப்பட்டது. கைது செய்யப்பட்ட அய்யூப் அலிக்கு இரண்டு வாரத்திற்கு முன்பு தான் திருமணம் நடைபெற்றது. இவர்கள் பார்வையில் ஒரு தீவிரவாதி(?) திருமணம் செய்யும் அளவுக்கு விட்டு வைப்பார்களா? அல்லது தெரிந்தே ஒரு பெண்ணின் வாழ்க்கை நாசமவதை விரும்பினார்களா? (ஆதாரம் - தி இந்து 03/12/2016)

3) கைது செய்யப்பட்ட இளைஞர் கரீம்ராஜா மூன்று மாதத்திற்கு முன்பு தான் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்து பெற்றுள்ளார். விசாரணை வளையத்திற்குள் இருக்கும் ஒரு தீவிரவாதிக்கு(?) எப்படி அரசாங்கம் பாஸ்போர்ட் வழங்கியது? பாஸ்போர்ட் விசாரணை செய்து வழங்கப்பட்டது என்றால் NIA அதிகாரிகள் சொல்லும் மூன்று மாத விசாரணை கதைகள் என்பதே பொய்யா!( ஆதாரம் - கூட்டமைப்பு சார்பாக வெளியிடப்பட்ட Press Release)

4) இளைஞர்கள் கைது செய்யப்பட்டதும் அப்பாஸ் அலியின் குடும்பத்தார்கள் அருகில்

உள்ள காவல் நிலையத்தில் இரவு 2.00 மணிக்கே புகார் கொடுத்துள்ளனர். அதை போல கரீம்ராஜா, அய்யூப் அலி அவர்களது குடும்பத்தார்களும் கமிஷனர் அலுவலகத்தில் தங்கள் மகனை யாரோ இழுத்து சென்றுள்ளனர் கண்டுபிடித்து தரும் படி புகார் கொடுத்துள்ளனர். ஆனால் கொடுத்த புகாருக்கு ரசீது தராமல் காவல்துறையினர் திட்டமிட்டே அலைக்களித்துள்ளனர். மதியம் 2.00 மணிக்கு செய்திகளில் தீவிரவாதிகள் கைது என்ற செய்தி வரும் வரை காவல்துறை எங்களுக்கு எதுவும் தெரியாது என்றார்கள். ஆனால் புகாருக்கான ரசீதை கொடுக்காமல் இழுத்தடிக்கப்பட்டார்கள் எனும் போது மதுரை காவல்துறையினருக்கு இதில் முக்கிய பங்கு உண்டு என தெரிகிறது.

5) இதுவரை மதுரையில் மட்டும் 18 குண்டு வெடிப்புகள் நடந்துள்ளன. அத்தனையும் இப்போது கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் வைத்ததாக கூறும் “Low Intensity Explosion” வகை குண்டுகள் தான். இந்த 18 குண்டு வெடிப்பு வழக்குகளும் போலியானவை இதனை சித்தரித்தவர்கள் மதுரையை சேர்ந்த காவல் துறை அதிகாரிகள் என்று அ.மார்க்ஸின் தலைமையில் உண்மை கண்டறியும் குழு ஆய்வு செய்து அறிக்கை சம்ர்பித்துள்ளது. அதே அதிகாரிகள் இந்த கைது நடவடிக்கையிலும் ஈடுபட்டிருப்பதால் இந்த வழக்கும் போலியாக சித்தரிக்கப்பட்டவை என தெரிகிறது. ( ஆதாரம் - வைகறை வெளிச்சம் டிச.2016)

6) NIA அதிகாரிகள் தாவூத் வீட்டில் சோதனையிடும் போது ஆறு மாதமாக பூட்டி வைத்த அறையிலிருந்து ஒரு செல்போனை அதிகாரிகளே வைத்து விட்டு எடுத்ததாக குடும்பத்தார்கள் மட்டுமல்லாமல் அங்கிருந்த பொது மக்கள் அனைவரும் கூறுகிறார்கள். இதற்கு ஏற்றவாறு தலையாரி பாஸ்கரன் உடனிருந்தார் என்ற வகையில் எங்கிருந்து எடுத்தீர்கள் என்று அவரிடம் கேட்கும் போது செல்பில் இருந்து எடுத்தேன் என்றும் எந்த செல்ஃப் என்று கேட்டவுடன் அது மேல இருந்த ரேக் என மாற்றி மாற்றி பேசியது சந்தேகத்தை வலுப்படுத்துகிறது. தாவூத்தின் சகோதரிகள் ஆறு மாதம் பூட்டி இருந்த அறையில் எப்படி எந்த தூசியும் ஒட்டாமல் உங்களுக்கு ஒரு மொபைல் கிடைத்தது எனக் கேட்டுள்ளார் அதற்கும் பதில் இல்லை.

எடுத்து வரப்பட்ட போனை தங்கள் முன்னே ஆய்வு செய்ய வேண்டும் என்று கூறிய போது அதில் ஒரே ஒரு போட்டோ இருந்துள்ளது. கவனிக்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால் அதில் 90% சார்ஜ் இருந்துள்ளது! ஆறு மாதமாக மூடிய அறையிலிருந்து எடுத்த போனில் எப்படி 90% சார்ஜ் இருக்க முடியும்? மேலும், உண்மையான வழக்காக இருந்தால் காவல் துறையினர் ஏன் இத்தனை பொய்யான சாட்சிகளை உருவாக்க வேண்டும் இளைஞர்களை சிக்க வைப்பதற்காக பொய்யான ஆதாரங்களை திட்டமிட்டு உருவாக்குகிறார்கள் என்பதும் தெளிவாகிறது.

7) அய்யூப் அலியின் வீட்டுக்கு முகமூடி போட்டு ஒருவரை அழைத்து வந்து எல்லோரையும் வெளியே அனுப்பி விட்டு உள்ளே NIA அதிகாரிகள் மட்டும் சென்று வீட்டை அடைத்து விட்டு என்ன செய்தார்கள்! தாவூத் சுலைமான் வீட்டில் சோதனையின் போது குடும்பத்தவர்கள், பொது மக்கள் சுற்றியிருக்கும் போதே பொய் சாட்சியங்களை உருவாக்க முனைந்தவர்கள் யாரையும் அனுமதிக்காமல் எத்தனை பொய் சாட்சியங்களை உருவாக்கியிருப்பார்கள்? மற்ற நான்கு இளைஞர்களின் வீட்டிலும் இந்தெந்த பொருளை எடுத்தோம் என்று ஒரு ஆவணங்களை கொடுத்தார்கள் ஆனால் அய்யூபின் வீட்டில் மட்டும் கொடுக்க வில்லை! ஏன் இத்தனை முரண்கள்?

8) மேலூரர் கோர்ட்டில் கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்களையும் ஆஜர்படுத்தும் போது பெற்றோர்களிடம் தாங்கள் எந்த குற்றத்தையும் செய்யவில்லை என்று கூறியவர்கள் அடுத்து, இடையப்பட்டி ராணுவ முகாமில் பார்த்தபோது சொல்லி வைத்தாற்போல் எல்லோரும் நாங்கள் தான் செய்தோம் என்று சொல்ல வேண்டிய அவசியம் என்ன? எல்லா கேள்விக்கும் அவர்களிடமிருந்து வந்த ஒரே பதில் நாங்கள் தான் செய்தோம் என்பது மட்டுமே! இதுவே பெரிய சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

பெங்களூர் சிறையில் தாவூத் சுலைமானை பார்க்கும் போது ஏன் செய்யாத குற்றத்தை ஒப்புக் கொண்டீர்கள் என வழக்கறிஞர் பகதூர்ஷா சுலைமானிடம் கேட்டதற்கு எங்க

ளுக்கு வேறு வழியில்லை அந்தளவு சித்ரவதைக் குள்ளாக்கப்பட்டோம் என்று கூறினார்.

*9)* அப்பாஸ் அலியின் வீட்டிலிருந்து NIA அதிகாரிகள் ரோஜா செடிக்கு போட வைத் திருந்த உரத்தையும் தாவூத் சுலைமான் வீட்டில் ஆறு மாதமாக பூட்டி வைக்கப்பட்டிருந்த அறையிலிருந்து இரண்டு பாக்கெட்டுகள் தூசியையும் கூட எடுத்து சென்றனர். ஆனால் அடுத்த நாள் செய்தித் தாள்களில் 'தீவிரவாதிகள் வீட்டில் சோதனை, வெடிபொருட்கள் பறிமுதல்' என்ற செய்தி வந்ததும் ரோஜா செடிக்கு வைத்த உரமும், தூசியும் ஒரே இரவில் வெடிபொருட் களாக மாறிய மர்மத்தை என்ன சொல்வது? (ஆதாரம் - தினமலர் 04/12/2016)

*10)* NIA அதிகாரிகள் கொடுத்த அறிக்கைகளாக செய்தித்தாளில் வந்தவைகளில் மிக முக்கிய மானது இந்த ஐந்து இளைஞர்களுக்கும் துணை அல்கொய்தா அமைப்பிற்கும் தலைவராக செயல் பட்டவர் தாவூத் சுலைமான் என்ற பொறியிய லாளர். சுலைமானிற்கு வயது 23 மட்டுமே கல்லூரியிலேயே வேலைக்கு தேர்வாகி ஆறு மாதம் காத்திருந்து வேலைக்கு அழைப்பு வந்ததும் 2016 ஜனவரியில் வேலைக்கு சேர்ந்தார். கல்லூரி யிலும் வேலை பார்க்கும் இடங்களிலும் இவருக்கு நல்ல பெயர்களே உள்ளன. குண்டு வெடிப்பு நடந்ததாக சொல்லப்படும் நாட்களிலெல்லாம் தாவூத் வீட்டில் இருந்துள்ளார் அல்லது கல்லூரி யில் இருந்துள்ளார். NIA அதிகாரிகள் சொல்லும் கதைகள் எல்லாம் கற்பனைக்கும் மேலானவை யாகவே தெரிகிறது. உருது மொழியில் கடிதம் கிடைத்ததாகவும் ஜெலேட்டின் குச்சிகளை உபயோகப்படுத்தியதாகவும் NIA அதிகாரிகள் கூறுவது பொய் சாட்சியங்களை தயார் செய்கி றார்கள் அல்லது தயார் செய்து விட்டார்கள் என்ற சந்தேகத்தையே மிகைக்க செய்கிறது. (ஆதாரம் - Indian Express 29/11/2016)

*11)* நவம்பர் 1,2016 அன்று கேரளா, மலப் புரத்தில் நடந்த குண்டுவெடிப்பில் S.P.தேபேஸ் குமார் மற்றும் சட்டம் ஒழுங்கு மற்றும் உளவுத் துறை டி.ஜி,பி அஜித்குமார் ஆய்வு செய்தார்கள். அவர்களது ஆய்வில், **குண்டு வெடித்த இடத்தில் ஒரு மூடிய பெட்டி இருந்ததாகவும் அதில் ஒரு பெண்ட்ரைவ் இருந்ததாகவும் கூறியுள்ளனர்.**



**மேலும், ஜெய்ஷி-இ-முஹம்மது என்ற பெயரும் அப்பெட்டியில் எழுதியிருந்தது. பெண்ட்ரைவில், கொல்லம், மைசூர், சித்தூர், குண்டு வெடிப்புகளுக்கான காரணங்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.**

செப்,20ம் தேதியே NIA அதிகாரிகள் இவ்வழக்கை விசாரிக்க தொடங்கி விட்டார்கள். ஆனால், மாநில காவல்துறை ஜெய்ஷ்-இ-முஹம்மது என்று எழுதியிருந்தது என்கிறார்கள் NIA அதிகாரிகளோ அல் கொய்தா துணை இயக்கம் என்கிறார்கள். இருவருக்கும் எப்படியும் ஒரு முஸ்லிம் அமைப் பினரை பழி சுமத்த வேண்டும் என்ற நோக்கம் இருப்பதை மட்டும் உணர முடிகிறது. இவ்வளவு முரண்பாடுகளை கொண்ட இவ்வழக்கைத் தான் பத்திரிக்கைகள் முதல் பக்கத்தில் தீவிரவாதிகள் கைது என்று பிரபலப்படுத்துகிறார்கள். ஆனால், முரண்பாடு களை பற்றி பேசுவதே இல்லை. (ஆதாரம்- நக்கீரன் டிச,02-04 2016)

*12)* NIAஅதிகாரிகளின் குறிப்பில், சுலைமான் இணையத்தில் தீவிரவாதிகளுடன் பேசியதாக வும் அதில் கிடைத்த லிங்கை வைத்தே மற்ற நால்வரையும் பிடித்ததாக கொடுத்துள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவர் அப்பாஸ் அலி 8வது படித்தவர் தமிழை எழுதி னாலே எழுத்து பிழைகளுடன் தான் எழுதுவார். இன்னொருவர் சம்சுதீன் 7வது படித்தவர் தமிழ் கூட சரியாக வாசிக்க தெரியாதவர் இவர்கள் தான் இணையதளத்தில் ரகசியமாக சுலைமானிடம் பேசினார்களாம்! கட்டுக்கதைகளை கட்டி கதை களை உண்மைப்படுத்த போலி ஆதாரங்களையும் தயாரித்து வருகின்றனர் NIA அதிகாரிகள். (ஆதாரம்- நக்கீரன் டிச,02-04 2016)

*13)* கொடைக்கானலில் இஸ்ரேலியர்கள் அதிகமாக வருவார்கள் அவர்களை கொன்று குழப்பத்தை ஏற்படுத்தி நாட்டின் பிரதமர் உட்பட 22 முக்கிய தலைவர்களை கொல்வதற்

காக திட்டம் தீட்டினார்கள். இதையெல்லாம் THE BASE MOVEMENT என்ற பெயரில் செய்ய திட்டம் தீட்டிருந்தார்கள் அதை திறமையாக முறியடித்து அவர்களை பிடித்து விட்டோம் என்கிறார்கள் அதிகாரிகள்! 23 வயது வாலிபன் அவனுடன் 7வது 8வது படித்த இளைஞர்கள் இவர்களை கொண்டு நாட்டின் பிரதமர் உட்பட் 22 முக்கிய தலைவர்களை கொல்ல போகிறார்கள்! இதை நாம் நம்ப வேண்டும். எந்தளவு கதைகளை சொன்னாலும் அதை ஆராயாமல் அப்படியேவும் கொஞ்சம் சேர்த்தும் சொல்லும் ஊடகங்களிடம் நீதியை எதிர்பார்ப்பது முடியாதது தான். (ஆதாரம் - ரிப்போர்ட்டர் 06/12/2016)

14) மைசூர் குண்டுவெடிப்பின் போது அங்கு இந்த ஐந்து இளைஞர்கள் சேர்ந்து நடத்தும் தாருல் இல்ம் நூலகத்தின் டோக்கன் எடுக்கப் பட்டதாம். முக்கிய ஆதாரமாக NIA அதிகாரிகள் இதனை காட்டுகிறார்கள். ஒரு மாநிலத்திருந்து சென்று இன்னொரு மாநிலத்தில் குண்டு வைத்து மிரட்டல் கடிதங்களை வெளியிடும் அளவுக்கு அறிவு பெற்றவர்கள் குண்டு வைக்கும் போது தங்கள் நூலகத்தின் டோக்கனையும் போட்டு விட்டு வருவார்களா? RBI க்கு மட்டுமே தெரிந்த 2000ரூ. ரகசியமே இரண்டே நாளில் கள்ள நோட்டுகளாய் வெளிவந்தது என்றால் அதிகாரி களால் ஒரு நூலகத்தின் அட்டை டோக்கனை தயாரிக்க முடியாதா? நாம் எதைச் சொன்னாலும் செய்தாலும் நம்புவார்கள் என்ற மமதையில் ஒவ்வொரு செய்தியும் NIA வெளியிடுகிறது.( ஆதாரம்- ரிப்போர்ட்டர் 06/12/2016)

15) இதுவரை தாவூத் சுலைமான் மதுரையில் 30 இளைஞர்களுக்கு தீவிரவாத பயிற்சி கொடுத் துள்ளார். இதன் மூலம் அடுத்ததொரு 25 அப்பாவி இளைஞர்களை மதுரையில் குறி வைக் கிறார்கள் என புரிந்து கொள்ள முடிகிறது. தொடர்ச்சியாக எப்படியும் 30 பேரை நீங்கள் காட்டிட வேண்டும் என்று ஐந்து இளைஞர் களும் கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். (ரிப்போர்ட்டர் 06/12/2016)

16) நவ.27ம் தேதி கைது செய்யப்பட்டவர்கள் 29ம் தேதியே கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட் டார்கள். ஆனால் கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்தில் கோர்ட்டில் ஆஜர்படுத்த வேண்டும் என்பது சட்டம். இதையெல்லாம் பொருட்படுத் தாமல் அதிகாரிகள் இருந்துள்ளனர். இதை மேலூர் கோர்ட்டில் இளைஞர்கள் சார்பாக வழக்கறிஞர் ஜின்னா சொல்லும் போது ஒரு கண்டனம் கூட அதிகாரிகளுக்கு நீதிபதியும் தெரிவிக்கவில்லை. ஒட்டுமொத்தமாக இளை ஞர்கள் ஜோடிக்கப்படுகின்றார்கள், நசுக்கப்படு கிறார்கள் என்பதை மட்டும் உணர முடிகிறது.

17) ஆகஸ்ட் 1ம் தேதி நடைபெற்ற குண்டு வெடிப்பில் இந்த இளைஞர்கள் ஈடுபட்டதற்கு ஆதாரமாக NIA அதிகாரிகளிடம் கழிப்பறை ஊழியர்கள் இளைஞர்களை அடையாளம் காட்டினார்கள். இதனை முக்கிய ஆதாரமாக அதிகாரிகள் ஊடகங்களில் வெளியிட்டுள்ளார் கள். அதாவது ஆகஸ்ட் 1ம் தேதி இந்த இளைஞர் களை கழிப்பறை ஊழியர்கள் பார்த்தார்களாம்? இந்த இடைப்பட்ட நான்கு மாதத்திற்கு பிறகும் கூட கழிப்பறைக்கு வந்த கோடிக்கானவர்களில் இந்த ஐந்து இளைஞர்களை ஊழியர்கள் அடை யாளம் காட்டினார்கள் எனும் போது யாராலும் நம்ப முடிகிறதா? (ஆதாரம் - தினமலர் 03/12/2016)

இன்னும் பல்வேறு முரண்பாடுகளை கொண்டிருக்கிறது இந்த வெடிகுண்டு வழக்குகள். அதற்குள் இளைஞர்களை UAPA எனும் கடுமையான சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளார் கள் NIA அதிகாரிகள். இந்த பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டால் எதற்காக? எந்த ஆதாரங்கள் அடிப்படையில் கைது செய்துள்ளார்கள் என்ற மொத்த விவரங்களும் சேர்த்து ஆறு மாதத்திற்கு பிறகே எதையும் தெரிந்து கொள்ள முடியும் என்கின்றனர் வழக்கறிஞர்கள்.

ஐந்து இளைஞர்களின் வாழ்க்கை பறி போகிறது! இளைஞர்களை சார்ந்த குடும்பங்கள் பரிதவிக்கிறது. ஐந்து இளைஞர்களின் குடும்பங் களும் தாங்கள் சமூகத்திலிருந்து தனித்து விடப் பட்டதாக பரிதவிக்கிறார்கள். இறுதியாக அனை வரும் நீதிமன்றத்தை சார்ந்தே இருக்கிறார்கள். ஆனால், நீதிமன்றங்கள் எவர்களைச் சார்ந்து இருக்கின்றன?

**மோடியின் ஆட்சியில் நீதி குதிரைக் கொம்பு..?**

**விரைவில் கைறையின் வெளிச்சத்தில்...**

**- அபூசித்திக், அமீர்**

# தேசத்தின் பெயரால்

# கல்வி காவி மயம்



சிக்ஸா சன்ஸ்கிருதி உதன் நியாஸ் (SSUN) - கல்வி மற்றும் கலாச்சார முன்னேற்றத்திற்கான அறக்கட்டளை - ஆர்.எஸ்.எஸ்-இன் கிளை அமைப்பு. இந்தியாவின் தற்போதைய கல்விக் கொள்கையில் மாற்றத்தை கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்துடன் 2007 ஆம் ஆண்டு முன்னாள் ஆர்.எஸ்.எஸ் ஊழியரான தயானந்த் பத்ரா என்பவரால் நிறுவப்பட்டது. பாடத்திட்டங்கள், கல்விக் கொள்கை மற்றும் கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி அதனை காவிமயமாக்குவதே இதன் வேலை.

இதன் உறுப்பினர்கள் குழு கடந்த செப்டம்பர் 22 ஆம் தேதி அன்று மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகரை சந்தித்து புதிய கல்விக் கொள்கையில் தேசியத்தை புகுத்துவது தொடர்பான கருத்துகளை முன் வைத்தது. இவர்கள் பாடப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ள வரலாற்று பிழைகளையும் சுட்டி காட்டியுள்ளர்களாம். அதனை புதிய பாடத்திட்டம் கொண்டு வரும்பொழுது அரசு கவனிக்கும் என்றும் ஜவடேகர் உறுதி அளித்துள்ளார்.

வெண்டி தோனிகர் (Wendy Doniger) எழுதிய The Hindus- An Alternative History என்ற புத்தகம் தடை செய்யப்படுவதற்கும், டெல்லி பல்கலைகழகத்தின் பாடத்திட்டத்தில் இருந்து A.K. ராமானுஜம் எழுதிய "முன்னூறு ராமாயணம்" என்ற கட்டுரையை நீக்கியதற்கும் இந்த அமைப்பின் பிரச்சாரம் முக்கிய காரணம்.

இந்த அமைப்பின் SSUN-இன் கருத்துக்களை ஆளும் பாரதீய ஜனதா கட்சி செவிமடுத்து கேட்கின்றது. முன்பெல்லாம் நமது கோரிக்கைகள் நிறைவேற நீதிமன்றம் செல்ல வேண்டியிருந்தது. ஆனால் இப்பொழுது அரசு செவிமடுக்கின்றது என்கின்றார் இவ்வமைப்பின் பொது செயலாளர் அதுல் கோத்தாரி. முன் பிருந்த வாஜ்பாய் அரசை விட இன்றைய அரசு ஆர்.எஸ்.எஸ். உடன் இணைந்து செயல்படுவதில் தடுப்புகளை ஏற்படுத்தி கொள்வதில்லை. ஆட்சிமுறை மற்றும் கலாச்சாரத்தில் நேருவின் வழிமுறையை அகற்றிவிட்டு தனது தடத்தை பதிக்கவே மோடி முயன்று கொண்டிருக்கிறார் என்கிறார் ஆர்.எஸ்.எஸ். தலைவர்களில் ஒருவர்.


ஆர்.எஸ்.எஸ். தனது திட்டங்களை நிறைவேற்ற மோடி அரசை இயக்கி கொண்டிருக்கிறது. கல்வி, பாதுகாப்பு மற்றும் கலாச்சாரம் தொடர்பான விவகாரங்களில் முடிவுகளை எடுப்பதற்கு ஆறு குழுக்களை ஆர்.எஸ்.எஸ். நியமித்துள்ளது. இதில் அதன் உறுப்பினர்கள், BJP-இன் தலைவர்கள், மத்திய அமைச்சர்கள் அடங்குவர். ஆர்.எஸ்.எஸ்.-இன் பொது செயலாளரான தத்தத்ரேய ஹோசபலே (Dattatreya Hosabale) மற்றும் கிருஷ்ணா கோபால் ஆகியோர் அரசாங்கமும் இந்துத்துவவாதிகளும் இணைந்து நடத்தும் பாசறைகளை ஒருங்கிணைக்கின்றனர்.

இந்த ஒருங்கிணைப்பு சந்திப்பில் கூறப்படும் சில கருத்துக்கள் உடனடியாக அமைச்சர்களின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. நிபந்தனைகளுக்கு ஒத்துபோகும் சில கருத்துக்கள் உடனடியாக செயல்படுத்த முடியாது என்றாலும் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. சாத்தியமில்லாத சில கருத்துகள் ஒதுக்கப்படுகின்றன.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் ஆர்.எஸ்.எஸ். சமன்வே பைதக் (Samanvay Baitak) என்ற ஒருங்கிணைப்பு சந்திப்பை நடத்தியது. இம்மாதிரி சந்திப்பின் நோக்கம் என்னவென்றால் ஆர்.எஸ்.எஸ்.-ஆல் கௌரவிக்கப்படும் இந்து

தலைவர்களுக்கு பொது தளத்தில் ஒரு முக்கிய இடத்தை பிடித்து தருவதே.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் மும்பையில் ராஜேந்திர சோழாவின் உருவப்படத்தை அம்மாநில முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் திறந்து வைத்தார். மஹாரானா பிரதாப், கௌதியா வைஷ்நவிசம்-இன் நிறுவனர் சைதன்ய மஹாபிரபு, ஜன்சங்கின் தீனதயாள் உபாத்யாய ஆகியோரின் பிறந்த நாள்களை பண்பாட்டு அமைச்சகம் தற்போது தான் கொண்டாடியது.



பாரதீய சிக்சன் மந்தல்: ஆர்.எஸ்.எஸ்.-இன் கிளை அமைப்பு. ஆரம்ப பள்ளி முதல் உயர்நிலை கல்வி வரை உள்ள பாடத்திட்டங்களில் இந்திய அறிவு பாரம்பரியத்தோடு ஒத்துப் போகும் பல மாற்றங்களை கொண்டுவர வேண்டும் என்று முன்மொழிந்துள்ளது. எங்களுடைய சில அறிவுரைகளை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது என்கிறார் இதன் இணை ஒருங்கிணைப்பு செயலாளர் முகுல் கணித்கர். முனைவர் பட்டத்திற்கான வழிகாட்டி பயிற்சி பட்டறைகளை இதுவரை 26 பல்கலைகழகங்களில் நடத்தியுள்ளோம். நாக்பூரில் நடந்த மறுமலர்ச்சிக்கான ஆராய்ச்சி என்ற மாநாட்டில் 55 (பல்கலைகழக) துணை வேந்தர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். இதன் மூலம் இந்திய அறிவு முறைமை முன்னெடுத்து செல்லப்படும் என்கிறார் கணித்கர்.

நீதிமன்றங்களிலும், சட்டமன்றங்களிலும் மற்றும் தொழிற்துறை சார்ந்த கல்லூரிகளிலும் ஹிந்தியையும் வட்டார மொழிகளையும் உபயோகப்படுத்த வேண்டும் என்பதே SSUN-இன் அடுத்த கட்ட பிரச்சாரம் என்கிறார் கோத்தாரி. பாரதீய சுரக்ஷா மன்ச் என்ற அமைப்பு இந்த பிரசாரத்தை முன்னெடுத்து செல்லுமாம்.

தலித்களிலும் சிந்தனைவாதிகளை வளர்த்தெடுக்கிறது ஆர்.எஸ்.எஸ். இதில் பெயர் குறிப்பிடும்படி முக்கியமானவர்கள் மிலிந்த் காம்ப்ளே - நிறுவனர்- தலித் இந்தியர் வர்த்தகப் பிரிவு. நரேந்திர ஜாதவ் - மத்திய அமைச்சர்.

பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு கொள்கைகளிலும் வலதுசாரி சிந்தனைகளை பரவலாக்குகின்றனர். பாரதீய ஜனதா கட்சியின் பொது செயலாளரான ராம் மாதவ் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலின் மகனான சௌர்யா டோவலும் இணைந்து இந்தியா நிறுவனம் (The India Foundation) என்ற ஒன்றை நடத்தி வருகின்றனர். பாதுகாப்பு, வெளிநாட்டு கொள்கை தொடர்பான விசயங்களில் வலதுசாரி சிந்தனைகளை திணிப்பதில் இவர்கள் சூத்திரதாரிகளாக உருவெடுக்கின்றனர்.

பல்கலைகழக மாணவர்கள் வட்டத்தில் வலதுசாரி சிந்தனைவாதிகளை உருவாக்குவதற்கு (FINS-Forum For Integrated National Security) ஒருங்கிணைந்த தேசிய பாதுகாப்பு குழுமமும், பாரத் நித்தி என்ற அமைப்பும் ஈடுபடுகிறது. சம்கல்ப் என்ற நிறுவனத்தின் வழி 1986-லிருந்து இன்று வரை ஆயிரம் மாணவர்களை அரசு ஆட்சி பணிகளுக்காக (Civil Service) பயிற்சி அளித்து அனுப்பியுள்ளோம் என்கிறார் கணித்கர்.

பண்பாட்டு துறைகளிலும் ஆலோசனை குழுக்களிலும் இன்று வலதுசாரி சிந்தனை கொண்டவர்களையே காணமுடிகிறது. ஆர்.எஸ்.எஸ்.-இன் கருத்துக்களோடு ஒத்துப்போகும் பார்வை உடையவர்களே Indian Council of Historical Research, The Indira Gandhi National centre for Arts, Prasar Bharati , The Nehru Memorial Museum and Library, Central Board of Film Certification போன்ற அரசு துறைகளில் பணியமர்த்தப்படுகின்றனர். தேசத்தின் பெயரால் இந்தியா காவி மயமாகி கொண்டிருக்கிறது. அதற்கான வேலை முழு மூச்சாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆதாரம்: The Week, December 04, 2016

**- அபூஹாசிம்**



# 2016 கோவை கலவரம்

2016 செப்டம்பர் 22 மற்றும் 23 ஆகிய இரு நாட்கள் கோவையில் நடைபெற்ற வன்முறைக் கலவரங்கள் பற்றி அறிய மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் உண்மை அறியும் குழு மாநிலப் பொதுச் செயலாளர் பேரா. இரா. முரளி அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டது. இக்குழு பாதிக்கப்பட்ட பகுதிகளை (1.10.2016) மற்றும் 12.10.2016 ஆகிய நாட்களில் பார்வையிட்டு, தொடர்புடையவர் களைச் சந்தித்தது. இதுபற்றிய ஓர் இடைக்கால அறிக்கை 12.10.2016 அன்று கோவையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் வெளியிடப்பட்டது. உண்மை அறியும் குழுவின் விரிவான இறுதி அறிக்கை அனைவரின் பார்வைக்கும் தற்போது முன் வைக்கப்படுகிறது.

### கோவை நகரின் தொழில் வளர்ச்சி

கோயமுத்தூர், தமிழ்நாட்டின் தொழில் மையமாக விளங்கக்கூடிய நகரமாகும். அதனால் தான் "தென்னாட்டின் மான்செஸ்டர்" என இது அழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலேயே அரசுக்கு மிக அதிக வருவாய் ஈட்டித் தரும் மாவட்டமாகக் கோவை மாவட்டம் விளங்குகிறது.

2010–ம் ஆண்டில் எடுக்கப்பட்ட புள்ளி விவரத்தின்படி, இந்தியாவில் வணிகம் செய்வதற்கு ஏற்ற சூழல் மிகுந்த நகரங்களில் கோவை 15ஆவது இடத்தில் இருந்தது. இப்பொழுது அந்த நிலையில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பாரம்பரியமாகப் பருத்திப் பயிர் அதிகம் விளைவிக்கும் மாவட்ட மாகக் கோவை இருந்ததால் ஜவுளித் தொழிலில் இந்நகரம் பல்லாண்டுகளுக்கு முன்பே பெரு வளர்ச்சி பெற்றிருந்தது. ஜவுளித் தொழில், மோட்டார் பம்பு, பொறியியல், பவுண்ட்ரி போன்ற தொழில்களில் நாட்டிலேயே முன்னோடியாக விளங்குகிறது கோவை நகரம்

இப்படிப்பட்ட பல்வேறு சிறப்புக்களைப் பெற்ற இந்நகரம் 1997ஆம் ஆண்டில் நடை பெற்ற மதக்கலவரங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. நகரின் தொழில் வளர்ச்சியில் மிகப்பெரும் பின்னடைவு ஏற்பட்டது. ஆனால் கடும் உழைப்பிற்கும், தொழில் திறமைக்கும் பெயர்பெற்ற கோவை, இந்த நெருக்கடியிலிருந்து மீண்டு, வேகமாக முன்னேறத் தொடங்கியது. பாரம்பரியமான தொழில்களோடு, கணினித் துறை, செய்தித் தொழில்நுட்பம், ஆட்டோ மொபைல், கிரைண்டர் உற்பத்தி, நகைத் தொழில், கோழிப் பண்ணை போன்ற புதிய துறைகளிலும் மாபெரும் பாய்ச்சலைக் கண்டது.

### சசிக்குமார் படுகொலை மற்றும் அதைத் தொடர்ந்த வன்முறைகள்

2016 செப்டம்பரில் இந்நகரத்தில் தொடுக் கப்பட்ட மதவெறித் தாக்குதல், நகருக்கு



மிகப்பெரும் பின்னடைவை மீண்டும் உருவாக்கி விட்டது. 2016 செப்டம்பர் 22−ம் தேதி இரவு 10.30 மணி அளவில் கோவை மாநகர இந்து முன்னணி செய்தித் தொடர்பாளர் சி. சசிக்குமார் (36) துடியலூருக்கு அருகில் ஞானாம்பிகா ஆலைப் பகுதியில் உள்ள அவரது வீட்டிற்கு அருகில் சில மர்ம மனிதர்களால் அரிவாள் போன்ற கூரிய ஆயுதங்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார். உடனடியாக கே.ஜி. மருத்துவ மனை எனும் தனியார் மருத்துவ மனைக்கு அவரைத் தூக்கிச் சென்று அனுமதித்தனர். நள்ளிரவு 12.30 மணிஅளவில் அவர் உயிரிழந்தார்.

சசிக்குமாரின் மரணச் செய்தி பரவியவுடன், தனியார் மருத்துவ மனையில் கூடிய இந்து முன்னணி அமைப்பினர் அம்மருத்துவமனை மீது கல்வீசித் தாக்குதல் தொடுத்தனர். பிறகு அவரது உடல் உடனடியாகக் கோவை மருத்து வக் கல்லூரி அரசு மருத்துவமனைக்கு சடலக் கூறாய்விற்காக எடுத்துச் செல்லப்பட்டது.

எனவே அரசு மருத்துவமனையில் இந்து முன்னணி அமைப்பினர் பெருவாரியாகக் கூடத் தொடங்கினர். இரவு 12.50 மணியிலி ருந்து ஈரோடு, திருப்பூர் உள்ளிட்ட பக்கத்து மாவட்டங்களிலுள்ள தங்களது தொண்டர் களுக்குஇந்தத்தகவல்பரப்பப்பட்டு, அடுத்தநாள் கோவை வருமாறு ஆயத்தப்படுப்பட்டனர்.

இதற்கிடையில் இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேசுவரா சுப்ரமணியம், சசிக்குமார் படுகொலையைக் கண்டித்து தமிழ்நாடு முழு வதும் செப். 23 வெள்ளிக்கிழமை கடையடைப்பு (பந்த்) நடைபெறும் என அறிவித்தார். (தின மணி, 23.09.16, கோவை பதிப்பு) மேலும் “இந்து அமைப்பைச் சேர்ந்த தலைவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டாலும், கொல்லப்பட்டாலும் தமிழ்நாடு மற்றொரு குஜராத் ஆக மாறும்” என அறிவித்தார். (The New Indian Express, 24-09-16) மூகாம்பிகை மணி உள்ளிட்ட பிற இந்து முன்னணித் தலைவர்களும் முசுலீம் மதத் தவர்களை இந்தக் கொலையுடன் தொடர்பு படுத்தி ஊடகங்களில் பேசினார். சசிக்குமார் கொலை, “மதரீதியான கொலை” எனவும், முசுலீம்கள்தான் இதற்குக் காரணம் எனவும் திட்டமிட்டு வதந்திகள் வேகமாகப் பரப்பப் பட்டன.

23−09−16 வெள்ளிக்கிழமை அதிகாலை சுமார் 4 மணியளவில் கோவை நகரிலுள்ள பூ மார்க்கெட் குரத்துல்ஜன் பள்ளிவாசல், கெம்பட்டி காலனி கீரைக்கார வீதி பள்ளிவாசல், கக்கிவார்ப்பேட்டை பட்டேல், மொஹல்லா பள்ளிவாசல் ஆகிய மூன்று இடங்களில் பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டன. ஒரே நேரத்தில் பள்ளிவாசல்களின் மீது நிகழ்த்தப் பட்ட தாக்குதல்கள், முசுலீம் மக்களுக்குச் கோபத்தை மூட்டி எதிர் நடவடிக்கையில் அவர் களை இழுத்து, வன்முறை என்ற சிலந்தி வலையில் சிக்க வைக்க எடுத்த முயற்சியாக இருந்தது.

# உண்மை அறியும் குழு அறிக்கை

இந்தச் செயல்களை முசுலீம் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் நன்கு உணர்ந்திருந்தனர். அவர்கள் முறையாக காவல்துறைக்குத் தகவல் தெரிவித்தனர்.

அன்று காலையிலேயே நகரின் பல்வேறு குறிப்பாக கவுண்டம்பாளையம், துடியலூர் உள்ளிட்ட பல பகுதிகளில் பேருந்துகளின் கண்ணாடி உடைக்கப்பட்டதும் நகரப் பேருந்துகள் கணிசமாக நிறுத்தப்பட்டது. கோவை நகரம் மீண்டும் ஒரு பீதி நிலைக்குத் தள்ளப்பட்டது. நிலைமை விபரீதமாகச் செல்லாது என நம்பி பலர் தங்களின் வணிக நிறுவனங்களைத் திறந்து வைத்திருந்தனர். ஆனால் பல்வேறு பகுதியிலிருந்து சிறு சிறு



எரிக்கப்பட்ட வாகனம்

கூட்டமாக இந்து முன்னணியினர் மற்றும் பிற இந்துத்துவ அரசியல் பிரிவைச் சார்ந்தவர்கள் முசுலீம்களுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பிய படி அரசு மருத்துவமனைக்கு வந்தனர். கூட்டம் சேரத் தொடங்கியதும் அரசு மருத்துவமனைக்கு எதிரே உள்ள கடைகள்மீது கல்வீச்சில் ஈடுபட்டனர். பேருந்துகளை இந்த பகுதிக்குள் வராமல் திருப்பிவிட்டனர்.

மேலும் இரு சக்கர வாகனத்தில் சென்ற இந்து முன்னணியினர் "யாரும் இன்று கடைகளைத் திறக்கக் கூடாது" எனக் கட்டளை இட்டுச் சென்றனர். நகரிலுள்ள கடைகள் அனைத்தும் வலுக்கட்டாயமாக மூடப்பட்டன. பேருந்துகள் நிறுத்தப்பட்டன. மீறி இயக்கப்பட்ட பேருந்துகள் மீது இந்து முன்னணியினர் கல்வீசித் தாக்குதலில் ஈடுபட்டனர்.

காலை 10 மணியளவில் சடலக்கூறாய்வு முடிவடையும் தருணத்தில் இந்து முன்னணியினர் சிலர் மணிக்கூண்டு பகுதிக்கு அப்பால் உள்ள கோட்டைமேடு முசுலீம் குடியிருப்புப் பகுதி யில் உள்ளவர்களைத் தாக்கும் நோக்கத்தில் வின்சென்ட் சாலையினை நோக்கி கற்களை வீசினர். அப்பொழுது முசுலீம் பகுதியிலிருந்தும் சில இளைஞர்கள் எதிர்த்து கற்களை எறிந் துள்ளனர். அப்பகுதியில் உள்ள பள்ளிக்கூடத்தில் தங்கள் குழந்தையினை அனுப்பி வைத்திருந்த பெற்றோர் பீதியுடன் அவசரமாகத் தங்கள் குழந் தைகளைப் பள்ளியிலிருந்து மீட்டுச் சென்றனர்.

பள்ளிக் குழந்தைகள் இந்த வன்செயலில் அதிகம் அச்சுறுத்தலுக்கு உள்ளாயினர். காவல் துறையினர் அவ்வப் போது சிறு தலையீடுகளைச் செய்து வந்தனர். நகர் மண்டபம் மற்றும் உக்கடம் பகுதிக்குச் சென்று வன்முறை யில் ஈடுபட்டனர்.

பெரும்பாலான கோவை நகரக் கடைகள் அந்த சமயத் தில் பீதியின் காரணமாக அடைக்கப்பட்டன. அந்த சூழலில் இந்து முன்னணிக் கொடிகளுடன் அலங்கரிக்கப் பட்ட திறந்த வேனில் சசிக்குமாரின் சடலம் மருத்துவ மனையிலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அச்சமயம் காவல் துறையினர் முன்பாகவே கோவை டவுன்ஹால் பகுதியிலிருந்த முசுலீம் கடைகளின் பெயர்ப் பலகைகள் நொறுக்கப்பட்டு, பூட்டிய கடைகள் உடைக்கப்பட்டு, பள்ளிப் பைகள் உள்ளிட்ட பொருட்கள் சூறையாடப்பட்டன. வழியெங்கும் முசுலீம் பெயர்ப் பலகை உள்ள கடைகள், வீடுகளின் ஜன்னல்கள் கற்களால் தாக்கப் பட்டன.

மேலும் நகர் மண்டபம் அருகில் உள்ள செயின்லியோ பள்ளி அருகில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த ஆட்டோக்கள் கீழே தள்ளப்பட்டு நாசமாக்கப்பட்டன.

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலிருந்து சசிக்குமாரின் வீடு உள்ள மேட்டுப்பாளையம் சாலையில் அமைந்துள்ள ஞானாம்பிகா ஆலை பகுதியான சுப்பிரமணிய புரம் மற்றும் இறுதியாக மயானம் அமைந்துள்ள துடியலூர் வரை ஊர்வலம் திட்டமிடப்பட்டு இருந்திருக்கிறது. வழியில் கோவை இரத்தினபுரியிலுள்ள சசிக்குமாரின் தாயார் வீட்டிற்கும் இறுதி ஊர்வலம் சென்றுள்ளது. சுமார் 18 கிலோ மீட்டர் தூரம் ஊர்வலத்தின் இலக்காக இருந்துள்ளது. காலை 11 மணியளவில் கோவை இரத்தினபுரியிலுள்ள சி.எஸ்.ஐ. புனித பீட்டர் தேவாலயத்தின் கண்ணாடிகள், கற்களால் தாக்கி உடைக்கப்பட்டன.

மேலும் கோவைக்கு அருகிலுள்ள திருப்பூர், அன்னூர், மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி போன்ற பகுதிகளில் கடை உரிமையாளர்களைக் கடுமையாக மிரட்டியும், கல்வீசித் தாக்கியும் கடைகளை மூடச் செய்தார்.

### ஊர்வலத்தில் நடைபெற்ற தாக்குதல்கள்

சசிக்குமாரின் சவ ஊர்வலம் கோவை அரசு மருத்துவமனையிலிருந்து முற்பகல் சுமார் 11 மணியளவில் புறப்பட்ட பொழுது, இரு சக்கர வாகனங்கள், கார், ஆட்டோக்கள் மற்றும் தனியார் பேருந்துகளின் மூலம் சுமார் 4,000 முதல் 5,000 பேர் வரை அங்கு திரண்டுள்ளனர்.

சுப்பிரமணியபுரத்திலுள்ள சசிக்குமாரது இல்லத்திற்கு முதலில் அவரது உடல்கொண்டு செல்லப்பட்டது. அரசு மருத்துவமனையிலிருந்து சுமார் 18 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள துடியலூர் மின் மயானத்திற்கு நல்லடக்கத்திற்காகச் சவ ஊர்வலம் செல்லும் பொழுது, வழியெங்கும் வன்முறைத் தாக்குதல் நடைபெற்றது. அந்த சமயம் நடந்த தாக்குதலில் 11 பேருந்துகள் கல் வீச்சில் சேதமடைந்தன. திருப்பூரிலும் 7 பேருந்துகள் கல்வீச்சில் சேதமடைந்தன. நான்கு காவல்துறை வாகனங்கள் மீதும் கல்வீசித் தாக்குதல் நடைபெற்றது. (The Times of India 24.09.2016, Coimbatore Edition)

ஊர்வலத்தில் வந்தவர்கள் தங்களது தாக்குதல் இலக்கு பற்றித் தெளிவாக அறிந்தவர்களாக இருந்திருக்கின்றனர். ஏனெனில் ஒரு கலவரம் நடைபெறும் பொழுது வரிசையாகச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதுதான் இயல்பாக நடக்கும். ஆனால் இந்தச் சவ ஊர்வலத்தில் முசுலீம் சொத்துக்கள் மட்டுமே குறி வைத்துத் தாக்கப்பட்டுள்ளன. ஊர்வலத்தில் சென்றவர்கள் முசுலீம்களுக்கு எதிராகக் கடுமையான முழக்கங்களை எழுப்பியபடி சென்றனர். இந்த வன்முறை வெறியாட்டத்தில் திட்டவட்டமான ஒரு நோக்கம், தாக்கம் இருப்பதை உணர முடிகிறது. (There was a method in their madness)

இந்த ஊர்வலத்தில் பெரும்பாலும் இளைஞர்கள் அதிகமாக வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். வெறுப்பு மனப்பான்மையில் ஊறித் திளைத்தவர்களாக அவர்கள் இருந்துள்ளதை அவர்களது தாக்குதல் முறை வெளிப்படுத்துகிறது.

1997–ல் கோவையில் நடைபெற்ற கலவரத்திலும் இப்படித்தான் தாக்குதல்கள் நடைபெற்றன. ஒரு முசுலீம் கடை தாக்கப்படும். ஆனால் அருகிலுள்ள இந்துக் கடைகளுக்கு எந்தச் சேதாரமும் ஏற்படாது. பிறகு பல கடைகள் தாண்டி, மீண்டும் ஒரு முசுலீம்களுக்குச் சொந்தமான கடை தாக்கப்படும். இப்படி முசுலீம் கடைகள் மட்டுமே இலக்கு வைத்துத் தாக்கப்பட்டன. அதேமுறை அதே தாக்கம் – 19 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது நடைபெற்ற வன்முறைத் தாக்குதலிலும் பின்பற்றப்பட்டுள்ளது. எனவே உறுதியாக இது ஒரு கலவரம் அல்ல – இது ஒரு திட்டமிட்ட தாக்குதல் என்று உணர முடிகிறது.

இப்படிப்பட்ட தாக்குதல், தற்செயலாக நடைபெற்றிருக்க முடியாது. முன்பே முசுலீம்களின் கடைகளைக் கணக்கெடுத்து வைத்திருந்து, ஏதாவது ஒரு வாய்ப்பு வந்தவுடன், தங்களது வன்மத்தைத் தீர்த்துக்கொண்டு உள்ளனர் என்றுதான் முடிவுக்கு வர வேண்டியுள்ளது.

மேலும் ஊர்வலத்தில் முன்னால் சென்றவர்கள் முசுலீம் கடைகளை அடையாளம் காட்டுவதற்காக, அக்கடையிலிருந்த கண்ணாடியையோ, பெயர்ப் பலகையையோ தாக்கிச் சேதப்படுத்திவிட்டுச் சென்று விடுவார்கள். சில இடங்களில் இந்து முன்னணியின் கொடி அங்கே கட்டப்பட்டு அடையாளங்காட்டப்பட்டதாக அறிய முடிகிறது. ஊர்வலத்தில் பின்னால் உரிய கருவிகள், கற்களோடு வருபவர்கள் அடையாளப் படுத்தப்பட்ட கடையைத் தாக்கி முற்றிலும்

நாசப்படுத்தி இருக்கிறார்கள்.

ஊர்வலம் வரும் பொழுது தாக்குதலுக்குத் தேவையான கற்கள், தொட்டி (மீன் பாடி) வண்டிகளில் கூடவே கொண்டு வரப்பட்டுள் ளன. தவிரவும் கேஸ் வெல்டிங் இயந்திரம், கடப்பாறை, இரும்புக் குழாய்கள், பீர் பாட்டில், பெட்ரோல் போன்றவற்றையும் ஊர்வலத்தில் வந்தவர்கள் கையோடு கொண்டு வந்துள்ளனர்.

ஊர்வலப் பாதை முழுவதும் எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டிருந்தாலும், (டாஸ்மாக்) மதுபானக் கடைகள் மட்டும் மூடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சவ ஊர்வலம் சென்ற பொழுது அப்பகுதியிலிருந்த டாஸ்மாக் கடைகளில் விற்பனை வழக்கத்தை விட அதிகமாக இருந்ததை அறிய முடிகிறது.

ஊர்வலத்தில் சென்றவர்கள் வழி நெடு கிலும் கலவரத்திலும், தாக்குதலிலும், சொத்துக் களை அழிப்பதிலும், வாகனங்களைக் கொளுத்து வதிலும், சூறையாடுவதிலும் தங்குதடையின்றி ஈடுபட்டனர். காவல்துறை ஒருசில இடங்களில் தலையீடு செய்து கூட்டத்தை அப்புறப்படுத்திய போதும், ஓரளவு கட்டுப்படுத்திய போதும், ஊர்வலத்தில் வன்முறையில் ஈடுபட்டவர்களைத் தடுக்காமல், சடலம் மின் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் வரை வன்செயலில் ஈடுபட்டோரின் மீது மென்மையான அணுகு முறையையே கடைப்பிடித்ததை அறிய முடிந் தது. தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்களில் வந்த படங்கள் இதை உறுதி செய்கின்றன.

சவ ஊர்வலம் வட கோவை அஹ்லே ஹதீஸ் பள்ளிவாசலை அணுகிய பொழுது, பிற்பகல் 2 மணி யாகிவிட்டது. தொழுகையை முடித்துவிட்டு, நூற்றுக்கணக் கான முசுலீம்கள் அப்பொழுது அந்தப் பள்ளி வாசலில் இருந்துள்ளனர். ஊர்வலம் கடந்து செல்லட் டும் என அவர்கள் காத்திருந் தனர். ஆனால் ஊர்வலத்தில் வந்தவர்கள் ஏறக்குறைய முக்கால் மணிநேரம் தொடர்ச்சியாக கல்வீச்சில் ஈடுபட்டனர். காவல்துறை அதிகாரிகள் முன்னிலையிலேயே இத்தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றுள்ளது. இத்தகைய தொடர் தாக்குதலால் பொறுமையை இழந்த சில முசுலீம் இளைஞர்கள் எதிர் கல்வீச்சில் ஈடுபட்ட பொழுது அப்பள்ளிவாசலில் இருந்த மூத்த பொறுப்பாளர்கள் அதைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.



## துடியலூர் வன்முறைகள்

கோவை மாநகரக் காவல் எல்லைவரை உள்ள சாய்பாபா குடியிருப்பு பேருந்து நிறுத்தத் திற்கு அப்பால் காவல்துறையினர் ஊரக எல்லை தொடங்குகிறது. ஊர்வலம் இந்த நகர எல்லையைத் தாண்டிய பிறகு, குறிப்பாகக் கவுண்டம்பாளையம் பகுதியிலிருந்து துடியலூர் வரை, வன்முறை உச்சக் கட்டத்தை எட்டி உள்ளது.

கூடலூரரைச் சார்ந்த ரசாக் என்பவர் குடும்பத்துடன் ஊர் திரும்பும் வழியில் மேட்டுப் பாளையம் சாலையில் ஞானாம்பிகா ஆலை அருகில் வந்த போது மாருதி ஆல்டோ காரின் பின்னே எழுதப்பட்டிருந்த "மாஷாஅல்லா" என்ற வாசகத்தைக் கண்ட ஊர்வலத்தினர், ஆட்கள் காரில் இருக்கும்போதே அந்தக் காரினை பலரும் சேர்ந்து தலை கீழாகக் கவிழ்த்து விட்டனர். தலை கீழாகக் கவிழ்க்கப்பட்ட காரி லிருந்து கண்ணாடியை உடைத்து காரிலிருந்த வர்கள் வெளியேறியுள்ளனர்.

இதற்கிடையே மூன்று முறை அந்தக் காருக்கு தீ வைக்கவும் கூட்டம் முயன்றுள்ளது. பக்கத்தில் இருந்த போலீசாரும், பிறகும் அதனைத் தடுத்துள்ளனர். மேலும் அச்சமயம் அந்த சாலையில் வந்த ஒரு முசுலீம் இளைஞர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். காவல்துறை அந்த இளைஞரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

வழியெங்கும் பல இரு சக்கர வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டள்ளன. உணவு விடுதிகள் மற்றும் கடைகள் சூறையாடப்பட்டுள் ளன. துடியலூரிலுள்ள ஹைதராபாத் பிரியாணி ஓட்டலில் ஹலால் என்று எழுதப்பட்டிருந்த காரணத்தால் அது ஒரு முசுலீமின் கடை எனக் கருதி அந்த ஹோட்டலை கேஸ் சிலிண்டர் மூலம் வெடி வைத்துக் தகர்க்க நடைபெற்ற வன்முறை முயற்சியைக் காவல்துறையினர் தடுத்து நிறுத்தி உள்ளனர். அதன் தொடர்ச்சி யாகக் காவல்துறையினர் மீதும் தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது.

துடியலூர் பேருந்து நிலையம் அருகில் நாற்சந்தியில் காவல்துறை வாகனம் தீ வைத்து முற்றாக எரிக்கப்பட்டுள்ளது. இதை வீடியோ எடுத்த தொலைக்காட்சி நிருபரைத் தாக்க முயன்ற கும்பலைத் தடுத்த காவல்துறை அதிகாரி காயமடைந்துள்ளார். அந்த இடத்திலிருந்த இரண்டு பெண் காவலர்கள் பாலியல் கிண்டல் போன்ற அத்துமீறல் மற்றும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அச்சமயம் தடியடி நடத்திக் கூட்டத்தை மற்றொரு காவலர் விரட்டியுள்ளார்.

துடியலூரில் சிம் மொபைல் என்ற கடையில் கேஸ் வெல்டிங் மூலம் இரும்பு சட்டர் கதவுகளை வெட்டி எடுத்து அதிலிருந்த கைபேசிகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இக்கொள்ளைச் சம்பவம் அக்கடையில் இருந்த சிசிடிவி கேமரா மூலம் பதிவாகி இருந்ததால், அக்கொடிய காட்சி அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் வெளியானது.

பென்ஸ் புட்வேர் எனும் செருப்புக் கடை பூட்டிய நிலையிலேயே கடையின் கதவு இடுக்கில் பெட்ரோல் ஊற்றித் தீ வைத்து முற்றிலும் நாசப்படுத்தப்பட்டுள்ளது. அக்கடையில் மட்டும் நாசப்படுத்தப்பட்ட பொருட்களின் மதிப்பு சுமார் இருபது லட்சத்தைத் தாண்டும். இவை தவிர சிறு குறு வணிக நிறுவனங்கள் தொடர் தாக்குதலுக்கு உள்ளாயின.

மகாலட்சுமி பேக்கரி எனும் கடையின் உரிமையாளர் ஏழுமலை இந்து மதத்தைச் சார்ந்தவர். விநாயக சதுர்த்தியைக் கொண்டாட ஒரு பெரும் தொகையைக் கட்டாயம் நன் கொடையாகத் தர வேண்டும் என இந்து முன்னணியினர் முன்பு அவரிடம் வற்புறுத்திய பொழுது, தன்னால் இயலாது என அவர் மறுத்துவிட்டார். எனவே அவரைப் பழிவாங்க இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி, ஊர்வலத் தில் வந்தவர்களால் அக்கடை சூறையாடப் பட்டுள்ளது.

ஆஷிக் மின் கடையிலிருந்த குளிர்சாதனப் பெட்டி, 120 கிலோ மீன்கள், கடை வாகனங்கள், தராசு என இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.

மதீனா பேன்சி கடையை உடைக்க நடந்த முயற்சி வெற்றி பெறவில்லை. எனவே கடைக்கு முன்புறமிருந்த பாட்டில்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன. இதன் உரிமையாளர் முகமது இசுமாயில் (74) 1997 கலவரத்தில் கத்தியால் குத்தப்பட்டு பாதிப்பிற்கு உள்ளான வர் என்பது குறிப்பிடத்தக்கது.

துடியலூரில் அஜ்மீர் மாட்டிறைச்சி, கோழிக் கடை உரிமையாளர் ஷா. இன்ஷா(46) வீட்டில் திருமண ஏற்பாடுகள் நடைபெற்று வந்துள்ளது. சசிக்குமார் சவ ஊர்வலம் அவரின் கடை அமைந்துள்ள சாலை வழியாக மயானத்திற்குச் செல்லும் என்பதால் துடியலூர் பள்ளிவாசல் நிர்வாகிகள் வீட்டைப் பூட்டி விட்டு அவரை உடனடியாக வெளியேறுமாறு எச்சரித்துள்ளனர். அவரது குடும்பத்தாரும் ஆபத்து வரக்கூடும் என அஞ்சி, மணப்பெண்ணையும் மற்றவர்களையும் முன்பே பாதுகாப்பு கருதி வேறு வீட்டிற்கு அனுப்பி வைத்து விட்டனர். பிறகு அனைவரும் வீட்டைப் பூட்டி விட்டு வெளியேறி விட்டனர்.

சுமார் மாலை 4.30 மணியளவில் அங்கு வந்த ஊர்வலத்தினர் அவரது கடையையும், வீட்டையும், திருமணத்துக்காக வாங்கி வைத்த நகைகளையும் சூறையாடினர். இரும்புக் கதவு, ஷட்டர், யூபிஎஸ், பிரிசர், விசிஆர், சலவை இயந்திரம், இரு சக்கர வாகனம், ஆட்டோ எனக்

கண்ணில் பட்ட அனைத்தையும் உடைத்து நாசப்படுத்தி உள்ளனர். இதைத் தடுக்க முனைந்த சுந்தரம் எனும் அவர்களது தொழிலாளியும் தாக்கப்பட்டுள்ளார். அங்கிருந்த எட்டு மாடு களில் 5 மாடுகளைக் காணவில்லை என ஷா இன்ஷா புகார் கூறினார். அவருக்கு மட்டும் சுமார் 15 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதை அறிய முடிந்தது.

ஓட்டல் சர்தார் இராவுத்தர் பிரியாணிக் கடையில் பிரியாணி அண்டா, டி.வி.எஸ். 50 வண்டி, உணவு மேசை, நாற்காலி, மின்விசிறி உள்ளிட்ட மூன்று இலட்சத்திற்கும் அதிகமான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

துடியலூரில் முசுலீம்களின் 33 கடைகளில், 11 கடைகள் எரிக்கப்பட்டும், 22 கடைகள் உடைக்கப்பட்டும் உள்ளன. துடியலூரில் மட்டும் பல கோடி ரூபாய்க்கு மேல் சொத்துக் கள் அழிக்கப்பட்டுள்ளன. அங்கு நடைபெற்ற வன்முறைத் தாக்குதல்களைப் படம் பிடிக்க முயன்ற தொலைக்காட்சி ஊடகத்தினரது கருவிகளும் உடைக்கப்பட்டுள்ளன.

## நெகிழ வைக்கும் மனித நேயச் செயற்பாடு

துடியலூர் ஆர்.எஸ்.தோட்டப்பகுதியிலுள்ள நேரு வீதியில் முசுலீம்கள் கணிசமாக வாழ் கின்றனர். எனவே அவர்களைத்தாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஊர்வலப் பாதையிலிருந்து விலகி அந்த வீதிக்குள் நுழைய, ஊர்வலத்தில் வந்தவர்களில் சிலர் முயன்றுள்ளனர். ஆனால் மனித நேயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக அப்பகுதிசார் இந்துக்களும், பொதுவுடமை இயக்கத் தோழர்களும் இஸ்லாமிய மக்களை ஒரு கேடயம் போல நின்று பாதுகாத்து, இந்துத் துவ வன்முறையாளர்களை விரட்டியடித்து உள்ளனர்.

உண்மை அறியும் குழுவினர் அப்பகுதி யிலுள்ள முசுலீம் பெண்களையும், குழந்தை களையும் சந்தித்த பொழுது அவர்கள் இன்னும் கூட அச்சத்தில் உறைந்து கிடப்பதை உணர முடிந்தது. அப்பகுதியில் மழலையர் வகுப்பில் (யுகேஜி) படிக்கும் ஒரு சிறுமி இப்பொழுது கூட வெளியில் செல்லும் பொழுது பாதுகாப் புக் கருதி குங்குமப் பொட்டு வைத்துக் கொள் வதாகக் கூறிய பொழுது, அங்கு நிகழ்ந்த வன்முறையின் கொடூரத்தை உணர முடிந்தது. தவிரவும், அடிக்கடி யாரோ சிலர் தங்களைப் பின்தொடர்வதாக ஒரு பீதி தங்களை அலைக் கழிப்பதாக அப்பகுதியிலுள்ள பெண்கள் குறிப் பிட்டனர்.

## சேத மதிப்பீடு

கோவையில் நடைபெற்ற வன்செயல்களால் நேரிட்ட இழப்புகள் அளவற்றவை, வன் செயல் களால் அழிக்கப்பட்ட சொத்துக்கள் தவிரவும், திணிக்கப்பட்ட கடையடைப்பால், தொழில் உற்பத்தி நிறுத்தத்தால் ஏற்பட்ட இழப்புகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இது குறித்துப் பல்வேறு தரப்பினரையும் பேட்டி கண்டு 25.09.16 தி இந்து நாளிதழ் விரிவாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் – தமிழ்நாடு சிறு, குறு தொழில்கள் சங்கத்தின் தலைவர் ஜே.ஜே ம்ஸ், “உற்பத்தி, போக்குவரத்து, உழைப்பு போன்ற பல வகைகளில் நாங்கள் தோராயமாக 250 கோடி ரூபாய் இழந்துள்ளோம்” எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பின் கோவை மாவட் டத் தலைவர் ஜி. இருதயராஜா, “நாசப்படுத் தப்பட்ட கடைகளின் மூலம் ஏற்பட்ட இழப்பு 10 கோடி ரூபாயாகும். மாவட்டத்திலுள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டு விட்டதால் நேரிட்ட மொத்த இழப்பு 1000 கோடி ரூபாய்” என அறிவித்துள்ளார்.

## மீண்டும் தாக்குதல் அச்சம்

கோவை ஆத்துப்பாலம் கரும்புக்கடை பகுதியில் 24.9.2016 இரவு சுமார் 8 மணியளவில் சசிக்குமாரின் உடல் அடக்கத்திற்குப் பின் அப்பகுதியில் முசுலீம் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்போவதாக ஒரு வதந்தி பரப்பப்பட்டது. அதன் தொடர்ச்சியாக கரும்புக்கடை பகுதி யில் அதிகமான முசுலீம் மக்கள் கூடினர். அப்போது அப்பகுதிக்கு வந்த கோவை மாநகர காவல் ஆணையர் அவர்களை உடனடியாகக் கலைய உத்தரவிட்டுள்ளார். கூட்டம் கலையாத சூழலில் தடியடி நடத்தப்பட்டு உள்ளது. இதன் தொடர்ச்சியாக அப்பகுதியிலுள்ள சுங்கச்சாவடிக் கண்ணாடிகள் உடைக்கப்பட் டுள்ளது. பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்த தாக முசுலீம்களின் மீது வழக்கு பதிவும் செய்யப்பட்டது.



**கண்டறிந்த உண்மைகள்**

*1)* சசிக்குமாரின் மரணத்தையொட்டி ஆயிரக்கணக்கானோர் திரண்டது தற்செயலானது என்ற கருத்து இருந்த பொழுதும், தாக்குதல்கள் முழுவதும் தற்செயல் நிகழ்வுகள் எனக் கருத முடியாது. ஏதேனும் வாய்ப்புக் கிடைக்கும் பொழுது சிறுபான்மையோரின் பொருளாதார அடித்தளத்தைத் தாக்கி அழிக்க வேண்டும் என்ற முன் தயாரிப்பு இருந்ததாகவே குழு உணர்கிறது. ஒருங்கிணைக்கப்பட்ட மைய வழிகாட்டுதலில் கூட்டம் திரட்டப்பட்டதாகவும் குழு கருதுகிறது. இந்த வன்முறை முழுக்க முசுலீம்களுக்கு எதிராக வெறி ஊட்டப்பட்ட திட்டமிடலாகவும் இருந்தது என்பதை குழு உறுதி செய்கின்றது.

*2)* கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன் மத மோதல்களால் பாதிப்படைந்த நகரம் கோவை. இந்நிலையில் இந்துத்துவ அமைப்புக்களின் வன்முறைச் செயல்பாடுகள் குறித்து காவல்துறை முன் கூட்டியே எச்சரிக்கையுடன் இல்லாமல், மெத்தனமாகவே இருந்துள்ளது. குற்றத் தடுப்பு முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

சசிக்குமாரின் இறுதி ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனக் காவல் துறை கூறிய பொழுதும், தொடக்கத்திலிருந்தே வன்செயலில் ஈடுபட்டவர்களை முழுமையாகக் கலைக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ தவறி விட்டது. ஒரே ஒரு தருணத்தில், அதுவும் காவல் ஊர்தி எடுக்கப்பட்ட பிறகு மட்டுமே தடியடி நடந்துள்ளது.

மேலும் தர்மபுரி இளவரசன், உடுமலைப் பேட்டை சங்கர் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட பொழுது செய்ததைப்போல், சசிக்குமாரது சடலத்தைக் காவல்துறையே இடுகாட்டுக்கு எடுத்தச் செல்லாதது ஏன் என்பதற்கான விளக்கம் தரப்படவில்லை. மொத்தத்தில் அரசிடம் முடிவெடுப்பதிலிருந்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது உள்ளிட்ட அனைத்திலும் செயலற்றத் தன்மை மிகுந்திருந்தது.

*3)* முசுலீம் வழிபாட்டுத் தலங்களின் மீது **23.09.16** வெள்ளிக்கிழமை அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதல்கள் அனைத்தும், முசுலீம்களைத் தூண்டி கலவர வலைக்குள் இழுப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால் முசுலீம்கள் பெரும்பாலும் சுய கட்டுப்பாட்டுடனும், சகிப்புத் தன்மையுடனும் அன்று நடந்து கொண்டுள்ளனர். அவர்களது பொறுமை கோவையில் அமைதி திரும்ப உதவியுள்ளது.

*4)* துடியலூரில் கலவரம் நடந்த பிறகு, அது குறித்தப் புகார் செய்த வணிக நிறுவனங்கள் மீண்டும் தாக்கப்பட்டு உள்ளன. முசுலீம் மக்களிடையில், குறிப்பாகப் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டவர்களிடம் ஆழமான அச்ச உணர்வு விதைக்கப்பட்டுள்ளது. தாங்கள் மீண்டும் தாக்கப்படக் கூடும் என அவர்கள் கருதுகின்றனர். இத்தகைய அச்ச உணர்வு ஜனநாயக சூழலுக்கும், இயல்பான அமைதி வாழ்வுக்கும் ஆபத்தானது.

*5)* கோவை மற்றும் அதனை ஒட்டி உள்ள திருப்பூர், ஈரோடு மாவட்டங்களிலும் சில பகுதிகளில் இந்துக்கள் உள்ளிட்ட எல்லா மதத்தைச் சார்ந்தவர்களும் இந்துத்துவ அரசியல் சக்திகளின் வன்செயல்கள் காரணமாக, தங்களின் உடைமைகளையும், உயிரையும் காத்துக் கொள்ள வேண்டும் என்ற அச்ச உணர்வில் உள்ளனர்.

இத்தகைய அச்ச உருவாக்கம், அரசமைப்புச் சட்டம் அங்கீகரித்துள்ள உரிமைகளுக்கு எதிரானது. உரிமைகளைத் துய்ப்பதற்கும் கேடானது.

*6)* இடதுசாரி அமைப்புகள் தவிர, அரசியல் அதிகாரத்திற்காகப் போட்டியிட்டு ஆளும், எதிர்க்கட்சி எனும் முக்கிய அரசியல் கட்சிகள், பொதுமக்கள் பாதிக்கப்பப்பட்ட இந்நெருக்கடியான சூழலில் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவாகக் குரல் எழுப்பவும், ஜனநாயக சக்திகளுடன் இணைந்து நிற்கவும் தவறியுள்ளன.

*7)* வன்முறையில் நொறுக்கப்பட்ட சூறை



யாடப்பட்ட கடைகளின் உரிமையாளர்கள் தொடுத்துள்ள புகார்களை பரிசீலித்த பொழுது காவல்துறை வழக்கு பதிந்து சிலர் மீது முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்திருந்தாலும் குற்றம் சாட்டப்பட்டவர்களில் வெகு சிலர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர். முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சிலர் குண்டர் சட்டத்தில் இதற்கு முன் கைது செய்யப்பட்டவர்கள் என்றும், ''அறியப்பட்ட குற்றவாளிகள்'' என்றும் சொல்லப்படுகிறது.

*8)* இந்துத்துவ அமைப்புகள் சசிக்குமார் மரணத்தை ஒட்டி முசுலீம்களுக்கு எதிராகத் தாக்குதல் மூலம் மக்களை வன்முறை வலைக்குள் சிக்க வைத்து அதன்மூலம் உள்ளாட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் ஒட்டுமொத்த இந்து மக்களின் ஆதரவை தங்கள் பக்கம்திரட்ட முடியும் எனச் செயல்பட்டதை அறிய முடிகிறது. அதேபோல் உள்ளாட்சித் தேர்தல்கள் வரப்போகும் சூழலில் பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தால் பெரும்பான்மை இந்துக்கள் வாக்குகளை இழக்க வாய்ப்புள்ளதாக ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் கருதி பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலாகச் செயல்படாததும் அறிய முடிந்தது. ஆனால் பொதுமக்கள் மதங்களுக்கு அப்பால் இந்த வன்முறையினைக் கடுமையாக எதிர்த்ததைக் குழு கண்டறிந்தது.

*9)* இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜூன் சம்பத் அவர்களைச் சந்தித்த போது ஊர்வலத்தில் நடந்த வன்முறையில் அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் கலந்திருக்கலாம் என்றாலும், இந்த வன்முறையை தாம் ஏற்கவில்லை என்றார் அவர். இருப்பினும், தொடர்ந்து இந்து இயக்கத்தினர் சிலர் அண்மையில் தாக்கப்பட்டுள்ள பின்னணியில் இந்து மக்களின் கோபம் வன்முறையாக வெடித்திருக்கலாம் என்றார்.

சம்பவத்தன்று தாம் நகரத்தில் இல்லை யென்றாலும் தமக்குக் கிடைத்த தகவலின்படி கவுண்டம்பாளையம் மசூதியிலிருந்து ஊர்வலத்தின் மீது முதலில் கல் வீசப்பட்டதாகக் குறிப்பிட்டார். ஆனால், அது ஊர்வலத்திலிருந்து தொழுகையில் இருந்த முசுலீம் மக்கள் மீது தொடுக்கப்பட்டதாக்குதலால்கோபம்கொண்ட சில முசுலீம் இளைஞர்களின் எதிர்வினைதான் என்பதையும் அதனை முசுலீம் பெரியவர்கள் உள்ளிருந்து தடுத்துள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது.

இறுதியாக இசுலாமிய ''ஜிஹாதிகளின்'' செயல்கள் நிறுத்தப்படாத வரை மத நல்லிணக்கம் சாத்தியம் இல்லை என்றும் பதிவு செய்தார். ஆனால் இந்துத்துவ சக்திகளின் இந்துமத வாதத்திற்கும், அவர்களால் பரப்பப்படுகின்ற இசுலாமிய வெறுப்பு அரசியலுக்கும், வன்முறைக்கும் எதிர்வினையாகத்தான் இசுலாமிய அடிப்படைவாதம் கோவையில் உருக்கொண்டது என்பதைக் கடந்த காலம் மெய்ப்பிக்கிறது. இவற்றையும் கடந்து, வெகு மக்களிடையே சமூக நல்லிணக்கம் தொடர்வது நம்பிக்கையளிக்கிறது.

**பரிந்துரைகள்**

*1)* முசுலீம்கள் மற்றும் பிற மக்களின் வணிக நிறுவனங்கள் நாசப்படுத்தப்பட்டுள்ள நிலையில்,

அரசு உடனடியாகச் சேத மதிப்பீட்டை நியாய மாகக் கணக்கீட்டு, உரிய இழப்பீட்டை குறுகிய கால எல்லைக்குள் வழங்கி, பாதிக்கப்பட்டவர் களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

*2)* திட்டமிட்ட வன்முறைக் கலவரத்தில் ஈடுபட்டவர்கள் மற்றும் கலவரத்தை நேரடி யாகவோ மறைமுகமாகவோ தூண்டியவர்கள் என அனைவர்மீதும் பாகுபாடற்ற முறையில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மேலும் பொதுச் சொத்து சேதங்கள் மற்றும் இழப்புச் சட்டம் (Public Property Damages and Loss Act) வழிகாட்டியுள்ளபடி, வன்முறைக் குக் காரணமான கட்சி / அமைப்புகளிடமிருந்து இழப்பீட்டை வசூலிக்க வேண்டும்.

*3)* சசிக்குமார் இறந்து 12 மணிநேரத்திற்குப் பிறகுதான் சவ ஊர்வலம் தொடங்கி உள்ளது. இதற்கிடையில் அரசு மருத்துவமனையில் ஆயிரக்கணக்கானவர்கள் கூடி வன்முறையில் ஈடுபட அனுமதித்த காவல்துறையின் செயலற்ற தன்மை ஏற்கத்தக்கதன்று.

மேலும், இப்படிப்பட்ட வன்முறை நிகழ்வுகள் நடைபெறக்கூடும் என்பதை முன் கூட்டியே கண்டறியத் தவறி விட்டோம் எனும் காவல்துறையின் விளக்கம் நம்பத்தகுந்ததாக இல்லை. காவல்துறை துணை ஆணையர் கூறும் போது "நாங்கள் ஆயிரம் பேரை எதிர்ப்பார்த் தோம். ஆனால், நாங்கள் சமாளிக்க முடியாத வகையில் 5000 பேர் குவிந்துவிட்டனர்" என்றார்.

ஆனால். மாவட்ட ஆட்சியர் கூறும்போது "நாங்கள் 5000 பேர் வரை எதிர்ப்பார்த்தோம் ஆனால் 50,000 பேர் திரண்டுவிட்டனர். அதனால் எங்களால் கட்டுப்படுத்த முடிய வில்லை" என்று உன்மை அறியும் குழுவிடம் கூறினார். அதிகாரத்தில் உள்ளவர்கள் எப்படிச் சட்டம் ஒழுங்கை காப்பாற்ற திட்டமிடுகிறார் கள் என்பதற்கு இந்த முரண்பட்ட கூற்றுக்களே சான்றாக உள்ளன. ஆகவே, இவை குறித்த விரிவான வெளிப்படையான விசாரணை தேவை.

*4)* முசுலீம்களின் வணி நிறுவனங்களைக் குறி வைத்து நடத்தப்பட்ட வன்முறைக்குப் பின், அவர்களுக்கு வாடகைக்கு கடை கொடுத்த கட்டிட உரிமையாளர்கள், மீண்டும் ஒரு தாக்குதல் நடைபெற்றால் தங்களின் சொத்து மறுபடியும் பாதிப்புக்கு உள்ளாகும் என்ற அச்சத்தில், பாதிக்கப்பட்ட முசுலீம்களிடம் கடைகளைக் காலி செய்ய நேரிடையாகவோ, மறைமுகமாகவோ வற்புறுத்தும் நிகழ்வு சில இடங்களில் நிகழ்ந்துள்ளது. முசுலீமுக்குக் கடை கொடுத்த ஒரு வீட்டு உரிமையாளர், அந்தக் கட்டிடத்தையே தற்பொழுது இடித்து விட்டார். இது பாதிக்கப்பட்டவரை மீண்டும் பாதிப்புக்குள்ளாக்கும் பாதகமான செயலாகும். (Revictimization) எனவே அரசு தலையீடு செய்து, பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்த வேண்டும்.

*5)* சிறுபான்மை மதத்தினருக்கு எதிரான வெறுப்பு அரசியல், இளைஞர்கள்மீது தொடர்ந்து திட்டமிட்டுத் திணிக்கப்பட்டு வருகிறது. இதை அடியோடு களையத்தக்க நல்லி ணக்க நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும்.

*6)* மதச் சிறுபான்மையினருக்கும், பொது மக்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் மதவெறிச் சக்திகளின் மீது தொடர் கண் காணிப்பும், கடும் சட்ட நடவடிக்கையும் தேவை. இந்தச் சக்திகளை அரசியல் வாழ்வில் தனிமைப்படுத்துவது சமூக நல்லிணக்கத்தில் நம்பிக்கையுள்ள அனைவரின் கடமையாகும்.

*7)* கோவையின் குறிப்பான சூழலைக் கணக்கில் கொண்டு, எவ்வித விளைவுகளையும் எதிர்கொள்ளும் வகையில் காவல் துறை பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

*8)* எதிர்பாராத நெருக்கடியான சட்டம் ஒழுங் குச் சிக்கல் ஏற்படும் பொழுது, தீ அணைப்புத் துறை, மத்திய ரிசர்வ் காவல் படை போன்ற வற்றோடு மாவட்ட நிர்வாகம் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

*9)* கொடிய குற்றச் செயல்களிலும், வன்முறைக் கலவரங்களிலும் மது போதையின் முதன்மையான பங்கினை நடந்து முடிந்த செயல்கள் கண்கூடாக மெய்ப்பிக்கின்றன. இதைக் கருத்தில் கொண்டு முழு மதுவிலக்கை அரசு அறிவித்துச் செயலாக்க வேண்டும்.

இதுவே நமது இலக்கு. இருப்பினும், இதற்கிடையில் பதற்றமான நிலைமை எழும் பொழுது மதுபானக் கடைகளை உடனடியாக

மூடி வைக்க நிலையான அரசாணை பிறப்பிக்க வேண்டும்.

10) மாறுபாட்டைச் சகித்துக் கொள்வதும், வேறுபாடுகளை மதிப்பதுமான பண்பாட்டை அனைத்து நிலைகளிலும் திட்டமிட்டு வளர்ப்பதன் மூலம், வறட்டுவாத அடிப் படைவாதச் சக்திகளைச் சிவில் சமூகத்திலிருந்து ஜனநாயக சக்திகள் தனிமைப் படுத்த வேண்டும்.

**உண்மையறியும் குழு நேர்காணல் கண்டவர்கள்**

1. திரு. ஹரிஹரன்,
மாண்புமிகு மாவட்ட ஆட்சியர், கோவை.
2. திருமிகு. கு. லட்சுமி,
துணை காவல்துறை ஆணையர், கோவை.
3. திரு. அர்ஜூன் சம்பத்,
தலைவர், இந்து மக்கள் கட்சி.
4. திரு. ஓ. ராஜா உசேன்,
தலைவர், கோவை அனைத்து இசுலாமிய இயக்கங்களின் கூட்டமைப்பு.
5. அசன்பாதுசா,
பொருளாளர், துடியலூர் பள்ளிவாசல்.
6. ஷாஜகான், துடியலூர்.
7. மகேந்திரபூபதி, சமூக நீதிக்கட்சி, துடியலூர்.
8. தம்பி வினோத், துடியலூர்.

9. வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வன்முறைகளை நேரில் கண்ட சாட்சியங் களின் பெயர்களை அவர்களுடைய பாது காப்புக் கருதி இயன்றவரை இந்த அறிக்கையில் வெளியிடவில்லை.

**உண்மையறியும் குழுவில் பங்கேற்றோர்**

1. கண, குறிஞ்சி,
மாநிலத் தலைவர், பி.யூ.சி.எல்.
2. பேரா. முரளி, மாநிலச் செயலர், பி.யூசி.எல்.
3. முனைவர் மார்கண்டன்,
முன்னாள் துணைவேந்தர்,
காந்தி கிராம் பல்கலைக் கழகம்
4. தியாகு. தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்.
5. சாமுவேல் ராஜ், மாநிலச் செயலர்,
தீண்டாமை ஒழிப்பு முன்னணி.
6. சிவஞானம், மாநில துணை செயலாளர்,
தீண்டாமை ஒழிப்பு முன்னணி.
7. பேரா. ராமசாமி, மக்கள் ஜனநாயக பேரவை (கர்நாடகா)
8. செல்வி, மனதி (பெண்கள் கூட்டமைப்பு) சென்னை.
9. பீர் முகம்மது, எழுத்தாளர்,
10. பழ. ரகுபதி, நேர்மை மக்கள் இயக்கம்.
11. பௌரன், மாநிலச் செயலாளர்,
பி.யூ.சி.எல். (கேரளா)
12. பொன். சந்திரன், மாநில இணைச் செயலர்,
பி.யூ.சி.எல்.
13. க. சரவணன், மாநில இணைச் செயலாளர்,
பி.யூ.சி.எல்.
14. ச. பாலமுருகன், தேசியக்குழு உறுப்பினர்,
பி.யூ.சி.எல்.
15. து. சேகர் அண்ணாதுரை,
மாவட்டச் செயலர், பி.யூசி.எல்.
16. டாக்டர். ரா.ரமேஷ், பி.யூ.சி.எல்.

**அறிக்கையோடு இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள்**

1. சம்பவம் நடந்த நாள், நேரம் மற்றும் இடம் பற்றிய கால வரைவுப் படம் (Time Line)

2. துடியலூரில் பாதிக்கப்பட்டோர் சிலரின் பட்டியல்.

இவன்,

கண. குறிஞ்சி, தலைவர்
(94455 07681)

இரா. முரளி, பொதுச் செயலாளர்
(94438 52788)

பின்குறிப்பு :

உண்மை அறியும் குழுவின் அனைத்து உறையாடல்கள், பேட்டிகள் மற்றும் சேதங்கள் பற்றிய தகவல்கள் அனைத்தும் வீடியோ ஆவணமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இதில் இணைக்கப்பட்டுள்ள புகைப்படங்கள், ஊர்வல வரைபடம், வீடியோ பதிவுகள் அனைத்தும் வழங்கிய TuNo என்னும் சமூக அக்கறைக் கொண்ட ஊடக ஆர்வலர்களுக்கு நன்றி. இதன் பதிவுகளை TuNo என்னும் You tube வலைப் பகுதியில் காணலாம்.



# மழைக்காலத்தில் பரவும் தொற்று நோய்கள்

## (DISEASES SPREADING IN RAINY SEASON)


Dr. S.முஹம்மது அப்சல்

மழைக்காலங்களில் கால மாற்றம் மற்றும் மழை காரணமாக பல வைரஸ்கள், பாக்டீரியாக்கள் அதிகம் உற்பத்தியாகிறது. அதனால் பல தொற்று நோய்கள் பரவுகிறது. அவற்றில் சில எளிதில் குணமடைபவை, சில உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் தன்மை கொண்டவை. மழைக்கால தொற்று நோய்கள் பல வழிகளில் பரவுகிறது.

சாதாரண தடிமன் (Common cold) மற்றும் ஃபுளு (flu) காற்று மற்றும் தொடுவதன் மூலம் பரவும், காலரா, டைப்பாய்டு, டைப்படைடிஸ் A, வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் உணவு மற்றும் நீரினால் பரவும். நோய் உயிர்க் கடத்தியினால் (Vector) மலேரியா, டெங்குக் காய்ச்சல் போன்றவை பரவுகின்றன. மழையில் நனைவதால் சுவாசப் பாதை தொற்று வியாதிகள், உடல் வெப்பம் குறைதல், (hypothermia) போன்றவை ஏற்படும். திடீரென்று வெப்பம் குறைவதால் குளிர் ஒவ்வாமை (allergy to cold) மற்றும் ஆஸ்துமா அதிகரிக்கும்.

### மலேரியா

மழைக்காலங்களில் அதிகம் பரவும் நோய் பிளாஸ்மோடியம் வகை கிருமிகளால் ஏற்படுகிறது. பெண் அனொபிலிஸ் (female anopheles) கொசு கடிப்பதால் இந்நோய் பரவுகிறது. மழைக் காலங்களில் தண்ணீர் தேங்குவதால் இந்த வகை கொசுக்கள் அதிகம் உற்பத்தியாகிறது. இந்தியாவில் இது அதிகம் மரணங்களை ஏற்படுத்தும் நோயாகும். சரியான இடைவெளியில் வரும் ஜன்னி, குளிர் காய்ச்சல், தலைவலி, தசை வலி, தளர்ச்சி, வாந்தி போன்ற அறிகுறிகள் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களிடம் காணப்படும். மலேரியா தீவிர மலேரியா, செரிபரல் மலேரியா போன்றவற்றில் ஒன்றாக வரலாம். நோய்க்கு முறையான சிகிச்சை எடுக்க வேண்டும்.



தண்ணீர் தேங்குவதை தடுப்பதன் மூலம் கொசு உற்பத்தியை தடுக்கலாம். கொசு கடியை கொசுவலை, கொசு விரட்டி மூலம் தடுக்கலாம்.


**காலரா**

காலரா மிகவும் ஆபத்தான தொற்று நோய். நோயை ஏற்படுத்தும் விப்ரியோ காலரே (vibrio cholera) உணவு அல்லது தண்ணீர் மூலம் பரவுகிறது. சுகாதாரமற்ற உணவு, தண்ணீர் இந்நோயை பரவ செய்கிறது. வயிற்றுப் போக்கு (watery stools) இந்நோயின் முக்கிய அறிகுறியாகும் வாந்தி காணப்படலாம். உயிரை அச்சுறுத்தும் நீர்சத்துக் குறைபாடு, முறையான சிகிச்சை செய்யாவிட்டால் ஏற்படும். இக்குறைபாடு காரணமாக தோலின் தன்மை மாறும், கண்கள் சுருங்கி இருக்கும், வாய் வறண்டு காணப்படும். அதிகரிக்கும் இதயதுடிப்பு குறையும், இரத்த அழுத்தம், சிறுநீரக செயலிழப்பு, கோமா ஏற்படலாம். உடலில் நீர்சத்துக் குறைவதை தடுப்பதும், அதை சரி செய்வதும் சிகிச்சையின் முக்கிய அம்சமாகும். தாமதிக்காமல் மருத்துவரை அணுக வேண்டும்.

காலரா தடுப்பூசி சுமார் 6 மாத காலம் பாதுகாப்பு வழங்குகிறது. நோய் பரவும் அபாய காலத்தில் இந்த தடுப்பூசி எடுக்கலாம். கைகளை நீர் மற்றும் சோப்பில் கழுவ வேண்டும். பாதுகாக்கப்பட்ட சுத்தமான தண்ணீர், நன்கு கொதிக்க வைக்கப்பட்ட நீரையே அருந்த வேண்டும். சுகாதார முறை யில் நன்றாக சமைக்கப்பட்ட உணவையே உண்ண வேண்டும். சுகாதார மற்ற சாலை யோர உணவகங்களில் உண்பதை தவிர்க்க வேண்டும்.

**டைப்பாய்டு**

டைப்பாய்டு காய்ச்சல் நீரினால் பரவும் தொற்றுநோய், மழைக் காலங்களில் அதிகம் பரவும். இந்நோய் சால்மொனெல்லா டைபி மற்றும் பாரா டைபி வகை பாக்டீரியாக்களால் ஏற்படுகிறது. இந்நோய் உணவு மற்றும் நீரின் மூலம் பரவுகிறது. அதிக நாட்களாக இருக்கும் காய்ச்சல், தலைவலி, வயிற்று வலி போன்ற அறிகுறிகள் காணப்படும். முறையான சிகிச்சை செய்யாவிட்டால் பல்வேறு உறுப்புகளில் பாதிப்பு ஏற்படும். நோய் குணமடைந்த பின்பும் இந்த வகை பாக்டீரியாக்கள் பித்தப்பையில் காணப்படும்.




நோய் தாக்கியவர்கள் மருத்துவரை அணுக வேண்டும். அதிகம் நீர் உணவு உட்கொண்டால் நீர் சத்து குறைபாடு வராது. மூன்று வருட இடைவெளியில் தடுப்பூசி எடுத்துக் கொள்ள வேண்டும்.

**வயிற்று உபாதைகள்**

மழைக் காலத்தில் வயிற்று உபாதை களான வயிற்றுப் போக்கு, இரப்பைக் குடலழற்சி (Gastero entritis) வாந்தி போன்றவை. இரப்பைக் குடலழற்சியில் இரப்பை மற்றும் குடலில் தொற்று ஏற்படு கிறது. இவ்வகை தொற்று வைரஸ் மற்றும் பாக்டீரியாக்களால் உண்டாகிறது. இந்த தொற்று நோயால் உடலில் நீர் சத்து குறைபாடு ஏற்படும். தகுந்த நீர் சத்து உணவு உட்கொள்ளுவதுடன் மருத்துவ சிகிச்சையும் செய்ய வேண்டும்.

இயற்கை உபாதைகளுக்குப் பின் கைகளை சுத்தமாக கழுவ வேண்டும். பழங்கள், காய்கறிகளை நன்றாக சுத்தம் செய்து சமைத்து உண்ண வேண்டும். சுகாதர மற்ற உணவு மற்றும் தண்ணீரை சாப்பிடக் கூடாது. அதிக காரம், இனிப்பு வகைகளை தவிர்க்க வேண்டும். சமையலறை சுத்தமாக இருக்க வேண்டும்.

**டெங்கு காய்ச்சல்**

டெங்கு காய்ச்சல் பிளேவி வைரஸால் உண்டாகிறது. ஏய்டீஸ் கொசுக்கள் கடிப்ப

தால் இந்நோய் பரவுகிறது. டெங்கு காய்ச்சல், டெங்குக் குருதிப் போக்குக் காய்ச்சல், டெங்கு அதிர்ச்சி கூட்டறிகுறி என்பன உண்டாகலாம். டெங்கு உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் தொற்று நோயாகும்.

காய்ச்சல், குளிர், தலைவலி, கண்ணின் பின் பகுதியில் வலி, தசை வலி, போன்ற அறிகுறிகள் காணப்படும். (Platelet) அளவு குறைவதால் தோலில் சிறிய சிறிய சிவப்பிலான புள்ளிகள் தோன்றும், இரத்த நுண்குழாயில் கசிவு ஏற்பட்டு வாய், மூக்கு பகுதிகளில் சிறிய இரத்தக் கசிவு காணப்படும். சிலருக்கு நோய் கடுமையான பருவத்தை கொண்டிருக்கும். இப்பருவத்தில் கடுமையான இரத்தப் போக்கு, உறுப்புகள் செயலிழப்பு ஏற்படும். முறையான சிகிச்சை செய்யாவிட்டால் அடுத்த கட்டமாக டெங்கு அதிர்ச்சிக் கூட்டறிகுறிக்குச் செல்லும்.

இரத்தப் பரிசோதனை மூலம் நோயை உறுதி செய்யலாம். வலி நிவாரண மருந்துகள், மாத்திரைகள் உட்கொள்ள கூடாது. முறையான மருத்துவ சிகிச்சை முக்கியமானதாகும். கொசு உற்பத்தியை தடுக்க வேண்டும். சுற்றுப்புறத்தை தூய்மையாக வைக்க வேண்டும். தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். கொசு வலை, கொசு விரட்டிகளை பயன்படுத்த வேண்டும்.

### சிக்கன் குனியா

இந்த தொற்று நோய் ஏய்டீஸ் அல்போபைட்டஸ் வகை கொசுக்கள் கடிப்பதால் ஏற்படுகிறது. இந்த வகை கொசுக்கள் தேங்கி கிடக்கும் தண்ணீரில் காணப்படும். இவை பகலில் கடிக்கும். கொசு கடித்து 4 முதல் 8 நாட்களில் அறிகுறிகள் தோன்றும்.

திடீர் காய்ச்சல், மூட்டு வலி (Joint pain) தலைவலி, தசை வலி, குமட்டல், Rashes / சோர்வு போன்றவை இதன் அறிகுறிகள். மூட்டுவலி அதிகமாக இருக்கும். சில நாட்கள் முதல் சில வாரங்கள் வரை காணப்படலாம். நோய் அறிகுறிகளுக்கான சிகிச்சை செய்யப்படுகிறது. இந்த ஹட்டு வலி சில மாதங்கள் வரை தொடரலாம். இதயம் மற்றும் நரம்புகளை பாதிக்கலாம்.

சுகாதாரம் பேணுதல், கொசு உற்பத்தியை தடுப்பது, கொசு கடியை தடுப்பது நோய் பரவுவதை தடுக்கும்.

### மஞ்சள் காமாலை

பிக்கோர்ணா வைரஸ் இவ்வகை நோயை ஏற்படுத்துகிறது. இரத்தத்தில் அதிகரிக்கும் ஃடைசைரனோ அளவின் காரணமாக தோல் மற்றும் கண்ணின் வெள்ளைப் பகுதியில் (Sclera) ஏற்படும். தண்ணீர், உணவு மூலம் நோய் பரவுகிறது.

காய்ச்சல், தலைவலி, வாந்தி, தளர்ச்சி, வயிற்றுப் போக்கு போன்ற அறிகுறிகள் காணப்படும். சிறுநீர் மஞ்சள் நிறத்தில் இருக்கும். இரத்த பரிசோதனை மூலம் நோயை உறுதி செய்யலாம். இந்த நோய் பாதித்தவர்கள் கல்லீரலை பாதிக்கும் எந்த மருந்தையும் சாப்பிடக் கூடாது.

ஹிப்படைடிஸ் A தடுப்பூசி எடுத்துக் கொண்டால் நோய் வருவதை தடுக்கலாம். சுகாதாரமற்ற உணவு மற்றும் தண்ணீரை உண்ணக் கூடாது. முறையாக சிகிச்சை செய்ய வேண்டும்.

### டெப்ரோஸ்பைரோஸிஸ்

இந்த தொற்று நோய் விலங்குகளின் சிறுநீர் அல்லது பாதித்த சிறுநீர் கலந்த நீர் உடல், தோல் பாகங்களில் படுவதால் பரவுகிறது. இந்நோய் பெரும்பாலும் எலிகள் மூலம் பரவுகிறது.

தலைவலி, தசை வலி, காய்ச்சல், குளிர், வயிற்றுவலி, கண்ணில் சிகப்பு, தோலில் சயளா போன்ற அறிகுறிகள் காணப்படும். நோய் தாக்கி 3 முதல் 12 நாளில் அறிகுறிகள் தோன்றும். 3-7 நாட்கள் வரை காய்ச்சல் போன்றவை இருக்கும். நோயாளி 3-4 நாட்கள் அறிகுறிகள் இல்லாமல் இருப்பார்கள். பின் காய்ச்சல் தோன்றும், நோயின் தாக்கம் அதிகரித்து கல்லீரல் சிறுநீரக பாதிப்பு, தண்டு மூளைச் சவ்வுக் காய்ச்சல் போன்ற உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் பாதிப்புக்கள் ஏற்படலாம்.

இரத்த பரிசோதனை மூலம் நோயை

உறுதி செய்யலாம். மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும். இந்நோய்க்கான தடுப்பூசி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அசுத்த மான நோய் பாதித்த நீரைத் தொடாமல் இருக்க வேண்டும். விலங்குகள், பறவைகள் உள்ள சூழ்நிலைகளில் பணிபுரிபவர்கள் கையுறை போன்ற பாதுகாப்பு கவசங்களை அணிந்து கொள்ள வேண்டும். நோய் தொற்று உள்ளவர்கள் மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். வீட்டில் வளர்க்கும் விலங்குகளுக்கு இந்நோய்காக தடுப்பூசி போட வேண்டும்.

**சாதாரண தடிமன்**

சாதாரண தடிமன் (Common cold) என்பது பெரும்பாலும் மேற்புற சுவாசப் பாதைக் கட்டமைப்பில் எளிதாகப் பரவும் ஒரு தொற்றுக் கூடிய நோயாகும். மனிதர்களில் மிகவும் அடிக்கடி தொற்றக் கூடிய நோய் இதுவே யாகும். வயது வந்த சராசரி மனிதருக்கு ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று முறை தடிமன் பிடிக்கிறது. சராசரி குழந்தைக்கு வருடத்தில் ஆறிலிருந்து பன்னிரண்டு முறை தடிமன் பிடிக்கிறது.



இருநூறுக்கும் மேற்பட்ட நுண்ணங்கிகள் (Micro Organisms) சாதாரண தடிமனை உண்டாக்கலாம். சாதாரண தடிமன் முக்கியமாக மூக்கு, தொண்டை சுழற்சி, தொண்டை பீனிசம் ஆகியவற்றை பாதிக்கிறது.

இருமல், மூக்கில் ஒழுகுதல், மூக்கடைப்பு, கரகரப்பான தொண்டை, தசைவலி, சோர்வாக உணருதல், தலைவலி மற்றும் பசியின்மை நோயறிகுறிகளாகும். காய்ச்சல் பெரியவர்களிடம் சாதாரணமாக வருவதில்லை, சிசுக்கள் மற்றும் குழந்தை களிடம் காணப்படும். தடிமனால் உண்டாகும் இருமல் மிதமாகவே இருக்கும் (சளிக் காய்ச்சல்) சாதாரண தடிமனை உண்டாக்கும் பல கிருமிகள் எந்த நோய் அறிகுறியையும் காட்டுவதில்லை. சுவாசப் பாதையின் அடிப்புறத்திலிருந்து இருமுவதால் வரும் சளி நிறமில்லாததிலிருந்து மஞ்சள் மற்றும் பச்சை என மாறும்.

சோர்வடைதலில் துவங்கி குளிர்தல், தும்முதல், தலைவலியுடன் தடிமன் பிடிக் கிறது. ஒழுகும் மூக்கு மற்றும் இருமல் போன்றவை இரண்டு அல்லது மூன்று நாட்களில்தொடர்ந்துவரும்.தொற்றுஏற்பட்ட இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பின் அறிகுறிகள் குறிப்பிடத்தக்கவாறு அவற்றின் மோசமான நிலையை அடைகின்றன. அறிகுறிகள் ஏழிலிருந்து பத்து நாட்களில் தீர்ந்துவிடும் என்றாலும் மூன்று வாரங்கள் வரை நீடிக்கலாம். சிறுவர்களில் 35% முதல் 45% வரை இருமல் பத்து நாட்களுக்கு மேல் நீடிக்கிறது.

நச்சுயிரி இருக்கும் காற்றை சுவாசிப்பது, உறிஞ்சுவது அல்லது தொற்று உண்டாகியிருக்கும் மூக்குச் சளியுடன் அல்லது மாசுபட்ட பொருள்களுடன்தொடர்பு கொள்வது தொற்று பரவ காரணமாகும். தடிமன் பெரும்பாலும் நோயறிகுறிகள் தோன்றிய முதல் மூன்று நாட்களில் அதிகம் தொற்றிக் கொள்ளும். அதன் பின்னர் அவை குறைவான தொற்று உண்டாக்குகின்றன.

சாதாரண தடிமனை தடுப்பதற்கு உடல் வழியே நச்சுயிரி பரவுவதை தடுப்பதேயாகும். இதில் கைகளை கழுவது மற்றும் முகத்திரை அணிவதும் ஆகும்.

நோய்த் தொற்றுக் காலத்தைக் குறைக்கும் என நிரூபிக்கப்பட்ட எந்த விதமான மருந்தோ அல்லது மூலிகை மருந்தோ தற்போது இல்லை. இதற்கான மருத்துவம் நோய் அறிகுறி சார் பரிகாரத் தையே கொண்டுள்ளது. கூடுதல் நேரம் ஓய்வு, அதிக திரவப் பொருட்களை உட்கொள்ளுதல் வேண்டும். இளஞ்சூடான உப்பு நீர் வாய்

கொப்பளித்தல், தொண்டை வலியைக் குறைக்கும். காய்ச்சல் குறைக்கும் மருந்து, இருமல் மருந்துகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.


**இன்புளுவன்சா**

இது பொதுவாக (flu) ஃப்ளு என்று அழைக்கப்படும் உலக அளவில் 3-5 மில்லி யன் மக்கள் நோயினால் பாதிக்கப்படுகின்ற னர். 2,50,000 முதல் 5 லட்சம் மரணங்கள் நிகழ்கின்றன. இவ்வகை தொற்று நோயை இன்புளுவன்சா வைரஸ் உண்டாக்குகிறது. அறிகுறிகள் மிதமானது முதல் தீவிரமானதாக இருக்கும். பொதுவாக அதிக காய்ச்சல், மூக்கு ஒழுகுதல், தொண்டை வலி, தசைவலி, தலைவலி, இருமல், சோர்வு, கண்ணில் சிகப்பு, கண்ணில் நீர் வருதல் போன்றவை காணப்படும். நோய் கிருமி உடலில் சென்ற 2 நாட்களில் அறிகுறிகள் தோன்றும். குழந்தைகளில் குமட்டல், வாந்தி காணப் படும். வைரஸ் நிமோனியா, பாக்டீரியல் நிமோனியா மற்றும் மோசமாகும் ஆஸ்துமா, இதய குறைபாடு போன்றவை இதன் பாதிப்புகளாகும்.

இன்புளுவன்சா வைரஸ் Type A, Type B, Type C என வகைப்படும். இவ்வகை வைரஸ் இருமல் மற்றும் தும்மல் காரணமாக காற்றின் மூலமும், தொற்று பாதித்தவைகளை தொடுவதன் மூலமும் பரவும்.

கைகளை கழுவுதல் மூலம் நோய் பரவு வதை தடுக்கலாம். நோயாளிகள் மருத்துவரை அணுக வேண்டும் அதிகமான நீர் உணவு உண்ணுதல், ஓய்வு மற்றும் மருந்துகள் எடுக்க வேண்டும்.

மழைக் காலத்தில் வரும் பெரும்பாலான நோய்களை சுகாதாரம் பேணுதல், சுற்றுபுறத்தை சுத்தமாக வைத்திருத்தல், கைகளை கழுவுவது, சுத்தமான உணவு, தண்ணீரை உண்ணுவதன் மூலம் தடுக்கலாம். கொசுக்களை ஒழிப்பதும் முக்கியமானதாகும். ஓய்வு, அதிக திரவ உணவு மற்றும் மருத்துவ ஆலோசனையும் முக்கியமாகும்.



# நிர்வாக இயலின் தந்தை
# செர்ஷா சூரி

பகுதி 1

இன்று ஒரு நாடு அதற்கு கீழ் மாநிலங்கள் அதற்கு கீழ் மாவட்டங்கள் அதற்கு கீழ் கிராமங்கள், பஞ்சாயத்துகள். இதுவெல்லாம் இன்று எல்லா நாட்டிலும் பின்பற்றப்படும் பொதுவான நடைமுறை. ஆனால் இதற்கு காரணமான இந்த முறையை அறிமுகப்படுத்தி நல்லாட்சி புரிந்த ஷெர்ஷா என்ற மாமன்னனை நமக்கு தெரியுமா? இன்று நாம் ரூபாய் என்றும் Rupees என்றும் அழைக்கப்படும் பெயர்க்கான காரணத்தை அறிந்துள்ளோமா? நாணய பண்ட மாற்று முறைக்கு அடித்தளமிட்டவரின் பெயர் எப்படி நமக்கு தெரியாமல் போனது? பள்ளிக் கூடங்களில் கற்றுக் கொடுக்கப்பட்டிருந்தால் தானே நமக்கு தெரியும்! பள்ளிக்கூட பாடங்களே வரலாற்றுத் திரிபுகளைத் தானே பெருமளவில் கற்றுத்தருகின்றன.


**ஃபரீத்கான்**

ஆப்கானின் மிக பழமையான பழங்குடி பஷ்டு இனத்திலிருந்து வந்து இன்றைய இந்திய சமஸ்தானத்தின் பீகாரின் ஒரு சிறிய ஆட்சிப்பகுதியை ஆண்டு கொண்டிருந்த வர்களுக்கு மகனாக பிறந்தார் ஃபரீத்கான். சிறு வயதைதொட்டே தனது துள்ளும் அறிவால் சிற்றன்னையின் கோபத்திற்கு ஆற்பட்டு வீட்டை துறந்து பள்ளிக்கூடத்தில் தன்னை தானாகவே இணைத்துக் கொண்டவர். படிப்பில் ஆர்வமும் வரலாற்று அறிவும் ஆன்மிக ஒழுக்கமும் நிறைவாக வளர்த்தெடுக்கப்பட்டு இளவயதை அடைந்ததும் தனது தந்தையின் இறப்பின் காரணமாக அவரது பொறுப்பில் அமர்த்தப்படுகிறார் ஃபரீத்கான்.

சிறு ராஜ்ஜியமாக இருந்தாலும் திறம்பட ஆட்சி செய்து மக்களின் நன்மதிப்பையும் பெற்று சிறந்த தலைவராக அனைவராலும் அறியப்பட்டார் ஃபரீத்கான். ஆக்ராவை ஆண்டதுபோதும் எனது அமைச்சரவையில் சேர்ந்து இனி மக்கள் பணி செய் என்று மன்னரான பஹர்கான் லொகானி சொன்னதும் அமைச்சரவைகளில் சேர்ந்தார்.

**ஷேர்கானான ஃபரீத்கான்!**

ஒருமுறை காட்டில் தன் சிறிய படைகளுடன் சென்று கொண்டிருக்கும் போது இடையில் கிராமத்தார்களை அடிக்கடி தொந்தரவு செய்த புலி ஒன்று தலைப்பட்டது. படை வீரர்கள் ஒதுங்க தன் பிரமாண்ட தோற்றத்துடன் முன்னேறிய ஃபரீத் கான் புலியை நேருக்கு நேர் சந்தித்தார்.



ஒரு மனிதனும் எட்டடி உயரம் கொண்ட புலியும் நேருக்கு நேர் போரில் சந்திக்கிறார்கள். போர் முரசு கொட்டுவதற்கு முன்பே புலி பாய்ந்தது புலியின் வேகத்தை கணக்கிட்டு சற்று விலகி தாடையில் ஒரு பலத்த அடியை கொடுத்தார் ஃபரீத். ஒரே அடி, புலி சுருண்டது! (எந்த மிகைப்படுத்தலும் இல்லை, இச்சம்பவத்தை அனைத்து சரித்திர ஆசிரியர்களும் ஒப்புக் கொள்கிறார்கள்.) சுருண்ட புலியை மேலும் மயக்கமடைய செய்து கால்களைக் கட்டி அரசவைக்கு தூக்கி வந்தார்கள் வீரர்கள்.

மன்னர் வியந்து பார்க்கிறார். வெட்டுக்கள் இல்லை, வடுக்கள் இல்லை எப்படி புலியை

கொன்றீர்கள் என்றதும் ஃப்ரீத்தின் வீரத்தை சொன்னார்கள் வீரர்கள். ஃபரீத்தை பாராட்டி இன்று முதல் உன்னை ஷேர்கான் என அனைவரும் அழைக்கட்டும் என்று அறிவித்தார்.

**இளவரசனின் ஆசானாக ஷேர்கான்!**

பீகார் மன்னன் சுல்தான் தனது மகனுக்கு போர்வித்தைகளையும் நிர்வாக முறைகளையும் கற்றுக் கொடுக்க ஷேர்கானையே ஆசிரியராக நியமித்தார். ஒரு ஆசானாக ஷேர்கான் அனைத்தையும் இளவரசனுக்கு கற்றுக் கொடுத்தார். அந்த சமயம் மன்னனும் நோய்வாய்ப்பட்டு இறந்து விடவே சிறு வயதிலேயே இளவரசன் ஆட்சிக்கு வருகிறான். அவனுக்கு பின்னால் நின்று முழு ஆட்சி பொறுப்பையும் தானே கண்காணிக்கிறார் ஷேர்கான்.



சரியான மன்னன் இல்லாத நாடு அடித்தால் சுருண்டுவிடும் என்ற மிதப்பில் பாபரின் மகன் ஹுமாயுன் பீகாரின் மீது படையெடுக்கிறான். தனது போர் உக்தியால் ஹுமாயுனின் எண்ணத்தை தவிடுபொடியாக்கி ஓட விட்டார் ஷேர்கான். அடுத்து தொடர்ச்சியாக சுனார் கோட்டைக்காக நடைபெற்ற யுத்தத்தில் தோல்வி, ஹுமாயுன் வெளியேறும் இடங்கள் அனைத்தும் ஷேர்கானின் கோட்டையாக மாறியது.

**ஷெர்ஷாவான ஷேர்கான்!**

மிகப்பெரிய நிலப்பரப்பை கொண்ட பேரரசனாக மாறினார் ஷேர்கான். 1539ம் ஆண்டு தன்னை ஷெர்ஷாவாக அறிவித்து கொண்டார். அப்போது ஷெர்ஷாவுக்கு வயது 54!

வீட்டை விட்டு ஓடி வந்த சிறுவனாக தனது வாழ்வை ஆரம்பித்து ஒரு சிறு பகுதியின் ஆட்சியாளனாக அடுத்து நாட்டின் அமைச்சரவை பகுதியில் பிறகு இளவரசனுக்கு ஆசானாக! அப்பப்பா... ஃப்ரீத்கான் ஷேர்கானாக மாற்றம் அடைந்து ஷெர்ஷாவான போது வரை உள்ள வரலாற்றில் இவ்வளவு வீரம் இருந்தாலும் நாம் இதை பேச போவதில்லை.

1540ல் தன்னை பேரரசனாக இருந்த ஷெர்ஷா 1540லிருந்து 1545 வரை மட்டுமே உயிரோடிருந்தார். இந்த ஐந்தாண்டில் இவர் நிகழ்த்திய சாதனை தான் பின்னாளில் நாடுகளுக்கு ஒரு தெளிவான நிர்வாக முறையை கற்றுக் கொடுத்தது. வெறும் ஐந்தாண்டுகள் செய்த சீர்திருத்தங்கள் நாட்டின் ஒட்டுமொத்த வரலாற்றையுமே மாற்ற செய்தது. இந்த பெருமைக்கான ஷெஷாவின் வரலாறு திட்டமிட்டே மறைக்கப்பட்டது வேதனை.

ஐந்து வேளை தொழுகையினாலும் ஃபார்ஷி மொழி பேசுவதாலும் ஷெர்ஷா என்ற பெயரை வைத்ததாலும் ஒரு மத அடையாளத்திற்குள் முடக்கி ஒரு சரித்திர சாதனையாளனின் வரலாறு பேசப்படவில்லையென்றாலும் ரூபாய், முனிஸ்பாலிட்டி என்ற பெயர்களிலும் நாட்டின் பல்வேறு நிர்வாக முறைகளிலும் இன்றும், என்றும் ஷெர்ஷாவின் வரலாறு தொடர்வதை யாராலும் தடுக்க முடியவில்லை.முடியாது!.

**-தொடரும் - அபூ சித்திக்.**


**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரூ. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**
**சென்னை - 600 001.**
**தொடர்ப்புக்கு : 8148129887**

கடந்த 2016 நவம்பர் 8–ஆம் தேதி இரவு திடீர் என்று தொலைக்காட்சி நேரலையில் தோன்றி உரையாற்ற ஆரம்பித்தார் பாரத பிரதமர் தன்னுடைய உரையின் ஆரம்ப 15 நிமிடத்தில் கறுப்பு பண ஒழிப்பு, தீவிரவாதம், பாகிஸ்தான் என தனது வழமையான பல்லவியை பாடிக் கொண்டிருந்தவர், சட்டென்று ரூ. 500 மற்றும் ரூ. 1000 நோட்டுக்கள் இன்று நள்ளிரவு 12.00 மணிமுதல் செல்லாது என்றார்.

மேலும் டிசம்பர் 30 வரை ரூ. 500 மற்றும் ரூ. 1000 நோட்டுக்கள் வங்கியில் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம் என்றும் ஆனால் நாளை நவம்பர் 9 வங்கிகள் செயல்படாது என்றும் அறிவித்தார். தன்னுடைய இந்த அதிரடி நடவடிக்கையால் கள்ளப்பணம், கறுப்புப் பணம், தீவிரவாத நிதியுதவி ஆகியவற்றிற்கு முற்றப்புள்ளி வைத்து விடலாம் என சூளுரைத்தார்.

மோடியின் அறிவிப்பு மக்களை கதிகலங்க செய்தது. அன்று பிரயாணத்தில் ஏறி ரூ. 500–ஐ நீட்டியவர்களிடம் இது செல்லாது என்று சொல்லப்பட்டது. இரவு உணவு உண்ண உணவகத்திற்கு சென்றவர்களிடம் அந்த நோட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதனால் அன்றாடங்காட்சிகள், பாட்டாளிகள் பதறிப் போனார்கள். ஆக மோடியின் அறிவிப்பு அன்று இரவு இந்திய மக்களின் இதயத்தில் ஈட்டியை பாய்ச்சிவிட்டது.

**அவதிக்குள்ளான மக்கள்**

நவம்பர் 10 முதல் ரூ. 500 மற்றும் ரூ. 1000 நோட்டுக்களை வங்கியில் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம் என்று கூறிவிட்டு ஜப்பானுக்கு பறந்துவிட்டார் மோடி. ஆனால் ரிசர்வ் வங்கியின் அறிவிப்பின் வழி பல கெடுபிடிகள் மக்களுக்கு விதிக்கப்பட்டது. நவம்பர் 10 முதல் மக்கள் வங்கிகளை நோக்கி அலைமோத ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்த நேரத்தில் 60 கோடிக்கும் மேற்பட்டவர்களுக்கு வங்கி கணக்கு இல்லை. இப்படி வங்கி கணக்கு இல்லாத மக்கள் வரிசையில் நின்று சொந்த பணத்தை மாற்ற வந்தபோது சில மணிநேரங்களில் வங்கிகளில் பணம் தீர்ந்து விட்டது. எனவே வரிசையில் நின்ற பலரும் பணம் இல்லாததால் பரிதவித்தனர்.

இதன்பிறகு ரூ. 4000 வரை மாற்றிக் கொள்ளலாம் என்றிருந்த அளவுகோல் ரூ. 2000 ஆக மாற்றப்பட்டது. அதையும் அழியா மை வைத்து தான் மாற்றிட முடியும் என்றார்கள். பிறகு கோடிக்கணக்கான மக்களின் மீது எந்த அக்கறையும் இல்லாமல் வங்கி கணக்கு இல்லாதவர்கள் பணத்தை மாற்றிடவே முடியாது என அறிவித்தார்கள். வங்கி கணக்கு உள்ளவர்கள் ஒரு நாளைக்கு ரூ. 10,000 வரையும் ஒரு வாரத்தின் அளவுகோள் ரூ. 24,000 என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் அறிவித்தபடி வங்கிகளில் பணம் தரப்படவில்லை. பணம் தீர்ந்துவிட்டது



என்று ஒரு வார்த்தையில் முடித்து விட்டார்கள்.

உலகிலேயே தான் சம்பாதித்த சொந்த பணத்தை பிச்சை எடுக்கும் அவலம் இந்தியக் குடிமக்களுக்குத்தான் ஏற்பட்டிருக்கின்றது. பின்னர் ஒருபடி மேலே போய் அழியா மை வைக்கப்பட்டு சொந்த பணத்தை எவ்வளவு எடுத்திட வேண்டும் என்பதை அரசு நிர்ணயிக் கின்ற அவலம். இப்படி மோடி அரசு தான் செய்த அறிவிப்பில் 50-க்கும் மேற்பட்ட மாற்றங்களை செய்துள்ளது.

### வரிசையில் நின்று மடியும் மக்கள்

500 ரூபாய், 1000 ரூபாய் செய்தி விட்டால் இந்த தேசம் வளர்ச்சியை நோக்கி நடைபோடும் என்றார் மோடி. இதுவரையில் 130 பேர் வரிசையில் மயங்கி விழுந்தும், சிலர் மாரடைப்பு வந்தும் உயிரிழந்துள்ளனர். இன்னும் சிலர் தன்னிடம் உள்ள பணத்தை மாற்ற இல்லாததால் தற்கொலை செய்துள்ளனர் (இறந்தவர்களின் பட்டியல் தேவைப்படுபவர்கள் தொடர்பு வாய் திறந்திட வில்லை.

### பணத் தட்டுப்பாடு காரணம் என்ன?

அரசின் அறிவிப்பு படி நவம்பர் 8 வரை புழக்கத்தில் இருந்த ரூ. 500 மற்றும் ரூ. 1000 நோட்டுக்களின் மொத்த மதிப்பு ரூ. 15.44 லட்சம் கோடி ரூபாய். இந்த தொகை நாட்டில் புழக்கத்தில் இருக்கும் மொத்தம் பணத்தின் 86 சதவீதம்.

ஆனால் டிசம்பர் 15 வரை ரிசர்வ் வங்கி வெளியிட்ட புதிய நோட்டுக்களின் மதிப்பு வெறும் 4.61 லட்சம் கோடி ரூபாய். இதில் சிறிய தொகை நோட்டுகளும் அடக்கம். புழக்கத் தில் இருந்த 15.44 லட்சம் கோடி ரூபாய்களை பறித்துவிட்டு வெறும் 4 லட்சம் கோடிகளை புழக்கத்தில் விட்டால் எப்படி நிலைமை சீராகும்.

ஆகையால் தான் வங்கிகளில் பணத்தட்டுப் பாடு போதிய முன்னேற்பாடுகளுடன் தான் இந்த நடவடிக்கையில் இறங்கினோம் என்று

# செல்லாமல் போன ரூ. 500, ரூ. 1000 நோட்டுக்குள் மரணத்தின் பிடியில் மக்கள்



கொள்ளலாம்)

தன்னுடைய நடவடிக் கைக்கு மக்கள் ஆதரவு அளித்து வருகிறார்கள் என்று விடாமல் பொய்யை விற்பனை செய்கின்றார். இந்த பொய்யை விற்பனை செய்ய பல கோடிகளை விளம்பரமாகத் தருகின்றார் மோடி. உயிரிழந்தவர் களைப் பற்றி இது வரையில் கூறும் அரசு தரப்பு ஏன் முன்னரே நோட்டுக்களை அச்சடித்திடவில்லை என்று கேள்வி எழுப்பு கின்றனர் பொருளாதார வல்லுநர்கள் மற்றும் வங்கி அதிகாரிகள்.

### குறைந்த கால வலி... நீண்ட கால லாபம் (Short Term Pain - Long Term Gain)

குறைந்த கால வலி – நீண்ட கால லாபம் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது மோடி அரசு. நீண்ட வரிசையில் நீண்ட நேரம் நின்றும் பணம் கிடைத்திடவில்லை என்பதால் மக்கள்



வீதியில் நின்று அழுது கொண்டிருக்கின்றார்கள். ஆக மக்கள் வலியை அனுபவித்துக் கொண்டு தான் இருக்கின்றார்கள்.

### குறைந்த கால வலி என்றால் எது வரையில்?

டிசம்பர் 30–க்கு முன்னரே நிலைமை சீராகிவிடும் என்றார் மோடி. இதுவரை போது மான நோட்டுக்களை அச்சடித்திட வில்லை. வங்கிகளில் நிற்கும் வரிசைகளும் குறைந்திட வில்லை. இந்தியாவில் ரூபாய் நோட்டுக்களை அச்சடித்திடும் அச்சுக்கூடங்கள் (MINT) நான்கு தான் இருக்கின்றது. இந்த நான்கு அச்சுக்கூடங் களும் முழு நேரமும் செயல்பட்டு அச்சிட்டா லும் கூட அதிகபட்சமாக மாதம் ரூ. 300 கோடிகளுக்குமேல் அச்சிட முடியாது.

ஆக பழையபடி நிலைமை சீராவதற்கு இன்னும் 6–7 மாதங்களாகும் என்பதே உண்மை. அதுவரையில் இந்த நாட்டு மக்களின் நிலைமை என்னவாகும். ஜான் கீனஸ் சொன்னது போல் "In the long run. we all will be dead" 'நீண்ட ஓட்டத்தில் நாமெல்லாம் இறந்து விடுவோம்''. – ஆம் நடந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் நமக்கு அதைத்தான் உணர்த்துகிறது.

### இழுத்து மூடப்பட்ட ஏ.டி.எம்.கள்

இந்தியாவில் கிட்டத்தட்ட 2 லட்சம் ஏ.டி.எம்.கள் உள்ளன. அதில் 90 சதவீத ஏ.டி.எம்.கள் அதாவது 1.80 லட்சம் ஏ.டி.எம். கள் புதிய நோட்டுக்களை எடுத்திடும் வகையில் சீரமைக்கப்பட்டுவிட்டது என்றது அரசு. ஆனால் நாடு முழுவதும் உள்ள பெரும்பாலான ஏ.டி.எம். கள் இழுத்து மூடப்பட்டிருக்கின்றன. திறந்திருக் கும் சொற்பமான ஏ.டி.எம்.களின் வாசலில் நீண்ட வரிசையில் மக்கள் காத்துக் கொண்டிருக் கின்றார்கள். நமது வைகறை வெளிச்சம் குழு திருப்பூர், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், நாகை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங் களில் மேற்கொண்ட ஆய்வில் 50 சதவீத ஏ.டி.எம்.கள் இழுத்து மூடப்பட்டும் 40 சதவீத ஏ.டி.எம்.கள் திறந்திருந்தும் பணமில்லாமல் இருந்து வருவது வெட்ட வெளிச்சமானது.

### தனது கூட்டாளிகளுக்கு முன்னரே தெரிவித்த மோடி அரசு

தன்னுடைய பண மதிப்பு நீக்க நடவடிக்கை என்பது நவம்பர் –8 அறிவித்திடும் வரை யாருமே அறிந்திடாத ரகசியம் என்றார் மோடி. ஆனால் தனது கட்சிக்காரர்கள், சேவகர்கள், கார்ப்பரேட் பண முதலைகள் போன்றோருக்கு ரகசியமாக முன்னரே இந்த ரகசியத்தை மோடி தெரிவித்திருப்பது பின்னர் தான் தெரியவந்தது.

### தடை பற்றிய தகவல் வெளியாகும் முன்பே கோடிக்கணக்கில் பணம் டெபாசிட் செய்த மேற்கு வங்க பா.ஜ.க. - மோடி வகையறா

ரூ. 500 மற்றும் ரூ. 1000 நோட்டுக்கள் செல்லாது என்று அறிவிப்பதற்கு முன்பே 3 கோடி ரூபாய் வங்கியில் டெபாசிட் செய் துள்ளது கொல்கத்தா பா.ஜ.க. அறிவிப்பின் சில நிமிடங்களுக்கு முன் 40 லட்சம் ரூபாய் டெபாசிட் செய்ததாக மார்க்சிஸ்ட் கட்சியின் ஜனசக்தி நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. இதனை இந்தியன் வங்கி உறுதி செய்துள்ளதாக வும் அந்த நாளேடு தெரிவித்துள்ளது. நவம்பர் 8ஆம் தேதி பிற்பகல் பா.ஜ.க. வங்கி கணக்கு (எண்.554510034) முதலில் 60 லட்சம் ரூபாயும் அதன் பின் 8 மணியளவில் இரண்டாம் கட்டமாக 40 லட்சம் ரூபாய் டெபாசிட் செய்துள்ளதாகவும் அவை முழுவதும் ரூ. 500 மற்றும் ரூ. 1000 நோட்டுக்கள் என்றும் கூறும் ஜன சக்தி நாளேடு இரவு 8 மணி வரை வங்கி எப்படி திறந்திருந்தது என்று கேள்வி எழுப்பியுள்ளது.

### மோடியின் ரகசியத்தை 13 நாட்களுக்கு முன்பே வெளியிட்ட பத்திரிகையாளர்

மோடி சொன்னாலும் அந்த ரகசியத்தை அவர் அறிவிப்பதற்கு 13 நாட்களுக்கு முன்பே வெளியிட்டுள்ளார் உ.பி. மாநிலம் கான்பூரைச் சேர்ந்த பிரஜேஷ் துபே எனும் பத்திரிகையாளர். இவர் ''தைனிக் ஜாக்ரன்'' என்ற இந்தி நாளிதழில் பணியாற்றி வருகிறார். கறுப்பு பணத்தை ஒழிக்க ரூ. 500 மற்றும் ரூ. 1000 ரூபாய்களை தடை செய்துவிட்டு புதிதாக ரூ. 2000 நோட்டுகள்

அறிமுகப்படுத்தப்படும் என கடந்த அக்டோபர் மாதம் 27–ம் தேதியே செய்தி வெளியிட்டுள்ளார்.

நம்பத் தகுந்த நபர்களிடம் இருந்து தனக்கு தகவல் கிடைத்து செய்தி வெளியிட்டதாகவும் அந்த பெயர்களை தெரிவிப்பது பத்திரிகை தர்மம் அல்ல என்றும் கூறியுள்ளார். தான் செய்தி வெளியிட்ட பிறகு அதை உறுதி செய்வது போன்ற மோடி அறிவித்தது மகிழ்ச்சியாக உள்ளது என்கிறார் பிரஜேஷ். அன்றிலிருந்தே மோடி வகையறாக்கள் தங்களிடமிருந்த 500, 1000 ரூபாய் நோட்டுக்களை வங்கியில் செலுத்த




தொடங்கி விட்டார்கள்.

இச்செய்தியை வெளியிட்ட "தைனிக் ஜாக்ரன்" பத்திரிகை பா.ஜ.க. சார்புடையது.

### புதிய 2000 ரூபாய் நோட்டுகளோடு பா.ஜ.க. பிரமுகர்கள்

1) சேலம் அருகே போலீசார் வாகனச் சோதனையில் ஈடுபட்டபோது பா.ஜ.க. பிரமுகர் அருண்ராம் (36) இடமிருந்து 20.55 லட்சம் ரூபாய்களை கைப்பற்றப்பட்டது. அதில் 18.52 லட்சம் புதிய 2000 ரூபாய் நோட்டுகள். இவரை கட்சியை விட்டு விலக்கியதாக அறிவித்தார்கள். ஆனால் 500 கோடி ரூபாயில் திருமணம் முடித்த ரெட்டி சகோதரர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2) கொல்கத்தாவில் காவல்துறையினர் ஒரு அடுக்கு மாடி குடியிருப்பில் நடத்திய சோதனையில் உள்ளூர் பா.ஜ.க. தலைவர் மகேஷ் சர்மா என்பவர் 33 லட்சம் மதிப்புள்ள புதிய 2000 ரூபாய் நோட்டுகளுடன் பிடிபட்டார்.

### சட்டப்படியான பகற்கொள்ளை... நன்கு திட்டமிட்டத் திருட்டு

மோடியின் கறுப்புப் பணம் என்ற கூப்பாட்டிற்குப் பின் ஒரு பெரும் மோசடி உண்டு என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள். அது,

மோடி வகையறாவின் நண்பர்களான மல்லையா, ரெட்டி சகோதரர்கள் லலீத் மோடி, அதானி போன்றவர்கள் பல கோடிகளை வங்கியில் கடனாகப் பெற்று அப்படியே ஏமாற்றி விட்டு வெளிநாடு போய்விட்டார்கள். அதனால் சில பல வங்கிகள் திவாலாகும் நிலையை நோக்கி வந்துகொண்டிருந்தது.

ஏனெனில் அந்த வங்கிகளில் கைகளிலிருந்த பணம் பறிபோய் விட்டது. தங்களது வாடிக்கையாளர்கள் வங்கிகளில் சேர்த்து வைத்தப் பணத்தை கேட்டதால் என்ன சொல்வது என்ற நெருக்கடியை சந்தித்தார்கள் வங்கியை நடத்துவோர். அதனால் மக்கள் தங்கள் கைகளிலிருக்கும் பணத்தை வங்கியில் செலுத்த வைக்க கண்டுபிடித்த வழிதான் 500 ரூபாய், 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பு.

அறிவிப்பு வந்தவுடன் வங்கிகளில் பணம் வந்து குவிந்துவிட்டன. இதனை பொருளாதார நிபுணர்கள் "Orgnaised loot and legalised blunder" என்றார்கள். அதாவது "மோடி அரசின் நன்றாக ஒருங்கிணைந்த பகற்கொள்ளை, சட்டப்படியான திருட்டு" இந்த சொற்களை முன்னாள் பிரதமரும், பொருளாதார நிபுணருமான மன்மோகன் சிங் அவர்கள் மோடியின் முன்னாள் நின்று நாடாளுமன்றத்தில் முகத்துக்கு நேரே கூறினார்.

இந்த குரூரமான சொற்களைக் கேட்ட பின்பும் சோற்றால் அடித்த பிண்டமாய் அமர்ந்திருந்தார் மோடி. - MGM

3) வங்கிகளின் வரிசையில் மக்கள் ஆயிரங்களை எடுப்பதற்கு தவித்திடும் நிலையில் பா.ஜ.க. வினரிடம் லட்சங்களும் கோடிகளும் புழக்கத்தில் இருப்பது எப்படி என்பது மில்லியன் டாலர் கேள்வி.

நவம்பர் 8–ல் அறிக்கை வரும் முன்பே

பஞ்சாபை சேர்ந்த ஒரு பா.ஜ.க. நாடாளு மன்ற உறுப்பினரின் மகள் 2 ஆயிரம் ரூபாய் நோட்டு கட்டுகளை ஒய்யாரமாக எல்லோருக்கும் காட்டிக் கொண்டிருந்தார்.

## பண மதிப்பு நீக்க நடவடிக்கையால் நின்று போன 50,000 திருமணங்கள்




மோடி அரசின் பண மதிப்பு நீக்க நடவடிக்கையால் ஆந்திர மற்றும் தெலுங்கானாவில் மட்டும் 50,000 திருமணங்கள் நின்று போயிருக்கின்றன. எந்த ஒரு முன்னேற்பாடும் இல்லாமல் அரசு செய்த அறிவிப்பால் பல திருமணங்கள் நின்று போய்விட்டன என்ற செய்தி வெளியிடப்பட்டவுடன் தான் 2.5 லட்சம் ரூபாய்கள் திருமணங்களுக்காக எடுத்துக் கொள்ளலாம் என்ற அறிவிப்பே வந்தது. 2.5 லட்சம் செலவில் எப்படி திருமணத்தை செய்திட முடியும் என்பது ஒரு புறம் இருக்கட்டும், திருமண ஆவணங்களை காட்டி தொகையை வங்கிகளில் பெற்றுக் கொள்ளலாம் என்றார் மோடி. வங்கிகளுக்கு சென்றால் ஆதார் கார்டு, பேன் கார்டு எடுத்து வாருங்கள் என்கிறார்கள். அஃபிடவிட், திருமண அழைப்பிதழ் போன்ற எல்லா ஆவணங்களையும் சமர்பித்த பிறகும் 1.2 லட்சம் ரூபாய்தான் தர முடியும் என்று வங்கி அதிகாரி கூறுகிறார் என்பதை மாதாபூரைச் சேர்ந்த சந்திரிகா என்பவர் பேட்டியில் கூறியுள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடும்போது ஞாயிற்றுக்கிழமை என் மகளின் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்போது தள்ளி வைக்க வேண்டிய சூழ்நிலை. என்னுடைய வீட்டை விற்றுதான் என் மகளின் திருமணத்திற்கு பணத்தை வங்கியில் டெபாசிட் செய்தேன். ஆனால் என்னுடைய பணத்தை எடுப்பதற்கு இத்துனை விதிகள். எல்லாம் செய்தும் பணம் கிடைக்கவில்லை. என் ஒரே மகளுக்கு திருமணம் முடித்திட முடியாமல் போய்விட்டது என்றார்.

## ஆந்திரா வங்கி அதிகாரி எம்.என். சுதாகர் அளித்த பேட்டியில்...

நாங்கள் ரிசர்வ் வங்கியின் விதிகளையே பின்பற்றுகிறோம். அதை எங்களால் மீறிட முடியாது என்றார். மொத்தத்தில் குமரிப் பெண்களின் வாழ்க்கை பாழ்.

## ரூ. 650 கோடி செலவில் பா.ஜ.க. முன்னாள் அமைச்சர் ஜனார்தன் ரெட்டி மகளின் திருமணம்

பா.ஜ.க. முன்னாள் அமைச்சர் ஜனார்தன் ரெட்டியின் மகளுக்கு 16.11.2016 அன்று திருமணம் நடைபெற்றது. அந்த திருமணத்தின் செலவு மட்டும் ஹாலிவுட் படத்திற்கு செலவிடும் அளவு 650 கோடி என்பது மட்டுமல்ல திருமண நிகழ்ச்சிக்கான செட் அமைத்தவர்கள் ஹாலிவுட் இயக்குநர்கள்தாம். செட் அமைப்பதற்கான செலவு மட்டும் ரூ. 150 கோடி. இந்த செய்தி எல்லா பத்திரிகைகளிலும் வெளிவந்ததால் இப்போது கண் துடைப்பு விசாரணை நடந்து கொண்டிருக்கின்றது. மோடி அரசின் 500, 1000 நோட்டுகள் செல்லாது என்ற நடவடிக்கையால் உழைத்து வாழும் பல குடும்பங்களின் திருமணங்கள் நின்று போயிருக்கின்றன பணத்தை எடுத்திட முடியாமல் பல பெற்றோர்கள் பித்து பிடித்த நிலையில் இருக்கின்றனர். ஆனால் ரெட்டி சகோதரர்கள் மோடியின் நண்பர்கள் என்பதால் அவர்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. புதிய பணம் அவர்களுக்கு தாராளமாகக் கிடைக்கின்றன.

## பண மதிப்பு நீக்க நடவடிக்கையால் 7 லட்சம் தொழிலார்கள் வேலை இழந்துள்ளனர்

செல்லாத நோட்டு பிரச்சனையால் வெள்ளிக்கட்டி கொள்முதல் கடும் சிக்கல் ஏற்பட்டு 3 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இல்லாமல் தவித்து

வருகின்றனர்.

சேலம் சுற்று வட்டார பகுதிகளில் வெள்ளி கால் கொலுசு, மெட்டி, அரைஞான்கொடி, குங்குமச் சிமிழ் உள்பட பல்வேறு விதமான வெள்ளி ஆபரணங்கள் உற்பத்தி செய்யப்படு கின்றன. இந்த தொழிலில் 4 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர்.

நாள் ஒன்றுக்கு 30 டன் வெள்ளிப் பொருட் கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு கிலோ வெள்ளிக்கட்டி வாங்க 35 ஆயிரம் பணம் வேண்டும். ஆனால் வங்கிகளில் வாரத்திற்கு அதிகபட்சம் ரூ. 24,000 தான் வழங்கப்படுகிறது. இதனால் யாரும் வெள்ளிக்கட்டியை கொள் முதல் செய்வதில்லை. கடந்த 20 நாட்களாக 80 சதவீத பட்டறைகள் மூடப்பட்டுள்ளன. இத்தொழிலைச் சார்ந்த 3 லட்சம் தொழி லாளர்கள் வேலையின்றி தவிக்கின்றனர். (தின கரன் 9–12–2016)

ரூ. 500 மற்றும் ரூ. 1000 நோட்டு செல்லாது என்ற அறிவிப்பால் 4 லட்சம் தொழிலாளர்கள் ஏற்கனவே வேலை இழந்துவிட்டார்கள் என்று ஃபினான்சியல் எக்ஸ்பிரஸ் பத்திரிகை 2016




நவம்பர் 24 தேதியே செய்தி வெளியிட்டுள்ளது. தொழிலாளர்களைச் சார்ந்து இருக்கின்ற ஜவுளி மற்றும் ஆடை உற்பத்தி துறை, தோல் உற்பத்தி துறை இன்னும் நகை உற்பத்தி கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கின்றது.

பெரும்பாலும் தினக்கூலிகள் தங்கள் வேலையை இழந்துள்ளனர். காரணம் பணத் தட்டுப்பாடு, பழைய நோட்டுக்கள் செல்லாமல் போனதுதான். ஆடை மற்றும் ஜவுளி துறையில் மட்டும் கிட்டதட்ட 13.2 கோடி



தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்கள் யாவரும் தினக்கூலி அல்லது வாரக்கூலி பெற்று வருபவர்கள். இவர்களின் ஐந்தில் ஒரு பகுதியின ர் மரணப்பிடியில் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

ஆடை மற்றும் ஜவுளி துறை கேந்திரமான திருப்பூர் போன்ற பகுதிகளில் 70% பேர் வட மாநிலம், வட கிழக்கு மாநிலத்தில் இருந்து வந்து பணிபுரிகின்றனர். இவர்களின் பெரும் பாலும் யாரும் வங்கி கணக்கு இல்லாதவர்கள். தோல் உற்பத்தி துறையில் 2.5 லட்சம் பேர் தினக்கூலி பெரும் தொழிலாளர்கள் இவர் களின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாக்கப்பட்டி ருக்கின்றது. 15–20 சதவீதம் நகை செய்யும் தினக் கூலி பெரும் தொழிலாளர்களும் பாதுகாக்கப் பட்டிருக்கின்றனர். வேலையின்றி தவிக்கின் றனர். இப்படி 4 லட்சம் பேர் வேலை இழந்து விட்டதாக கூறிவிட்டு இது குறைந்தபட்ச மதிப்பீடுதான் என்கிறது ஃபினான்சியல் எக்ஸ்பிரஸ் ஆக மொத்தத்தில் 7 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலை இழந்துள்ளனர்.

### கறுப்பு பண ஒழிப்பு மோடியின் கபட நாடகம்

தான் ஆட்சிக்கு வந்தால் வெளிநாட்டு வங்கிகளில் இருக்கும் இந்தியர்களின் கறுப்பு பணத்தை மீட்டு ஒவ்வொரு குடிமக்களின் வங்கி

கணக்கிலும் 15 லட்சம் வைப்பீடு செய்வேன் என்று வாய் சவடால் விட்டு ஆட்சியைப் பிடித்த மோடி கும்பல் அதை செய்திட திறாணி யில்லாமல் திசை திருப்பிடவே ரூ. 500 மற்றும் ரூ. 1000 நோட்டுக்கள் செல்லாது என்ற அறிவிப்பை செய்துள்ளது.

தன்னுடைய நடவடிக்கையால் கறுப்பு பணம் ஒழிந்து விடும் என்றும் கறுப்பு பணம் வைத்திருப்பவர்கள் தான் இதை எதிர்க்கிறார்கள் என்றே பேசி வருகிறார் மோடி. மோடியின் நடவடிக்கையை எதிர்க்கட்சிகள் மட்டும் எதிர்த் திட வில்லை. வங்கிகளில் நீண்ட வரிசையில் நிற்கும் கோடான கோடி மக்களும் எதிர்த்து வருகிறார்கள்.

வங்கி வரிசைகளில் நிற்கும் மக்களிடம் கறுப்பு பணம் உள்ளதா அல்லது மோடியின் நண்பர்களான அதானி, அம்பானி போன்றவர் களிடம் கறுப்பு பணம் உள்ளதா என்ற கேள்விக்கு பதில் சொல்ல தயாராக இல்லை மோடி கும்பல். 2011–ல் வெளியிடப்படட ரிசர்வ் வங்கிகளில் பணத்தை பதுக்கி வைத்திருக்கும் 648 இந்தியர்களின் பெயர் கொண்ட பட்டியல் மத்திய அரசிடம் உள்ளது. அப்பட்டியலில் உள்ள பெயர்களை வெளிப்படுத்திட மோடி அரசு தயாராக இல்லை. 2015–ல் சுவிஸ் வங்கிகளில் கறுப்பு பணம் பதுக்கி வைத்திருப்பவர்களின் பெயர் பட்டியலை சுவிட்ஜர்லாந்து அரசு இதழில் வெளிப்படுத்தியது. அதில் 5 இந்தியர் களின் பெயர்கள் இடம் பெற்றிருந்தது. இப்படி நூற்றுக்கணக்கான மோடியின் நண்பர்கள் கறுப்பு பணம் பதுக்கி வைத்திருக்க பண முதலைகள் யார் என்று தெரிந்தும் அவர்களின் மீது இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுத்திடாத மோடி, கறுப்பு பண ஒழிப்பு நடவடிக்கை என்று கோடான கோடி மக்களின் வாழ்வாதாரத்தை ஒழித்துவிட்டார். ஆக பண மதிப்பு நீக்க நடவடிக்கை என்பது மோடியின் கபட நாடகமே.


### வங்கிகளுக்கு திரும்பும் கறுப்பு பணம் எதிர்ப்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்

கடந்த மார்ச் மாதம் வரை புழக்கத்தில் இருந்த ரூ. 500 மற்றும் ரூ. 1000 நோட்டுக்களின் மதிப்பு 14.18 லட்சம் கோடி ரூபாய் என்பது அதிகாரப்பூர்வமான தகவல். ஆனால் நவம்பர் 8–ஆம் தேதி அது 15.44 லட்சம் கோடி என்று அறிவிக்கப்பட்டது. 5.44 லட்சம் கோடி ரூபாய்கள் கறுபபு பணம் அவை வங்கிகளுக்கு திரும்பிவிடாது என்பதே அரசு மற்றும் ரிசர்வ் வங்கியின் எதிர்பார்ப்பு. அப்படி 5.44 லட்சம் கோடி திரும்ப வரவில்லை என்றால் அது அரசுக்கு லாபமாகவே அமையும் என்றார்கள். ஆனால் டிசம்பர் 10–ந் தேதி வரை திரும்ப பெறப்பட்ட பழைய ரூ. 500 மற்றும் ரூ. 1000 நோட்டுகளின் 14.44 லட்சம் கோடி என்றது ரிசர்வ் வங்கி. அப்படியானால் பல உயிர்களை காவு வாங்கிய பிரதமரின் பண மதிப்பு நீக்க நடவடிக்கை படு தோல்வி.


இப்போது பரபரப்பான விற்பனையில்




விலை ரூ. 200 மட்டுமே




விலை ரூ. 225 மட்டுமே

வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

# குலுங்கியது கும்பகோணம்

பொது சிவில் சட்டத்தை எதிர்த்து தஞ்சை மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை அனைத்து பள்ளிவாசல் ஜமா அத்துகள் மற்றும் அனைத்து இஸ்லாமிய இயக்கங்கள் சார்பில் 26.11.2016 சனிக்கிழமை அன்று பெரிய பள்ளிவாசல் தெரு, மார்னிங் ஸ்கூல் அருகில் மிகவும் பிரமாண்டமான கண்டன பொதுக்கூட்டம் மாலை 6.30 மணிக்கு நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான ஆண் களும், பெண்களும் திரளாக கலந்துகொண்டது அனைவரையும் வியப்படையச் செய்தது.

மௌலவி ஹாபிழ் ஏ. மஹ்மூத் ஹசன் தாவூதி கிராஅத் ஓதி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். ஏ.இ.எம். அப்துர் ரஹ்மான் ஹஜ்ரத் தலைமை உரை நிகழ்த்தினார்.

அனைத்து இயக்கத் தலைவர்கள் ஜமா அத்துல் உலமா சபை நிர்வாகிகள் தங்களுக்குரிய பாணியில் தங்களது கண்டன உரையை நிகழ்த்தி தங்களது எதிர்ப்பை தெரிவித்தார்கள். மேலும் நரேந்திர மோடியின் கையாலாகத் தனத்தையும் தோலுரித்துக் காட்டினார்கள்.

பொதுசிவில் சட்டத்தை கைவிட வேண்டும் என்றும், அதை கைவிடாவிட்டால் அதை முறியடிப்போம் என்றும் அதற்காக முஸ்லிம்கள் தங்கள் உயிரையும் கொடுப்பார்கள். (அல்லாஹு அக்பர் என்ற முழக்கம் கும்பகோணத்தையே அதிர வைத்தது) என்று வீர முழக்கமிட்டார்கள்.

மேலும் இந்தியாவை ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர் அக்பர் "தீனுல் இலாஹி" என்ற ஒரு புதிய மார்க்கத்தை அறிமுகப்படுத்தினார். அதை உலமாக்கள், முஸ்லிம் அறிஞர்கள் எதிர்த்தனர். அதில் வெற்றியும் கண்டனர். அந்த "தீனுல் இலாஹி" –ஐத்தான் மாற்றம் செய்து பொது சிவில் சட்டம் என்று அறிவித்திருக்கிறார் நரேந்திர மோடி. இதையும் உலமாக்கள், அறிஞர்கள், முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றுபட்டு எதிர்பார்ப் பார்கள், முறியடிப்பார்கள். (இன்ஷா அல்லாஹ்)

1951–ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் டாக்டர். அம்பேத்கர் அவர்கள் இந்து கோட்பில் எழுதினார். அதைத்தான் பொது சிவில் சட்டம் என்கிறார்கள். நாடாளுமன்றத்தில் அதை அறிமுகப்படுத்திட முயன்றார்கள் முடிய வில்லை. எதிர்த்தார்கள். நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது, இந்து நெறிமுறைச் சட்டம் தான். பொதுசிவில் சட்டம், அது முஸ்லிம் களுக்கு அல்ல என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

**... தீர்மானம் ...**

1. பொதுசிவில் சட்டம் இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் உள்ள ஆர்ட்டிக்கிள் 44ஐ நீக்க வேண்டும்.
2. பொதுசிவில் சட்டத்தை எதிர்த்து தமிழக சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.
3. பள்ளிவாசல், தர்ஹாக்களில் கூம்பு வடிவ ஒலி பெருக்கியை அகற்ற காவல்துறை ஏற்படுத்தும் பதற்றத்தை தடுத்த நிறுத்த முயற்சி செய்ய வேண்டும்.
4. விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும்.
5. ஜாகிர் நாயக் மற்றும் அவரது அறக்கட்டளையின் மீது மத்திய அரசு தொடுத்துள்ள நடவடிக்கையை திரும்ப பெற வேண்டும்.
6. 500, 1000 நோட்டுக்கள் செல்லாது என்ற அறிவிப்பை திரும்ப பெற வேண்டும்.
7. வக்ஃபு வாரிய சொத்தை தமிழக அரசு சீர்படுத்த வேண்டும்.
8. மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கை 2016–ஐ கைவிட வேண்டும்.
9. முஸ்லிம் சிறைவாசிகளையும், ஆயுள் தண்டனை சிறைவாசிகளையும் கருணை அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும்.
10. பாபர் மசூதி, ராமஜென்ம பூமி பிரச்சினைகளை கிளப்பி கலவரங்களை தூண்டும் பாசிச, சங்பரிவார அமைப்புகளை தண்டிக்க வேண்டும்.
11. நாட்டின் இறையாண்மைக்கும் ஒற்றுமைக்கும் எதிராக சமூக வலைத்தளங்கில் நச்சு கருத்துக்களை பரப்புபவர்கள் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து தண்டிக்க வேண்டும் என்றும் இதில் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**



# கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய்

எந்த விதமான கற்பனையும் இன்றி முந்தைய காலத்து கண்டுபிடிப்புகளை ஆராய்ந்து பார்ப்போமேயானால், மனித இன வரலாற்றை தெளிவாக புரிந்து கொள்ள இயலும்.

ஏற்கனவே கூறியது போல, எல்லா கால கட்டங்களிலும் வளர்ச்சியடைந்த நாகரீகங்களும், வளர்ச்சியுறாத, பின் தங்கிய நாகரீகங்களும் சம காலங்களில் வாழ்ந்துள்ளன. நாம் விண்வெளி தொழில் நுட்பத்தை பற்றி மகிழ்ச்சியுறும் அதே வேளையில் உலகத்தின் மற்ற பகுதிகளில், வளர்ச்சியடையாத நிலையில் மக்களும் வாழத்தான் செய்கின்றனர். இதைப்போன்றே பண்டைக்கால எகிப்தியர்கள் மெச்சத்தக்க நாகரீகங்களை கொண்டிருந்த அதே வேளையில் உலகத்தின் பிற பகுதிகளில் பின் தங்கிய நாகரீகங்களை கொண்டவர்களும் வாழ்ந்துள்ளனர்.

வளர்ச்சியடைந்த நகரங்களை உருவாக்கிய மாயன் இனத்தவர்கள் விட்டு சென்றதை ஆராயும் போது அவர்கள் உயர்ந்த தொழில் நுட்பத்தை கொண்டிருந்தது நமக்கு புரிகிறது. அவர்கள், வீனஸ் கிரகத்தின் சுற்று வட்டப் பாதையையும், ஜுபிடர் கிரகத்தின் சந்திரன்களையும் கண்டுபிடித்துள்ளனர். இவர்கள் வாழ்ந்த அதே காலகட்டத்தில், ஐரோப்பாவின் அநேக பகுதிகளில் வாழ்ந்தவர்கள், சூரிய குடும்பத்தின் மையமாக பூமியை(தவறாக) கருதியுள்ளனர்.

மூளை அறுவை சிகிச்சையில் சிறந்து விளங்கிய எகிப்தியர்கள் வாழ்ந்த அதே நேரத்தில் மற்ற பகுதிகளில் வாழ்ந்தோர் தீய சக்திகளின் காரணமாகவே நோய்கள் உருவாகின்றன என நம்பிக்கை கொண்டிருந்தனர். சட்டம், கலை, இலக்கியம், வானியல் ஆகியவற்றில் மெசபடோமியாவில் வாழ்ந்த சுமேரியர்கள் கை தேர்ந்தவர்களாக இருந்த அதே நேரத்தில் உலகத்தின் மற்ற பகுதிகளில் வாழ்ந்தோர் கல்வி அறிவு அற்றவர்களாக இருந்துள்ளனர். ஆகவே, இன்று காணப்படும் நாகரீகங்கள் அனைத்தும் முன்னேறியது என்று கூற முடியாதோ அதேப் போன்று தான் முற்காலத்தில் வாழ்ந்த அனைவர்களும் பின் தங்கியவர்கள் என்றும் கூற முடியாது.

இதுவரை, வரலாற்றின் பல்வேறு கால கட்டங்களில் பெறப்பட்ட சான்றுகளை ஆராய்ந்துள்ளோம், மேலும் நூறு மற்றும் பத்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தோரின் கலாச்சாரங்களையும் மீளாய்வு செய்துள்ளோம். நமக்கு சற்று முந்தைய வரலாற்றை நோக்கும் போது, மனிதன், மனிதனாகத்தான் வாழ்ந்துள்ளான் என்ற சான்றுகளே கிடைக்கின்றன.

20 ஆம் நூற்றாண்டில் தொழில் நுட்பங்கள் வளர்ந்துள்ளதால், தொல் இயல் துறை ஆராய்ச்சிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. மனித இனத்தை பற்றிய உண்மையான வரலாறும் அதிகம் அதிகம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.





இவைகள் ஆயிரம் ஆண்டுக்கு முன்னர் வாழ்ந்த எகிப்து, மத்திய அமெரிக்க, மெசபடோமியா மற்றும் பிற பகுதிகளில் வாழ்ந்தோரின் வாழ்க்கை முறையும், இன்று வாழ்வோரின் வாழ்க்கை முறையும் ஒத்திருக்கின்றன என்று வெளிபடுத்துகின்றன.

**மெகாலித்ஸ்** (Megalith) **எனப்படும் பெருந் தூண்கள் - மனித வரலாற்றில் ஒரு வியப்பூட்டும் கலை வேலைப்பாடு:**

மிகப் பெரிய கற் தூண்களை கொண்ட நினைவு சின்னத்தையே மெகாலித் என அழைக்கின்றோம். இன்றளவும் அதிகமான பழங்கால மெகாலித்கள் காணப்படுகின்றன. இதில் திகைப்பூட்டும் அம்சம் என்னவெனில், டன் எடை கொண்ட மிகப்பெரிய கற் தூண்களை எவ்வாறு கட்டுமானத்திற்கு பயன்படுத்தினார்கள்? எந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்தி இவைகள் கட்டுமானம் நடைபெறும் இடத்திற்கு கொண்டு வரப்பட்டன என்பதே. அன்றைய கால மக்கள் எவ்வாறு இப்பெரிய தூண்களை ஒன்றின் மீது ஒன்று வைத்து கட்டட அமைப்பை எழுப்பினார்கள்? இத்தகைய மெகாலித்களில் பயன்படுத்தப்பட்டுள்ள கற்கள் மிகத் தொலைவில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் இவைகள் இன்று கட்டுமானத்துறையின் அற்புதங்களாக கருதப்படுகின்றன. இவைகளை உருவாக்கியவர்கள் மிகத் தெளிவான, உயர்ந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்தியுள்ளனர்.

எல்லாவற்றிற்க்கும் முதலாக, இந்த நினைவு சின்னங்களை உருவாக்குவதற்கு திட்டமிடுதல் மிக அவசியம். மேலும் இப்பணியில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் இத்திட்டம் பற்றி முழுமையாகவும், தெளிவாகவும் விளக்கப்பட்டிருக்க வேண்டும். எங்கே இந்த நினைவு சின்னங்களை எழுப்ப வேண்டும் என்பதற்கான தொழில் நுட்ப வரைபடங்களும் தயார்படுத்தியிருக்க வேண்டும். மேலும் இந்த வரைபடங்களில் உள்ள கணக்கீடுகள் பிழைகள் அற்றதாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் ஒரு சிறிய தவறே போதும் இந்த நினைவு சின்னங்களை எழுப்ப முடியாமல் போவதற்கு. கட்டுமானப் பணி நடக்க வேண்டுமெனில் இப்பணியில் ஈடுபட்டிருக்கும் குழுவும் பிழைகளை செய்யாதவர்களாக இருந்திருக்க வேண்டும்.

வேலையாட்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அவர்களின் தேவைகளை (உணவு, ஓய்வு) பூர்த்தி செய்தல் போன்ற காரணிகள் இப்பணி செவ்வனே நடைபெறுவதற்கு முக்கியமானவையாகும்.

நிச்சயமாக, இந்த நினைவு சின்னங்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த மக்கள் நாம் கற்பனை செய்வதை விட அறிவு மிகுந்தவர்களாகவும், தொழில் நுட்பத்தை கொண்டவர்களாகவும் இருந்திருக்க வேண்டும். ஏற்கனவே நாம் இப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளது போல், நாகரீகங்கள் எப்பொழுதும் முன்னோக்கியே சென்று கொண்டிருக்கவில்லை. சில சமயங்களில் இது பின்னடைந்துள்ளது. உண்மையில் வளர்ச்சி பெற்ற நாகரீகங்களும், வளர்ச்சி பெறாத நாகரீகங்களும் சம காலங்களில் உலகத்தின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்துள்ளன.

தொல்லியல் துறை மற்றும் வரலாற்று தடயங்களின் படி, மெகாலித்-ஐ எழுப்பியவர்கள் வளர்ச்சியடைந்த நாகரீகங்களை கொண்டிருந்தார்கள் என்பதே. இந்த கட்டமைப்பை பார்க்கும் பொழுது, இவர்கள் கணிதவியலிலும், வடிவியற் கணிதத்திலும் கைத்தேர்ச்சி பெற்றவர்களாக இருந்துள்ளனர் என்பதை காட்டுகின்றது. மலைப் பகுதிகளில் நிலை புள்ளிகளை கணக்கிட்டு கொள்வதன் மூலம், இந்த நினைவு சின்னங்களை எழுப்புவதற்கு தேவையான தொழில் நுட்பத்தையும் அவர்கள் அறிந்து வைத்துள்ளனர்.

புவியியல் நிலைகளை கண்டறிய கருவிகளை (திசை காட்டி -காம்பஸ்) பயன் படுத்தியுள்ளனர். பல கிலோ மீட்டர் தொலைவில் இருந்து

கட்டுமானத்திற்கு தேவையான பொருள்களை, தேவைப்படும் நேரத்தில் போக்குவரத்து செய்துள்ளனர். தெளிவாக இவர்கள் கற்கால கருவிகள் (என்று அறியப்படுகிற) மற்றும் மனித வளத்தை கொண்டு இவற்றை நிர்வகித்திருக்க முடியாது. பரிணாமத் தத்துவம் கூறும் சூழ்நிலைகளின் அடிப்படையில் இந்த நினைவு சின்னங்களை எழுப்பவே முடியாது என்று ஆராய்ச்சியாளர்களும் தொல் இயல் துறை வல்லுனர்களும் பல சோதனைகளை நடத்தி தெளிவாக்கியுள்ளனர்.

இந்த ஆராய்ச்சியாளர்கள் இதைப்போன்ற அமைப்பை உருவாக்குவது கடினம் என்று மட்டும் கண்டுபிடிக்க வில்லை. ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு இக்கற்களை கொண்டு வருவதிலும் மிகவும் சிரமம் இருப்பதாக வும் கண்டுபிடித்துள்ளனர்.

ஆயிரம் வருடங்களுக்கு முந்தைய நாகரீ கங்களிடமிருந்து கற் தூண்களும், கற் கருவி களும், கற்களாலான அமைப்புகளும் மட்டுமே மிஞ்சும் என்பதை நம்மால் தெளிவாகவே புரிந்து கொள்ள இயலும். சில கற்களாலான அமைப்பு களையும், வேலைப்பாடுகளையும் நோக்கி விட்டு, அந்த மக்களை வளர்ச்சியடையாத நாகரீகங் களை கொண்டவர்கள் என்றும் கற் களை கொண்டு மட்டும் பயன்படுத்தும் தொழில் நுட்பத்தை அறிந்தவர்கள், மற்ற தொழில் நுட்பத்தை அறியாதவர்கள் என்று கூறுவது தர்க்க ரீதியாக ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல.

பரினாமவியலாளர்களின் கூற்றில் எந்த வித அறிவியல் கருத்தும் இல்லை. கண்டு பிடிப்பு களை எந்த வித எதிர்மறை எண்ணங்கள் இல்லா மல் அணுகுவோம் என்றால் உண்மைக்கு அருகில் நெருங்க இயலும். ஒருவேளை நூறாயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த சமூகங்கள் மரத்தாலான வீடுகளில் வாழ்ந்திருந்தாலும், கண்ணாடி கதவுகளை கொண்ட மாளிகைகளை கட்டியிருந்தாலும், கவரக்கூடிய அலங்காரப் பொருள்களை பயன்படுத்தியிருந்தாலும் கூட, காற்று, மழை, பூகம்பம் மற்றும் வெள்ளப் பெருக் கினால் அவர்கள் பயன்படுத்தியிருந்தவற்றில் மிக சிறிதே மிஞ்சும் என்பது உண்மை. இயற்கை சீதோசன நிலையின் படி, மரத்துண்டுகள், கண்ணாடி , காப்பர். வெண்கலம் மற்றும் பிற உலோகங்கள் தோராயமாக 100 அல்லது 200 வருடங்களில் சேதமுற்றுவிடும். அறைக்கலன் களில் சில வற்றையே மிஞ்சும். சேதமடை வதற்கு அதிக நாட்கள் எடுத்து கொள்ளும் கற்கள், கற்தூண்கள் மட்டுமே மிஞ்சும். அதன் பின் சில காலங்களில் இவையும் சிறு சிறு துண்டுகளாக உடைந்துவிடும்.



எனவே உடைந்த இந்த கற்துண்டுகளை வைத்துக் கொண்டு அதைப் பயன்படுத்திய மக்களின் வாழ்க்கை முறையை பற்றி விளங்கி கொள்வது சரியானதா? அவர்களின் சமூக உறவுகள், நம்பிக்கைகள், ரசனைகள் மற்றும் கலையின் மீதுள்ள புரிந்துணர்வை நம்மால் எதைக் கொண்டும் விளக்கிட இயலாது. எனினும் பரினாமவியலாளர்கள் தங்களுடைய கற்பனை யான விளக்கங்களை கண்டுபிடிப்புகளுடன் சேர்த்து புதிய தொகுப்புகளை உருவாக்குகின்ற னர். உண்மைகளை திரித்து கற்பனைகளை கூறும் இவர்களின் கூற்றுகளை இவர்களே விமர் சனமும் செய்துள்ளனர். இந்த அணுகு முறைக்கு இவர்கள் கொடுத்த பெயர் “Just so Stories”

**- இன்ஷா அல்லாஹ் தொடரும்**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor **M. GULAM MOHAMED,** Printed by M. Gulam Mohamed at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.